126

...rised by the Director of Public Instruction, Madras,
...for use in Schools under Public Management also.

SEVENTH READER

(TAMIL)

ஏழாம் பாட புத்தகம்

(எட்டாம் வகுப்பு)

BY
C. R. NAMASIVAYA MUDALIAR,
Lecturer in Tamil, Queen Mary's College, Ma...as.

4-OCT 1923

MADRAS:
C. COOMARASAWMY NAIDU & SONS
1923
[Price 8 As.

JS
031,6'80
N23
180860

...E TEXT-BOOK COMMITTEE

ஏழாம் பாட புத்தகம்

(எட்டாம் வகுப்பு)

மேரி யரசி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1923

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 8 அணா

Printed at
the 'Caxton Press
Madras.

முகவுரை

இப் பாட புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களுள், 'கண்ணகி' என்னும் பாடம், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் அவர்கள் எழுதியது. 'தருமிக்குப் பொற்கிழியளித்தது, கீரனைக் கரை யேற்றியது' என்னும் இரண்டு பாடங்களும், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய திருவிளையாடற் புராண வசனத்தினின்றும் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றின்பொருட்டு அப் பெரியார்க்கு என்றும் மறவா நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். சில பாடங்கள், 'ஜனவிநோதினி' என்னும் பத்திரிகையினின்றும் எடுத்து அமைத்துக்கொள்ளப்பட்டன.

2. 'மனோன்மணி' என்னும் பாடம் திருவநந்தபுரம் காலேஜில் புரொபசரா யிருந்து காலஞ் சென்ற, சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றி வெளிப்படுத்திய 'மனோன்மணியம்' என்னும் நாடகத்தின் சரித்திரச் சுருக்கமாகும். இவர் மாட்டும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

3. பாடங்களில் ஆங்காங்கு, நீதிவாக்கியங்களும், பழமொழிகளும், கட்டுரைச் சொற்களும், மரபுச் சொற்களும் சமய நோக்கி யமைக்கப்பட்டுள்ளன.

4. உபாத்தியாயர்கள் பாட புத்தகங்களுக்குக் குறிப்புப் புத்தகங்களை உபயோகிக்கும் முறையை முற்றும் நீக்கக் கருதியே செய்யுட் பாடத்திற்கு அரிய குறிப்புக்கள் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

கா. நம.

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	கடவுள்	1
2.	அற்பம் அற்பம் அன்று	7
3.	வறுமையிற் செம்மை — I	12
4.	எறும்பு	18
5.	கண்ணகி	29
6.	பூமி கற்பிக்கும் நீதிகள்	44
7.	வறுமையிற் செம்மை — II	53
8.	மனோன்மணி	61
9.	மின்வாங்கிகள்	73
10.	வறுமையிற் செம்மை — III	77
11.	நிலக்காற்று, கடற்காற்று உண்டாவது எப்படி?	82
12.	சுவபாஷையை அலட்சியஞ் செய்தல்	86
13.	அடக்கமுடைமை	96
14.	வறுமையிற் செம்மை — IV	101
15.	ஸர் ஐஸக் நியூட்டன்	107
16.	தருமிக்குப் பொற்கிழி யளித்தது	116
17.	கீரனைக் கரையேற்றியது	120
18.	கீரிப்பிள்ளையைக் கொன்றது	123

I.	நீதிநெறி விளக்கம்	125
II.	சகலகலாவல்லி மாலை	130

ஏழாம் பாட புத்தகம்

1. கடவுள்

கடவுள் என்னும் சொல், செய்யுள் விக்குள் என்பவற்றைப்போல, உள் விகுதி பெற்ற தொழிற் பெயராம். கடவுள் என்பதற்குக் கடத்தல் என்பது பொருள்; அது தொழிலாகு பெயராய், மனமொழி மெய்களைக் கடந்து நிற்குந் தனிப்பெரும் பொருளுக்குக் காரணக் குறியாய் வழங்குவதாயிற்று.

2. கற்றுவல்ல பெரியோர் கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் காட்டி உரைப்பர். கடவுள், திணை பால் இடம் முதலிய இலக்கண வரம்பைக் கடந்து, அடி நடு முடி வின்றி, எந்நாளும் மெய்யறிவோடு விளங்கும் மேன்மையுடையவர். அவர், எல்லாம் உணர்ந்து, எங்கும் நிறைந்து நிற்பவர். அவர் அறிய முடியாத செய்தியும், அவர் ஆற்றலில் அமையாத செய்கையும், அவர் பார்வையிற் படாத பண்டமும் உலகில் ஒன்று உண்டோ! அவர் அண்டங்களை அணுக்களாகவும், அணுக்களை அண்டங்களாகவும் மாற்றவல்ல ஆற்றல் உள்ளவர்.

3. இப் பிரபஞ்சம் அனைத்தும் அவருக்குச் சிறிய தோர் இல்லமாம்; இந்த இல்லத்திற்கு அண்டகோ-ளகையைச் சுவர்களாகவும், ஆகாயத்தை விதானமாக-வும் அமைத்துள்ளார். இதனை, அப் பரமபிதா, தம் மக்களாகிய உயிர்கள்பொருட்டே அமைத்தருளினர். இவ்வீட்டிற்குச் சூரிய சந்திரரை விளக்கங்களாகவும், நிலை நீர்க்கடலை நீர்க்குடமாகவும், பலவகைப்பட்ட பண்டங்களையும் கனிகளையும் கந்த மூலாதிகளையும் உணவுப் பொருள்களாகவும் அமைத்திருக்கின்றனர்.

4. கைம்மாறு கருதாது மழையைச் சொரியும் கார்முகிலேபோல், ஆன்மாக்களிடத்து ஏதும் எதிர் பாராது, அனைத்தையும், அவ் வுயிர்களின்பொருட்டு அமைத்தருளிய கருணாநிதியாகிய அக் கடவுளுக்குக் கைம்மாறாக நாம் செய்யக்கூடியது யாதேனும் ஒன்று உண்டோ ?

'பொன்னாற் பிரயோசனம் பொன்படைத்
தாற்குண்டு பொன்படைத்தான்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங்
கேதுண்டத் தன்மையைப்போல்
உன்னாற் பிரயோசனம் வேணதெல்
லாமுண்டு உன்றனக்கிங்
கென்னாற் பிரயோசனம் ஏதுண்டு
காண்கச்சி ஏகம்பனே'

என்று பட்டினத்தடிகள் கூறியவாறே, நாம் அப் பெருமானுக்கு இயற்றும் உதவி ஏதும் இல்லை; ஆயி-னும், அவரை எக்காலத்தும் வணங்கி வழிபடுவதே நமக்கு இன்றியமையாக் கடமையாகும். அன்றியும், அவர் விதித்தவற்றைச் செய்தலும், விலக்கியவற்றைச் செய்யாது ஒழிதலுமே அவர்க்கு நாம் இயற்றக் கூடிய உதவியென்று உரைக்கலாம்.

5. அறப்பெருங் கடலாகிய அக்கடவுளது சீர்த்திகள் எல்லாவற்றையும் எடுத்துரைப்பது எவர்க்கும் எளிமை யன்று : இதனை,

'விலகரும் அருளின் மீக்கூர்
விமலனை வாழ்த்த வேண்டின்
அலகில்பல் யுகங்க ளேநம்
ஆயுளாய் மும்மைத் தாய
உலகமோ ருடம்பாய் அந்த
உடம்பெலாம் வாயாய் நித்தம்
பலகவி மாலை சூடிப்
பரவினும் முடியும் கொல்லோ'

என்னும் செய்யுளின் கருத்தால் உணரலாகும்.

6. இஃது இவ்வாறாக, சிலர், தாந்தோன்றித் தம்பிரான்களாய், 'தெய்வ மென்பது சுத்த சூனியம்; இல்லாத ஒன்றை உண்டென நம்பி எந்நாளும் இடர்ப்படுவதே கடவுள் உண்டென்பார் கண்ட பலன்; கடவுளைக் கண்டவர் யாவர்?' என விதண்டாவாதம் பேசி, நாத்தழும்பேறி அலைந்து திரிவர். இவர்கள் நாஸ்திகர் எனப்படுவார்; தெய்வ நிச்சயமுள்ளோர் ஆஸ்திகர் எனப்படுவார்.

7. ஆஸ்திகரிற் சிலர், நாஸ்திகர் கேட்கும் வினாக்களுக்கு விடை கூறத் திறனற்று, அவரது மாயவலையிற் சிக்குண்டு மயங்குகின்றனர். ஆதலால், கடவுள் ஒருவர் உண்டென்பதனைச் சில பிரமாணங்களால் இங்கே விளக்குவோம் :

8. கடவுளைக் கண்டவர் எவரும் இலர் என்பது உண்மையே. கடவுளைப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் காண்பது கூடாது. ஆயினும், அவரை அனுமானப்

பிரமாணத்தால் அறிதல் கூடும். புகையைக் கண்ட இடத்து நெருப்பு உண்டென்று தெளிவதுபோல, பிரபஞ்சத்தையும் அதில் அமைந்துள்ள சராசரங்களையும் கண்டு, இவற்றை யெல்லாம் படைத்த தலைவர் ஒருவர் உண்டெனத் தெளிதல் வேண்டும். ஒரு சிறிய வீடும் தானே அமையாதென்றால், இத்தகைய பெரிய பிரபஞ்சம் தானே அமைந்திருக்கும் என்று எண்ணுவது எவ்வளவு பேதைமை! அன்றியும்,

சந்திரசூ ரியர்உடுஅந் தரமதில்எந் நாளும்
தத்தமுறை வழுவாது கோட்புறுத லானும்
கந்தரம்வா ரியின்மோண்டே பொழிதருத லானும்
கடல்தன்எல் லையைமீறிக் கடவாமை யானும்
செந்தழல்மா ருதமீறிச் செனியாமை யானும்
திகழ்காலம் பலவிதமாய்ச் சேர்ந்துறுத லானும்
மந்திரத்தாற் பாம்பாதி வசமாகை யானும்
மன்னுயிர்பா ரம்பரைமா றுதுரைத லானும்'

கடவுள் ஒருவர் உண்டெனத் தெளிதலே நமக்குக் கடப்பாடாகும்.

9. இனி, இவையனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி, ஆஸ்திகனது கொள்கையையும், நாஸ்திகனது கொள்கையையும் கண்டு சீர்தூக்கி, அவற்றுள் ஏற்றமுடைய பக்கத்தில் நாம் இயைந்து ஒழுகுவோமாக.

10. ஆஸ்திகன், பெற்றோர்க்கு அடங்கி நடக்கும் பிள்ளைபோல, கடவுளுடைய ஆணையைக் கடவாது, விதிவிலக்குகளை யறிந்து நடப்பான். நாஸ்திகனோ, பெற்றோர்க்கு அடங்காத பிள்ளையேபோல், விதி விலக்குகளைச் சிறிதும் கவனியாது, கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனத் திரிந்தலைவான். இவ்

-விருவருள் நாஸ்திகன் எண்ணியவாறு கடவுள் ஒருவர் இல்லா தொழியின், விதி விலக்குகளை அறிந்து நடந்த ஆஸ்திகன் அடையும் துன்பம் ஒரு சிறிது மில்லையாம். ஆஸ்திகன் கருதியவண்ணம் கடவுள் ஒருவர் உண்டாயிருந்தால், விதி விலக்குகளை அறிந்து நடவாத நாஸ்திகன் கதி யாதாகும்! அந்தோ, அவன் சதி அதோகதியே யன்றோ! அதனால், கடவுள் உண்மை, இன்மை ஆகிய இரண்டிடத்தும், ஆஸ்திகனே நன்மையடையும் நலமுடையவனாகின்றான்; ஆதலின், இருபாலும் இன்ப மடைதற்கு இடமாகிய ஆஸ்திக மார்க்கத்தினையே நாம் என்றும் கடைப்பிடித்து இன்பமடைந்து உய்வோமாக.

11. இனி, ஆன்மாக்கள் எண்ணியவாறே கருமங்கள் முடிவு பெறாமையின், அவ்வக் காரியங்களை அவ்வவ்வுயிர்களின் வினைகளுக்கேற்ப முடித்து வைக்க வல்ல முழுமுதற் கடவுள் ஒருவர் உண்டென்றே நாம் தெளிதல் வேண்டும். அதை நன்கு விளக்கும் வரலாறு ஒன்றை ஈண்டுக் கூறுவோம்:

12. வேட்டையாடி வயிறு வளர்க்கும் வேடுவன் ஒருவன், ஒரு நாள் காட்டை யடைந்து, தன் எதிரிற் பட்ட யானையொன்றை எய்யுமாறு ஒரு புற்றின் அருகில் மறைந்திருந்தான். யானை அப் புற்றைக் குறுகினவுடன், வேடன் குறி பார்த்து, அதனை ஓர் அம்பினால் எய்து கொன்றான். அம்பு எய்யுங் காலத்து அவன் காலடி யுறுத்தியதனால் நோவுற்ற அரவம் ஒன்று அவன் அடியில் தீண்டிற்று. தீண்டலும், வேடன் கோபங் கொண்டு அப் பாம்பையும் ஓர் அம்பினால் எய்து கொன்றான். பின்னர், சிறிது போழ்தில் விஷந் தலைக்கேற, அவனும் அங்கே இறந்து கிடந்தான்.

13. இவ்வாறு அங்கு இறந்துபட்டுச் சவமேயாகி விழுந்து கிடந்த யானை, வேடன், பாம்பு ஆகிய அம் மூன்றையுங் கண்ட நரியொன்று அண்மையில் வந்து, 'ஆகா, நமக்கு இது நற்கால மாயிற்று! நன்மை நேரிட்டால், நரி முகத்தில் விழித்தனையோ? என்பர் மானிடர்; நமக்கே இவ்வாறு நற்பயன் கிடைப்பதா-பின், நாம் எவர் முகத்தில் விழித்ததாக எண்ணுவது' என்று வியந்து தன்னுள் மகிழ்ச்சியடைந்தது. பிறகு அது அப் பிணங்களைப் பார்த்து, இவை நமக்கு நெடுங் காலத்திற்கு உணவாகும்; ஆயினும், இன்று நமக்கு விரததின மாதலால் மாமிசபக்ஷணம் செய்யலாகாதே! நாளை முதலாக இவற்றை நன்கு அருந்தலாம்; இன்று என்ன செய்வது? பசிப் பிணியை யொழிப்பதற்கு வேறொன்றையுங் காணோமே' என்று எண்ணி, முடி-வில், 'இன்று இவ் வில்லின் நாணையாயினும் கடித்துப் பசியாறுவோம்; பல்லைசைந்தால் பசியாறும் அன்றோ?' என்று நினைத்துக்கொண்டே நாணின் முனையை நறுக்கெனக் கடித்தது. கடித்தலும், அவ் வில்லின் முனை விரைவில் நிமிர்ந்து நரியின் கழுத்திற் குத்தவே, அது-வும் உயிர் துறந்து அப்பால் விழுந்தது.

'கரியொரு திங்க ளாறும் கானவன் மூன்று நாளும்
இரிதலைப் புற்று நாகம் இரண்டுநாள் இரையா மன்றே
விரிதலை வேடன் கையின் விற்குதை நரம்பைக் கவ்வி
நரியனார் பட்ட பாடு நாளைநாம் படவே நிற்போம்.'

14. இதனால், ஆன்மாக்கள் எண்ணியது எண்-ணியவாறே முடிவு பெறாமையால், 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் உண்மை நமக்கு நன்கு விளங்குகின்றதன்றோ?

2. அற்பம் அற்பம் அன்று

இவ் வுலகத்தில் அநேகர் அற்பங்கள் என்று எண்ணி, அநேக வஸ்துக்களை அலக்ஷ்யம் செய்து விட்டுவிடுகிறார்கள். ஆய்ந்து ஓய்ந்து பார்த்தால், அற்பமானது என்று இகழத் தக்கது இவ்வுலகில் ஏதும் இராது. அற்பமானவை யென்று சில பொருள்களிடத்து நமக்கு அவமதிப்புத் தோன்றுமாயின், முன்னிருந்த அறிஞர் அநுபவித்துச் சொல்லியுள்ள ஆப்த வசனங்களை நினைத்துப் பார்த்து, நாம் கொண்ட எண்ணத்தை மாற்றிக்கொள்ள முயலவேண்டும்.

2. சிறந்த சிற்ப சாஸ்திரி ஒருவர், தாம் வார்த்த ஒரு பிரதிமையில் ஒரு பாகத்தைத் திருத்திக்கொண்டு இருக்கும்பொழுது, அவரது நண்பர் ஒருவர் அவரைப் பார்த்து, 'இதென்ன, இந்த அற்பத்தை ஒரு பெரிய காரியமாகச் செய்துகொண் டிருக்கிறீரே?' என்று கேட்டார். அதற்கு அந்தச் சாஸ்திரி, 'நீர் சொல்வது சரிதான், ஆயினும், "பலதுளி பெரு வெள்ளம்" என்றபடி, அற்பமான பல பரமாணுக்கள் சேர்ந்தன்றோ ஒரு பெரு மலை யாகிறது; அப்படியே அற்பமான பல காரியங்கள் சேர்ந்தே ஒரு பெருங் காரியம் ஆகின்றது; ஆனபிறகு, அந்தப் பெருங் காரியத்தை அற்பமென்று எண்ண இடமுண்டோ?' என்று விடை கூறினாராம்.

3. நெசவு வேலையில் அமர்ந்து கூலிவேலை செய்திருந்த ஒருவர், ஒரு தனவானுடைய வீடுகளில் ஒன்றை, அதிலுள்ள சகல சாமான்களோடும், விலைக்கு வாங்கினார். அப்போது அவர் பட்டியிற் குறித்துள்ளபடி பொருள்கள் அனைத்தும் சரியா யிருக்கின்ற-

னவா என்று சோதனை செய்து பார்க்கையில், சிறிய கைப்பெட்டி யொன்று அங்கே காணுமலிருந்தது. வீட்டை வாங்கினவர் அதைப்பற்றி அக் கனவானைக் கேட்டனர். அவர், 'ஆம், அது மெய்தான், நான்தான் அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு போகும்படி கட்டளையிட்டேன்; அதனுலென்ன, இவ்வளவு பெரிய வியாபாரத்தில் நீர் இப்படி அணுவும் விடாமல் கணக்குப் பார்ப்பீர் என்று நான் நினைக்கவில்லை' என்றுர். வீடு வாங்கினவர் அதைக் கேட்டு, 'பிரபுவே, நான் இவ்வளவு காலமாகச் சிறிதளவும் சோரவிடாமல் பூராயமாய்ப் பார்த்திராவிட்டால், இந்த வீட்டைத் தங்களிடம் வாங்கக்கூடிய நிலைமை எனக்கு ஏற்பட்டிராது; தமக்கு இஷ்டமானுல் இன்னெரு வார்த்தையும் சொல்லத் துணிகின்றேன், என்மேல் சீற்றங் கொள்ளாமல் கேட்கவேண்டும். தாங்களும் இப்படியே அற்ப மென்று எந்தப் பொருளையும் அலக்ஷியஞ் செய்யாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டு வந்திருந்தால், இப்போது இந்த வீட்டை விற்கவேண்டிய நிலைமை தமக்கும் நேர்ந்திராது' என்று அதிவினயமாய்க் கூறிஞராம்.

4. அறிவிற் சிறந்த பெரியோரெல்லாம் அரிய காரியங்களிலேயே ஈடுபடுவர். அவர்கள் அற்பமான காரியங்களைக் கவனிக்கவே மாட்டார்கள் என்பது சாமானியர் கருத்து. அரிய விஷயங்களைக் கண்டு பிடித்த அறிஞர் கருத்தோ அதுவன்று. அவர்கள் ஆரம்பத்தில் அற்பமான விஷயங்களையும் ஊன்றிப் பார்த்து ஆராய்ச்சி செய்த சிறந்த அறிவே, பின்பு அரிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் பேரறிவைப் பெறுவதற்கு ஆதாரமாக இருந்தது. சாமானியர்

கண்ணுக்கு எந்தப் பொருளும் இருள் மூடியதாகத் தோன்றும்; அறிஞர் கண்ணுக்கோ ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு புதுமை விளங்கிக் காணும்.

5. கடிகாயந்திரத்தில் கால அளவு சரியாக ஏற்படுவதற்காகப் 'பெண்டுலம்' என்னும் கருவியைத் தொங்கவிடவேண்டும் என்று கலிலேயோ என்பவர் அறிந்துகொண்டது, பைசா நகரத்துச்கோயில் மண்டபத்தில் கட்டித் தொங்கவிட்டிருந்த விளக்கைப் பார்த்ததினாலேதான். ஒருநாள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது வழியில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு சிலந்திக் கூட்டைக் கண்டதினாலேதான், ஸர் ஸாமுயல் பிரௌன் என்பவருக்கு அதேவிதமாக ட்வீட் என்னும் ஆற்றின்மேல் தொங்குபாலம் கட்ட வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. மிகவும் அற்பமான கடற்பாசி கடலில் மிதக்கக் கண்டதுதான், கோலம்பஸ் என்பவர் அமெரிக்கா கண்டம் வெகு சமீபத்தி லிருக்கிறதென்று உறுதியாகச் சொல்லி, கப்பற் சேனையில் உண்டான குழப்பத்தைத் தணிப்பதற்கு ஆதாரமாயிற்று.

6. ஊன்றிப் பார்க்கத் திறமையற்று மேற்புல்லை மேய்கிறவன் ஒரு பெருங் காடெல்லாம் போய்ச் சுற்றினாலும் ஒரு விறகுக்குச்சிகூடக் கண்டெடுத்துக் கொண்டு வரமாட்டான். ஊன்றிப் பார்க்குந் திறமையுடையவன், தான் பார்ப்பது எவ்வளவு அற்பமாக இருந்தாலும் அதிலும் ஒரு புதுமையைக் கண்டுகொள்வான். 'சாதாரணமான மனிதர்கள் ஒரு சிறந்த உப்பரிகையைப் பார்த்து எவ்வளவு தெரிந்துகொள்வார்களோ அதைவிட அதிகமாகவே சிலர் ஒரு சிறு

குடிசையைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுவார்கள்' என்று ஒரு வித்துவான் சொல்லியிருக்கிறார்.

7. முதலில் அற்பமாகத் தோன்றுகின்ற எண்ணங்களும் செய்கைகளும் பிறகு நாம் ஒருபோதும் எதிர்பாராத நன்மைகளையோ தீமைகளையோ விளைவிக்கின்றனவல்லவா? ஒருவனுடைய வாய்ப் பேச்சினால் மற்றொருவனுக்கு எவ்வளவு பெரிய நன்மையுண்டாக்கக் கண்டிருக்கிறோம்! அப் பேச்சுக் கெட்டதாயிருந்தால், அதனால் மிகப் பெரிய தீமையும் உண்டாகக் கண்டிருக்கிறோமன்றோ!

8. ஆக்ஸ்பர்டு மாகாணத்தில் உள்ள வித்தியாசாலை ஒன்றில் ஒரு கடிகாயந்திரத்தில், காலத்தைக் கொல்வது கொலையாகாது என்று நினைத்திருப்பவர்களுக்கு எச்சரிக்கையாக, 'நாழிகை வீணாகக் கழிந்து, அந்தக் குற்றத்தை நம் மேல் சார்த்துகிறது' என்னும் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அதைப் பார்த்தால், 'இஃது ஒன்றையும் ஆரம்பிக்கத் தருணமன்று; இஃது ஒன்றையும் முடிக்கத் தருணமன்று' என்று சொல்லி, நாம் ஒவ்வொரு நிமிஷமாகக் காலத்தை வீண் போக்குவது காலக்கொலை யென்று தோன்றவில்லையா?

9. முற்காலத்திலிருந்த அறிஞர் பலர் தாம் காலை மாலையில் உலாவும்போதும், தொழில் செய்யுங்காலத்தில் அவ்வப்போது ஒழிவு நேரும்போதும், வெளியே யாத்திரை செய்யும்போதும், தமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு நிமிஷத்தையும் வீண்போக்காமல், பல பெருங் காரியங்களைச் செய்து முடித்திருப்பதாக அறிகின்றோம். போஜனத்திற்காக ஒரு நிமிஷம் காக்க-

வேண்டி யிருந்தால் அநேகர்க்கு உடனே பெருங் கோபம் உண்டாகும். ஒரு வித்துவான் அப்படிச் சாப்பாட்டு வேளையில் கிடைத்த ஒழிவுநேரத்திலேயே ஒரு சிறந்த புத்தகத்தை இயற்றியிருக்கிறார். மாஸன் என்னும் வைத்தியர் ஒரு நோயாளியின் வீட்டிலிருந்து மற்றொரு நோயாளியின் வீட்டுக்குப் போகும் தருணத்தில் 'லுக்ரீஷஸ்' என்னுங் கிரந்தத்தை மொழிபெயர்த்ததாகவும், டாக்டர் டார்வின் என்பவரும் அவ்வாறே அநேக கிரந்தங்கள் செய்ததாகவும், ஹேலி என்பவர் தமக்குக் கீழுள்ள உத்தியோகஸ்தர்களை மேல் விசாரணை செய்யச் செல்லுங் காலத்தில் தம் அபிப்பிராயங்களை யெல்லாம் சேர்த்து எழுதியதாகவும், எலியூ என்பவர் வயிற்றுப் பிழைப்புக்காகக் கருமார வேலை செய்துகொண்டே அநேக பாஷைகளை அப்பியசித்ததாகவும், இவ்வாறே இன்னும் அநேகர் அநேக அரிய காரியங்களை நிமிஷ நிமிஷமாகக் கிடைத்த ஒழிவு வேளைகளில் செய்து முடித்ததாகவும் அறிகிறோம். இப்படிப்பட்ட அருமையான நிமிஷங்களை எல்லாம் அற்பம் என்று இகழ்ந்து அலக்ஷியம் செய்து வீணாக்குவது நியாயமாகுமா?

10. 'இந்த நிமிஷத்தில் என்ன செய்கிறது? இந்த நிமிஷத்தில் என்ன முடிக்கிறது?' என்று சொல்லி, அநேகர் நிமிஷம் நிமிஷமாகக் காலத்தை வீணாக்கி, சரீரத்தையும், மனத்தையும் சோம்பலுக்கு உட்படுத்தி, துருப்பிடிக்கச் செய்துகொள்வது போலவே, அநேகர் அதிகமாக உழைத்து, உடலையும் மனத்தையும் அதிகமாகக் கரைத்துக்கொள்ளுகிறார்கள். நாம் செய்ய வேண்டிய காரியங்களுக்குக் காலத்தை வகையாக ஒழுங்குபடுத்தி வைத்துக்கொண் டிருப்பது,

நமது பொருள்களைப் பத்திரமாக ஒரு பெட்டியிற் பூட்டிக் காப்பாற்றி வைத்துக்கொண் டிருப்பது போலாம். பொருளைச் சீராகக் காப்பாற்றிக்கொண் டிருப்பவன் மிக்க நன்மை அடைவான் என்பது யாவர்க்கும் தெளிவாகத் தெரிந்ததுதானே.

11. அதிசமர்த்தரும் எள்ளளவு பிசகுவதனால், தாம் எடுத்த காரியத்தைப் பெரும்பாலும் சாதித்தும், கடைசியில் ஜயம் பெறுமற் போகிறார்கள். பரீக்ஷையில் விடை எழுதுகிற பிள்ளைகள், கேள்விகளுக்குக் கூடிய வரையில் நன்றாகப் பதில் எழுதியும், ஒன்று இரண்டு 'மார்க்' குறைந்துபோவதனால், பலன் அடையாமற் போகின்றனர். ஆகையால், நாம் இப்போது அற்பங்களென்று நினைத்துக்கொண் டிருப்பவைகளே நமக்குப் பெருமையும், சிறுமையும் உண்டாக்குகின்றன. முன் இருந்த அரிய பெரிய அறிஞர்களைப் போலவே, நாமும் அற்பம் என்று ஒரு பொருளையும் அலக்ஷியஞ் செய்யாமல், கவனத்தோடு பார்த்து வருவோமானால் அதனால் நமக்கு எந்நாளும் நன்மையே உண்டாகும்.

3. வறுமையிற் செம்மை — I

'நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ
　　நிறைநெடு மங்கல நாணோ
இலகுநன் மார்பில் ஆரமோ உயிரின்
　　இருக்கையோ மலர்மகட் கினிய
மலர்கோலோ மாயோன் மார்பின்நன் மணிகள்
　　வைத்தபோற் பெட்டியோ வானோர்
உலகின்மேல் உலகோ ஊழியின் இறுதி
　　உறையுளோ யாதேன உரைப்பாம்'

என, எத்திசையோரும் வியந்து கூறுஞ் சிறப்பினை யுடையது வடமதுரை யென்னுந் திருப்பதி. இது, காசி, காஞ்சி, துவாரகை, அவந்தி, அயோத்தி, மது-ரை, மாயை என்னும் முத்தி நகரங்கள் ஏழில் ஒன்றும். இந்த நகரம் இப்பொழுது மட்ரா என்னும் பெயரினால் வழங்குகின்றது.

2. மதுராபுரி மற்றை நகரங்களினுஞ் சிறந்து விளங்கியதேபோல், அந்த நகரவாசிகளும் மற்ற நகர-வாசிகளினுந் தூய்மையராய்ச் சிறந்து விளங்கினர். அவர்கள் தம் வாணாளை வீணாளாக்காமல், நன்னெறி-யைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தனர்.

3. அந் நகருக்கருகில் அழகிய அரணியம் ஒன்று இருந்தது. அங்கு, மா பலா முதலிய பழமரங்கள் தளிர்த்துத் தழைத்து, பூத்துக் காய்த்துக் கனிந்து, சூரிய கிரணங்கள் பூமியிற் பரவாவண்ணம் செறிந்து விளங்கின. அந்தச் சூழலில், பாவமாகிய கடலைக் கடந்து, முத்தியாகிய கரையிற் சேர விரும்புவோர், தவமாகிய மரக்கலத்தைத் திகைப்பின்றி நடத்துவ-தற்கு ஓங்கி நிற்கும் கலங்கரை விளக்கமேபோல் நெடுங் குன்றம் ஒன்று நிலைத்து நின்றது. அதன் சார-லில், யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப்பற்-றுக்களை அறவே யொழித்த அருந்தவத்து அந்தணர் சிலர் பர்ணசாலைகள் அமைத்துக்கொண்டு தம் மனைவி மக்களோடு வசித்திருந்தனர்.

4. அம் முனிவர்களுள் சுதாமா என்பவர் ஒரு-வர். அப் புனிதர், அரிய விரதங்களை அனுஷ்டித்து, எலும்புகள் அனைத்தையும் எண்ணிடக் கூடியவாறு மிகவும் இளைத்த யாக்கையை யுடையவர். அப்பெரி-

யார் சிதைந்த வஸ்திரத்தை உடுத்துக்கொண்டிருந்த காரணத்தால், கண்டவர் அனைவரும் அவரைக் 'குசேலர்' எனக் கூறத் தலைப்பட்டனர்; அதனல், அவருக்குக் குசேலர் என்பதே காரண இடுகுறியாய் வழங்கலாயிற்று.

5. தவத் துறையில் படிந்து, இன்பக் கடலில் மூழ்கிவருங் குசேல முனிவர், தமது தவத்திற்கு வேண்டிய குற்றேவல்களை மனவாட்டமின்றிச் செய்ய வல்லவர் ஒருவர் வேண்டுமென விரும்பினர். அவ்வாறு செய்ய வல்லவள் மனைவியே யாவள் எனத் தேர்ந்து, அன்னை தயையும், அடியாள் பணியும், பொன்னின் அழகும், புவியின் பொறையும் முதலிய நற்குணங்கள் பலவும் ஒருங்கே அமையப்பெற்ற சுசீலை என்னும் பெண்மணியைப் பெரிதும் விரும்பி மணந்து கொண்டனர் அம் மாதரசி,

'மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள் கோண்கன் நினைப்பறிந் தொழுகு நீராள்
தேசுரு வாய்மை யுள்ளாள் சினந்திடல் என்றும் இல்லாள்
பேசுதிண் கற்பு வாய்த்தாள் பெற்றதே கொண்டு உவப்பாள்.'

இத் தன்மை வாய்ந்த அப் பெண்மணியோடு குசேலர் கூடி இல்லறம் நடத்திவரும் நாட்களில், அவர் தம்மனைவியை நோக்கி, 'பெண்ணே, சுசீலா, புத்திரப் பேற்றை அடையப் பெறாதவர் முத்தியை அடையார் என்பது வேதப் பிரமாணம். இல்லறத்திற்குப் புத்திரப்பேறே சிறந்த ஆபரணமாகும் எனப் பெரியோர் கூறுவர்' என்று அவ்வப்போது சொல்லி வந்தனர். பின்பு, அவர் தாம் விழைந்தவாறே அவர்கட்குப் புத்திரப்பேறு கிடைத்தது. அப்புத்திரப்பேறு, ஒருவர் இருவரோடு அமையாமல், அசுவினி முதலிய

நக்ஷத்திரங்களேபோல், இருபத்தேழுக்கு இலக்கமாகி-விட்டது.

6. இவ்வுலகில் செல்வத்தாற் சிறந்த சீமான்கள் மனமகிழும்வண்ணம் ஒரு புதல்வனையேனும் அடை-யப் பெறாமல் வருந்தி நிற்கவும், நித்திய தரித்திரராகிய குசேல முனிவர் இருபத்தேழு புத்திரர்களைப் பெற்-றது பெருஞ்சிறப்பே யன்றோ! ஆயினும், 'ஐந்துக்கு மேல் அரசனும் ஆண்டி' என்னும் ஆன்றோர் வாக்கு அவலமாகாவண்ணம், அம் முனிவருக்கு அவர்களால் வறுமை நோய் மிகுவதாயிற்று.

7. குணக் குன்றாகிய குசேலர், அவ்வறுமையால் சிறிதும் குன்றாமல், செம்மனச் செல்வராய் விளங்கி யிருந்தனர். அவர், தாம் வசிக்கும் அகரத்திற்கு அருகிலுள்ள காட்டகத்திற் சென்று, ஆங்கே உதிர்ந்து கிடக்கும் ஒருவகைப் புல்லரிசியை அரிதிற் சேர்த்து, அகத்திற்குக் கொண்டு வருவார். 'பெற்றதே பாக்கி-யம்' என்று எண்ணும் அவர் மனைவி, தன் மணாளர் கொண்டுவரும் அந்த அரிசியை அன்புடன் ஏற்று, உரலிலிட்டு வெள்ளிதாகக் குற்றி, பாகஞ்செய்து, அதில் ஒரு பாகத்தை முதலில் அதிதிக்கு இடுவாள். பின்பு, தன் மணாளரை உபசரித்து உண்பிப்பாள். அம் முனிவர், தாம் உண்டது கால் வயிறே யாயினும், நிறைமனப்பட்டு, நெஞ்சம் மகிழ்ந்து, அவ் வுணவைத் தமக்கு அருளிய எல்லாம் வல்ல இறைவன் அடிகளை இதயத்திருத்தி, ஒரு புறத்தில் அமர்ந்து, யோகுசெய்-திருப்பார்.

8. முனிவர் வாழ்க்கை இவ்வாறாக, சுசீலை யென்-னும் அப் பெண்மணி, மிகுந்துள்ள கஞ்சியை ஒரு

மட்பாண்டத்திலிட்டு, அகப்பையால் முகந்து, தன் மக்களுக்கு வார்க்கப் புகுவாள்.

'ஒருமகவுக்கு அளித்திடும்போது ஒருமகவு
கைந்நீட்டும் முந்திமேல் வீழ்ந்து
இருமகவும் கைந்நீட்டும் மும்மகவும்
கைந்நீட்டும் என்செய் வாளால்
பொருமிஒரு மகவழும்கண் பிசைந்தழும்மற்
றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்தில் கிடந்தழும்மற் றொருமகவுஎங்
ஙனஞ்சகிப்பாள் பெரிதும் பாவம்.

'அந்தோஎன் வயிற்றெழுந்த பசியடங்கிற்
றில்லையென அழுமால் ஓர்சேய்
சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்குஅன்
னையெனப்போய் செப்பும் ஓர்சேய்
முந்துஆர்வத்து ஒருசேய்பிசை யப்புகும்போ
தினில் ஒருசேய் முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய்.'

இவ்வாறு தம்முள் கலகப்படும் சிறுவரைச் சுசீலை கண்டு ஏக்கங் கொண்டு, செய்வகை ஒன்றுந் தோன்-றாது திகைத்து நிற்பாள். பின்பு, ஒருவாறு தேறி, அம் மைந்தர்களைத் தன் செங்கரத்தால் அணைத்து, முகம் துடைத்து, முத்தாடி, உச்சி மோந்து, ஒருவாறு தேற்றி அனுப்புவாள்.

9. அன்னையின் முத்தம் அன்னத்தினும் சிறந்த-தாதலால், அச் சிறுவர் திருப்தியடைந்து மனம் மகிழ்-ந்து, தெருவிற் சென்று, தம்மை யொத்த சிறுவரோ-டுஞ் சேர்ந்து விளையாடத் தொடங்குவர். அப்போது, அயல் வீட்டுச் சிறுவன் ஒருவன், குசேலர் மக்களில் ஒருவனைப் பார்த்து, 'உமது வீட்டில் இன்று பதார்த்-

தம் என்ன ?' என்று வினவினன். பதார்த்தம் என்பது இன்னதென்று உணராத அப் பையல் விரைந்து வீட்டுக்குள் ஓடி, 'அம்மா, அயல் வீட்டுச் சிறுவன், "பதார்த்தம் என்ன ?" என்று கேட்டான், அதற்கு அர்த்தம் என்ன ?' என்ருன். அதைக்கேட்ட சுசீலை மனங் கசிந்து, 'ஐயோ ! பதார்த்தம் என்பது இன்னதென்று சொன்னல், அதைச் செய்து கொடு என்று கேட்குமே, அதற்கு என்ன செய்வது !' என்று எண்ணி, அப்பிள்ளையை நோக்கி, 'குழந்தாய், அதை யானும் அறியேன்' என்று சொல்லி, ஒருவாறு தேற்றி யனுப்பினள்.

'வேறுமனைச் சிறுன் அயின்ற பக்ஷணங்கண்டு
ஓடிவந்து விழிநீர் வாரச்
சீறுதல்இல் லாதஅன்னை முகம்பார்த்து
இன்னுன் இன்ன தின்ருன் என்வாய்
ஊறுதலால் இப்போழுதே செய்தளித்தி
யெனஉடுத்த உடைதொட் டீர்க்கும்
தேறுதல்இல் சிறுமகவை எடுத்துமார்
பிடைஅணைத்துச் சிந்தை நோவாள்.

குண்டலம்மோ திரம்கடகம் சுட்டிஅயல்
மனையார்தம் குழவிக் கிட்டார்
புண்டரிகக் கண்அன்னுய் எனக்குநீ
இடாதிருக்கும் போருமை என்னே
கண்டெடுத்துஇப் போதுஇடெனக் கரைமதலைக்கு
இல்லாதான் கடன்தந் தானுக்கு
எண்தபச்சோல் வார்த்தையென நாளைக்கு
நாளைக்கேன்று இயம்பிச் சோர்வாள்.

இப்படி ஒவ்வொரு குழந்தையும் ஓடி வந்து, தாயைத் தழுவி, 'அம்மா,

எனக்குப் பருப்பும் வெல்லமும் பரிந்து இடு ;
எனக்குப் பாலும் வெண்ணெயும் பகிர்ந்து கொடு;
எனக்குச் சித்திரப் பட்டுச் சிறக்கக் கட்டு'

என்று கேட்டுத் தொந்தரவு செய்யும்; அதற்கு அப் பெண்மணி, அமைவுடன் ஏற்ற விடை கூறி, இன் புறுத்தி அனுப்புவாள். இந்தப் பிள்ளைகள் படும் பாட்டைக் கண்ணாரக் கண்டும், முனிவர் சிறிதும் கவற்சி அடையவில்லை. அவ்வாறு தன் மணாளர் பராமுகமாய் இருத்தலைக் கண்டும், சுசீலை அவரிடத்து அணுவளவும் வெறுப்புக் கொள்ளவும் இல்லை. 'இல்லாளை இல்லாளும் வேண்டாள்' என்னும் முதுமொழி அவளிடத்தில் பழுதுபட்டது. ஆயினும், தான் அரிதிற் பெற்ற மக்களுக்கு உண்டாகும் பசிப் பிணியை எவ்வாறு ஒழிப்பது என்னும் எண்ணமட்டும் அவளது இதயத்தை விட்டு ஒருபொழுதும் ஒழிந்ததில்லை.

4. எறும்பு

இப் பூகோளத்தின் மேற்பரப்பெங்கும் எண்ணிறந்த ஜீவகோடிகள் நிறைந்திருக்கின்றன. அவற்றை யெல்லாம் எண்ணிக் கணக்கிடுவது எவர்க்கும் எளிதன்று. அவற்றை வகைப்படுத்தி யுரைப்பதும் அசாத்தியமே யாகும். அவற்றைப் படைத்த இறைவன் ஒருவனே அவற்றின் தொகையை எண்ணிட வல்லவனவன். உலகிற் காணும் உயிர்கள் தம் நிறம் வடிவம் முதலியவற்றில் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காண்கின்றன. இந்தியாவைப் போன்ற உஷ்ண தேசங்களில் பிராணிகளின் பெருக்கம் அதிகம். அவை அமிதமாகப் பெருகுங் காலத்தில் அங்கே வசிப்பவர்-

களுக்கு அவற்றின்மீது வெறுப்பும் பகையும் உண்டாக, அவர்கள் அவற்றைப் பலவகையினும் அழித்து ஒழிக்க முயல்கின்றனர்.

2. எறும்புகள், பெரும்பாலும், தாம் நிலத்தில் அகழ்ந்த சுரங்கத்தில் கூட்டங் கூட்டமாய் வசிக்கின்றன. எறும்பின் வாசஸ்தானம் வெவ்வேறு பாகங்களாகப் பிரிந்திருக்கும்: சாதாரணமாக எல்லா எறும்புகளும் ஒன்றுகூடி உலவவும், பெண் எறும்பு-



கள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கவும், அவற்றைக் காத்து வளர்க்கவும், வேறு எறும்புகள் வந்தால் தங்கவும் தனித்தனியே அறைகள் உண்டு. அன்றியும், தானியங்களைச் சேமித்து வைப்பதற்கான பண்டசாலைகளும் அதில் அமைந்திருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் தொடர்ந்து செல்ல வழிகள் உண்டு.

3. எறும்பின் வாழ்க்கையையும் தன்மைகளையும் உய்த்துணர ஆர்வங்கொண்டு ஆராய்ந்து பார்த்த

அறிஞர் ஒருவர், எறும்பில் ஆயிரம் வகைகளுக்கு அதிகமாகவும் இருப்பதைக் கண்டறிந்திருக்கின்றனர். அவற்றுள் நம் இந்தியா தேசத்தில் நூற்றுக் கணக்கான வகைகள் உண்டென்று உரைக்கின்றனர்.

4. எறும்புகள் கோடைக்காலத்தில் மிக்க சுறுசுறுப்போடு வேலைசெய்யும். கோடைக் காலமே அவை தானியம் தேடிச் சேமிக்க ஏற்ற காலமாம். மாரிக்காலத்தில் எறும்புகள் உணவருந்தும் நேரந் தவிர மற்றக்காலமெல்லாம் நன்றாய் நித்திரை செய்யும்.

5. எறும்பு தன் தொழிலைச் செய்யும்போது நாம் அதை உற்று நோக்குவோமாயின், நம் மனத்தில் மிக்க வியப்புத் தோன்றும். எறும்பு, தன் கண்ணிற்பட்ட பண்டம் தன் உருவைவிடப் பெரிதாயிருந்தாலும், சிறிதும் சோர்வின்றி, அப் பொருளை இழுத்துச் செல்லும் செய்கை ஒன்றே அதன் பேராற்றலையும் பெருமுயற்சியையும் இனிது விளக்கும்.

6. எறும்புகளுக்கு நாம் ஏதும் இடையூறு இயற்றலாகாது. நாம் அவற்றை யணுகி, அவற்றின் செய்கைகளுக்கு இடையூறு புரிவதை அவை ஒருபோதுஞ் சகிப்பதில்லை. அவை வசிக்கும் புற்றுக்கு அருகிலாயினும், அவை ஊர்ந்து செல்லும் மார்க்கத்திலாயினும் நாம் அணுகி, அவற்றிற்கு ஏதேனும் இடையூறு செய்தால், அவை நம்மை உறுத்துக் கடித்து, உடனே அவ்விடத்தினின்றும் அகற்ற முயலும். எறும்பு உருவிற் சிறியதேயாயினும், அறிவிற் பெரியதென்பது, இயற்கைப் பொருள்களை ஆராய்வோர் எவருக்கும், அதன் செய்கையால் நன்கு விளங்கும். இதனால், 'சிறியோ ரெல்லாம் சிறியரும்

அல்லர்' என்னும் முதுமொழி எறும்பினிடத்து மிக்க இயைபுடையதா யிருக்கின்றது.

7. எறும்பின் உடல் மூன்று பிரிவுகளை யுடையது. அவை — தலை, இடை, கடை என்பனவாம். எறும்பின் இடைப்பாகம் ஒரு பெட்டகம்போல் அமைந்திருக்கிறது; அதனுள் குடல் முதலிய ஜீரணக்கருவிகள் அடங்கி யிருக்கின்றன. எறும்பின் கண்கள் அதிக விசித்திரமானவை. எறும்பை நுட்பமாகப் பரிசோதித்தவர்கள் அதற்குப் பல நூறு கண்கள் ஒன்று திரண்டு இரண்டு கண்களாக அமைந்துள்ளன என்று கூறுகின்றனர். இதுவன்றி, ஸ்பரிசனி என்னும் உணர்ச்சிக் கருவிகள் இரண்டு, எறும்பின் தலையில் அமைந்திருக்கின்றன; அவை எறும்பிற்குக் கைகள்போல் உதவுகின்றன. எறும்பின் பற்கள் மிக்க உறுதியானவை. அதிக கடினமான வஸ்துவையும், எறும்பு, தன் பற்களால் எளிதில் அரித்துவிடுவதை நாம் கண்ணாரக் காண்கின்றோம்.

8. எறும்பு முட்டையிட்டு, அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்; எறும்புக் குஞ்சு முட்டையிலிருந்து வெளிப்பட்டவுடன் ஒரு சிறு புழுப்போல் இருக்கும்; அஃது அப்போது அசையவும் சக்தியற்றுக் கிடக்கும். அது பலநாளளவும் அப்படியே கிடந்து, தன் தாயின் பராமரிப்பிற்கே பாத்திரமா யிருக்கும். இப் பருவத்தில் நாடோறும் அதன் உடலின்மீது ஒருவகைப் போர்வை உற்பத்தியாகும்; அப்போர்வை நீங்குங் காலம் வரின், அதற்கும் உடல் பருக்கும். பிறகு, அது தானே ஊர்ந்து சென்று, இரை தேடிக்கொள்ளுந் திறமையை யடையும்.

9. எறும்புகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து, அதன் சம்பந்தமான பற்பல செய்திகளை உய்த்துணர்வோமாயின், அவற்றின் செய்கைகள் பெரும்பாலும் மனிதர் செய்கைகளை ஒத்திருக்கக் காண்போம். மாந்தர் தம் பகைவர்மீது படை யெடுத்துச் சென்று, தம்மினும் எளியோரைப் பற்றி அடிமை யாக்கிக் கொள்வதேபோல், சில எறும்புகள் திரண்டு சென்று, எளிய எறும்புகளைப் பற்றிக்கொண்டு வந்து, தம் புற்றில் அடைத்து, அவற்றைத் தமக்குக் குற்றேவல் புரியுமாறு ஆண்மையோடு அடக்கி நடத்துகின்றன. இவ் வகையான எறும்புகள், தமக்கு உணவு முதலியவற்றைத் தேடிக் கொண்டுவரும்படி அந்த அடிமைகளையே ஏவுகின்றன.



10. உயிர்நூற் புலவர் ஒருவர், ஒரு கண்ணாடிப் பெட்டியில் பேரெறும்புகள் சிலவற்றை விட்டு, அவற்றிற்கான உணவுப் பொருளையும், சிதைந்ததோர எறும்புப் புற்றையும் வைத்துப் பரீக்ஷித்துப் பார்த்தனர். பேரெறும்புகள் ஒன்றும் செய்ய அறியாமல்

தம் மனம் போனவாறு அங்குமிங்கும் அலையக் கண்டனர். பிறகு, அப் புலவர், அடிமை எறும்பு ஒன்றை அப் பெட்டகத்துள் விட்டனர். அவ்வடிமை எறும்பு, பல குழந்தைகளையுடைய தாய் தன் குழந்தைகளுக்கு வேண்டிய உணவை அளித்துக் காப்பதே போல், அங்கிருந்த உணவைக் கொண்டுவந்து அந்தப் பேரெறும்புகளுக்குக் கொடுத்துப் பராமரித்தது. பின்பு, அங்கே சிதைந்து கிடந்த அந்தப் புற்றையும் செப்பஞ்செய்ய முயன்றதாம்.

11. எறும்பின் இனத்திற் போர்வீரரும் உண்டு; அவை எதிரிகளை எதிர்த்து ஆண்மையோடு போர் புரிகின்றன. இவ்வகைய வீரத்தன்மை வாய்ந்த இரண்டு பகை எறும்புகள் ஒன்றையொன்று சந்திக்க நேரிட்டால், அவை எதிர்த்துப் போர்புரியாமல் விலகிப் போவதில்லை; அவ்வாறு எதிர்ப்பதில் ஒருவகை முறைகளை ஏற்படுத்திக்கொண்டு, அம்முறைகளை மீறாமல் யுத்தஞ் செய்கின்றன. இவ்வாறு நிகழும் சமரில் இரண்டில் ஒன்று இறந்துபட்டாலொழிய யுத்தம் முடிவுபெறாதாம். இறந்துபட்ட அவ் வெறும்பைப் பல சிற்றெறும்புகள் சேர்ந்து இழுத்துக்கொண்டு போய் ஓரிடத்தில் அடக்கஞ் செய்கின்றனவாம்.

12. எறும்பின் இனத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள வெருட்டு எறும்புகள் (Driver ants) மிகவும் கொடியனவையாம். அவ் வெறும்புகள் தம் எதிரிற்பட்ட எந்த ஜந்துவையும் வெருட்டித் துரத்தும் வன்மையுடையன. அவ் வெறும்புகளை எதிர்த்து வெல்லக்கூடியது வேறெதுவும் இல்லை. அவை பிரயாணஞ் செய்கையில் அவற்றைக் காணும் விலங்குகளும் விலகி ஓடிப்போகுமாம்.

13. ஒருவகை எறும்பு பயிரிடவும் பயின்றிருக்கின்றது. அந்த எறும்பு, காலம் பார்த்து, நிலத்தைக் கிளறிப் பண்படுத்தி, அதிசீக்கிரத்தில் பலன் கொடுக்கக்கூடிய தானியத்தை அதில் விதைக்கின்றது. அது காலமறிந்து களையும் எடுக்கின்றது. கதிர்கள் முற்றியவுடன் தானியங்களை யெல்லாம் விடாமல் சேர்த்து, தன் புற்றில் சேமித்து வைக்கின்றது. இதன் அறிவை என்னென்று இயம்புவது!



14. எறும்புகளுக்குள் பசுக்களும் இருப்பதாகத் தெரிகின்றது. அப் பசுவெறும்புகளைச் சாதாரண எறும்புகள் இடையர்களைப்போல் போற்றிக் காக்கின்றன. பசுவெறும்புகள் பெரும்பாலும் இலைகளிலும் மலர்களிலும் தங்கியிருக்கின்றன. அங்கே, கிடைக்கக்கூடிய இனிய தேனை அந்தப் பசுவெறும்புகள் சேகரித்துத் தம் உடலிலுள்ள பையில் சேமித்து வைத்திருக்கும். அந்த இனிய தேனைப் பெறவே மற்ற எறும்புகள் அவற்றைத் தேடித் திரிகின்றவாம்.

தேனீக்களே தேனீட்டுந் திறமையுடையன என்று இதுகாறும் நாம் எண்ணியிருந்தோம்; எறும்புகளும் இனிய தேனைத் திரட்டிச் சேமிக்குந் திறமுடையவை என்பதை இப்போது அறிகின்றோம். பேரெறும்பு, தனக்குக் குற்றேவல் செய்யும் சிற்றெறும்புகளிற் சிலவற்றை வெளியே அனுப்பும். அவை மலர்தோறுஞ் சென்று தேனைத் திரட்டித் தம் உடலின் அடிப்புறத்-

தில் அமைந்துள்ள பைகளில் சேமித்துக் கொண்டுவரும். அந்தத் தேனைப் பேரெறும்புகள் தமக்கு வேண்டும்போது அருந்துவது வழக்கமாம். தேனெறும்புகள் மெக்ஸிகோ தேசத்தில் மிகுதியும் உண்டு. அந்த எறும்புகளை அந்நாட்டினர் திரட்டி விற்று வியாபாரம் செய்கின்றனர். அன்றி, அவர்கள் அந்தத் தேனெறும்பினால் ஒருவகை இனிய பானமுஞ் செய்கின்றனர்.

15. ஒருவகை எறும்புகள் தாம் பிரயாணம் செய்யும்போது, தம்மீதுவெய்யில் படாமலிருக்கும்படி

ஒருவித இலையைத் தம் வாயால் பற்றிக்கொண்டு போகின்றன. அந்த இலைகள் அவ் வெறும்புகளுக்கு

குடைகள்போல் உதவுகின்றன. மற்றொருவகையான எறும்புகள் இலைகளைக் கொண்டு அதி விசித்திரமான வீடுகள் அமைக்கின்றன.

16. மழை பெய்து வெள்ளம் பெருகுங் காலத்தில், எறும்புகள், தாம் வசிக்கும் புற்றில் நீர் வந்து நிறைந்துவிடும் என்று உணர்ந்து, எல்லாம் ஒருங்கு சேரும். உடனே சிறிய எறும்புகள் ஒன்றையொன்று பற்றிக்கொள்ளும். பிறகு பெரிய எறும்புகள் அவற்றைச் சூழ்ந்து கவிந்துகொள்ள, அவை அனைத்தும் திரண்டு பெரியதோர் பந்துபோல் ஆகிவிடும். பிறகு, அவ் வெறும்புப்பந்து நீரின்மேல் மிதந்துகொண்டே அவ் வெள்ளம் ஓடும் வழியே சென்று, மேட்டு நிலம் தட்டுப்பட்டவுடனே அங்கேதங்க, எறும்புகள், தனித் தனியே பிரிந்து சென்று உயிர் வாழும். தண்ணீர் தம் புற்றண்டையே நிலைத்துத் தங்கியிருக்குமானால் அவ-

வெறும்புகள் அவ்விடத்திலேயே மிதந்துகொண்டிருந்து, அந்த நீர் வடிந்த பின்பு தம் புற்றை அடையும்.

17. ஆப்பிரிக்காவில் ஒருவிதக் கொடிய எறும்பு உண்டு. அவ்வெறும்புகள் தம் ஊருக்கருகில் வரக்

கண்டால், அவ்வூரார் அவற்றை உடனே ஒழிக்க முயல்வார்கள். அவர்கள், அவ்வெறும்புகள் தங்கியுள்ள புற்றின்மேல் சருகுகளை வேய்ந்து தீமூட்டி வதைப்பார்கள். அப்படிச் செய்தபோதும், அந்த

எறும்புகளில் சிலவே அழிந்துபடும். பெரும்பாலன தப்பிப் பிழைத்து, அருகிலுள்ள மரங்களில் ஏறிக்கொள்ளும். சில சமயங்களில், அவ்வெறும்புகள் வசிக்கும் மரங்களின் அடியில், சுற்றிலும் அனலுண்டாக்கி அவற்றைக் கொல்ல முயல்வார்கள். அப்போது அவ்வெறும்புகள் திரண்டு சென்று, அம்மரத்தின் கிளையொன்றின் முனையை யடைந்து, ஒன்றை யொன்று பற்றித் தலை கீழாகச் சங்கிலி போல் தொடர்ந்து தொங்கித் தரையில் இறங்கிவிடும். அவ்வாறு தொங்கும் எறும்பின் தொடர், இது மெல்லிய தோர் இருப்புச் சங்கிலியோ, அன்றிக் கரிய மலர்களால் தொடுத்த மாலையோ எனக் கண்டோர் வியக்குமாறு காணப்படும். பின்பு, பெட்டை எறும்புகளும் குட்டிகளும் அத்தொடரின் மூலமாக ஊர்ந்து வந்து பூமியில் இறங்கிவிடும். இவ்வாறு மற்ற எறும்புகள் அனைத்தும் இறங்கிவிட்ட பின்பு, சங்கிலியாகத் தொங்கிக்கொண்டிருந்த எறும்புகள் அடியிலிருந்து ஒவ்வொன்றாகக் குதித்து ஓடிவிடும். இவ்வெறும்புகள் இப்படித் தொடராகத் தொங்கிநின்று நீர்நிலையையும் கடப்பதுண்டு. முற்கூறியபடி மரக்கிளையிலிருந்து நீர்மட்டம் வரையில் தொடராகத் தொங்கி, கடைசி எறும்பு நீரைத் தொட்டதும், மற்றுஞ் சில எறும்புகள் விரைந்து சென்று ஒன்றை யொன்று பற்றி, நீர் மீது மிதந்து, கரைவரையில் நீண்டு நிற்கும். எஞ்சி நின்ற எறும்புகள், அதன் வழியாக, அதிஜாக்கிரதையாகச் சாரை சாரையாய் ஊர்ந்து செல்லும். இவ்வாறே எல்லா எறும்புகளும் சென்று கரையை அடைந்த பின்னர், தொடர்ந்து தொங்கிய எறும்புகள் ஒவ்வொன்றாய்ப் பிரிந்து குதித்துக் கரையையடையும்.

18. இத்தகைய எறும்புகள் நமது நாட்டில் இல்லாதிருப்பது நன்மையே. ஆயினும், ஒருவகை வெள்ளெறும்பாகிய செல் என்னும் ஜந்து நமக்குச் செய்யுந் தீங்கிற்கு அளவேயில்லை. செல் எப்போதும் பெருந் தொகையாய்ப் பூமிக்குள் புற்றுவைத்து வசிக்கும். இஃது அதி மிருதுவான உடலுள்ளதாக இருந்தாலும், முற்றும் முதிர்ந்து வயிரங்கொண்ட வலிய மரங்களையும் அரித்துவிடு மென்றால், இதன் வன்மையை என்னவென்று இயம்புவது!

5. கண்ணகி

சோழ மண்டலத்திலே, காவிரிப்பூம் பட்டினம் என்னும் நகரத்திலே, மாநாய்கன் என்னும் பெயருடைய செட்டி யொருவன் இருந்தான். அச் செட்டியின் மகளாகிய கண்ணகி யென்பவள் பொற்பினால் இலக்குமி யென்றும், கற்பினால் அருந்ததி என்றும் கண்டோரெல்லாங் கொண்டாடிக் கைகுவித்து வணங்கத் தக்க மிக்க மேன்மையும் நற்குண நற்செய்கைகளும் பெற்றவளாய்ச் சிறப்புற்று வளர்ந்து பன்னிரண்டாம் வயசென்னும் பருவத்தை யடைந்தாள். இவளுக்குத் தேவந்தி என்னும் பிராமணப் பெண் பாங்கியாக விளங்கினாள்.

2. அக் காலத்திலே அக் காவிரிப்பூம் பட்டினத்திலே பெருஞ் செல்வனும் பெருங் கொடையாளனுமா யிருந்த மாசாத்துவான் என்னுஞ் செட்டிக்கு மகனாய் வந்த கோவலன் என்பவனும் அழகு, கல்வி, அறிவு, பொறை, ஆண்மை, கீர்த்தி முதலியவைகளிற் சிறந்து வளர்ந்து, பதினாறும் வயசென்னும் பருவத்தை யடைந்தான்.

3. இப்படி வயதடைந்து யாவரும் மதிக்கும்படி இவர்கள் இருவரும் விளங்கும் நாள்களிலே இக் கண்ணகிக்கு நாயகனாதற்குத் தக்கவன் இக் கோவலனே யென்று தந்தையும் பிறரும் நிச்சயித்துப் பின்னொரு மங்கல நாளிலே இவர்கள் இருவருக்கும் விவாகஞ் செய்துவைத்தார்கள்.

4. கண்ணகியும் கோவலன் மேலே அன்புடையவளாய்த் துறந்தார், வறியோர், சுற்றத்தார், விருந்தினர் முதலியவர்களை யெல்லாம் பேணிப் பெரிதும் உபசரித்து. மனையற நெறியைச் சிறிதும் வழுவாது நடத்திவந்தாள். கோவலனும் கண்ணகிமேலே அளவில்லாத அன்புடையவனாய் அளவளாவி,

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே,
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே;
மலையிடைப் பிறவா மணியே யென்கோ !
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ !
யாழிடைப் பிறவா இசையே யென்கோ !
தாழிருங் கூந்தற் றையால் நின்னை'

என்பன முதலியவாக அவள் நலங்களைப் பாராட்டி மகிழ்ந்து வாழ்ந்தான். இப்படியே இவ் விருவரும் கலந்து வாழுநாள்களிலே சில வருடங்கள் சென்றன.

5. அந்நாட்களிலே ஆடல் பாடல்களிலும் அரங்கேறி, அழகிலுஞ் சிறந்தவளாய், அவ்வூரிலிருந்த நாடகக் கணிகையாகிய மாதவி யென்பவளிடத்திலே கோவலன் காதல்கொண்டு தன் பொருள்களை யெல்லாம் நாளுக்குநாள் அவளுக்கே கொடுத்துச் சில

நாள் அவளோடிருந்து, பின்னர் அவளையும் விடுத்து, வீட்டில் வந்து தன் பிரிவினால் வாட்டமுற்றிருந்த கண்ணகியைக் கண்டு, 'பெண்ணே, பொய்யெல்லாம் மெய்யாகப் பொருந்தும் பரத்தைக்குப் பொருளெல்லாங் கொடுத்து மிக வறியனாய் விட்டேன்' என்று சொல்லி இரங்கினான்.

6. அதுகேட்ட கண்ணகி இவன் மாதவிக்குப் பின்னுங் கொடுக்கவிரும்பி இப்படி இரங்குகின்றானென்றெண்ணி, 'இன்னும் இரண்டு சிலம்புகள் என்பாலுள்ளன; அவைகளையும் தருகிறேன்; ஏற்றுக்கொள்ளுக' என்றாள். கோவலன் கண்ணகியை நோக்கி, 'பெண்ணே, இச் சிலம்புகளை மதுரையிற் கொண்டுபோய் அங்கே விற்று, வரும் பொருளை முதலாகக்கொண்டு வாணிகஞ்செய்து, பரத்தையோடு கூடிப் பாழாக்கிய பொருள்களையெல்லாம் தேடிக்கொள்ள எண்ணுகிறேன்; என்னோடு கூட நீயும் வா' என்றான். கண்ணகியும், 'வருகின்றேன்' என உடன்பட்டாள்.

7. பின்னர் இருவரும் அன்றிரவிற்றானே விடியற் சாமத்தி லெழுந்து, வெளியிற் புறப்பட்டு, மேற்குத் திசையை நோக்கிக் காவேரியின் வடகரையாக வழிக்கொண்டு போய், ஒரு காததூரஞ் சென்று, சோலையொன்று எதிர்ப்படக் கண்டு, சற்றே இளைப்பாறக் கருதி, அச் சோலையினுள்ளே போய்க் கவுந்தி யென்னுந் தவப்பெண்ணினைக் கண்டு வணங்கினார்கள். கவுந்தியும் கண்ணகி கோவலன் என்னும் அவ்விருவரையும் உற்றுநோக்கி, நீவிரோ குடிப்பிறப்பும் ஒழுக்கமும் பிறவும் குறைவற்ற சிறப்புடையர் போலக் காண்கின்றீர்! இடுக்கணுடையவர் போல இங்கே வந்த

காரணம் யாதோ?' என்று வினவினள். கோவலன் வேறொன்றுங் கூறுனாய்த், 'திரவியந் தேடுதற்கெண்ணித் தெற்கேயுள்ள மதுரைக்குச் செல்கின்றேன்' என்று மாத்திரஞ் சொன்னான். அதுகேட்ட கவுந்தி, 'அறிஞரிடத்திலே அறநூற் கேள்விகளைக் கேட்டறிதற்கும் அறிவனைத் தொழுதற்குமாக மதுரைக்குப் போக எண்ணியிருக்கிறேன்; ஆதலால், யானும் வருகின்றேன்' என் றெழுந்தாள்.

8. பின்னர்க் கண்ணகி, கோவலன், கவுந்தி மூவருஞ் சேர்ந்து வழிக்கொண்டு, சீரங்கமடைந்து, அங்கு வந்த சில சாரணரைப் பணிந்து போந்து, ஓடமேறிச் சென்று காவிரியாற்றின் தென்கரையிலே போய், அங்கேயுள்ள ஒரு சோலையிலே தங்கினார்கள். அப்பொழுது குட்டினியாயுள்ள ஒரு தூர்த்தமங்கையும் ஒரு தூர்த்தநாயகனும் அங்கே வந்து, கோவலனையும் கண்ணகியையும் பார்த்து, 'காமனும் இரதியும் போலக் கலப்புடையவராய் இங்கே யாவரோ இருவர் இருக்கின்றனர்; இவ்விருவரும் யாவர்?' என்று கவுந்தியை வினவினார்கள். அவர்களுக்குக் கவுந்தி, 'இவர்கள் என் மக்கள்; காமனும் இரதியும் அல்லர்; மானுட சரீரமுடையவர்; வழிநடையால் வருந்தினர்; நீவிர் அவரை அணுகாமல் அப்பாற் செல்லுதிர்' என்றாள். அவர்கள் உடனே கவுந்தியை நோக்கி, 'நூற்கேள்வி யுடையீர்; ஒரு வயிற்றிலே பிறந்த இருவர் நாயகனும் நாயகியுமாகக் கூடிவாழுங் கொள்கை எங்கேயாவதுண்டோ?' என்று நகையாடினார்கள்.

9. அத் தீமொழியைக் கேட்டுச் செவிகளைப் பொத்திக் காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க,

நம் பூங்கோதையை நிந்திப்பாரோ இவரென்று கவுந்தி கோபித்து, 'நீவிர் இருவரும் நரிக ளாகக்கடவீர்' என்று சபித்தாள். அக்கணமே அவ் விருவரும் குறுநரிகளாய்க் குரல்காட்டினார்கள். அக் குரல் கேட்ட கோவலனும் கண்ணகியும் அஞ்சி நடுநடுங்கி அவர்கள் மேலே இரங்கி, அறிவில்லார் பிறரை இகழுதல் அறிவின்மை என்றும், அவ் விகழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ளுதல் அறிஞராயுள்ளார்க் கெல்லாம் அழகாகும் என்றும் சொல்லி, அவ்விருவருக்கும் சாபநிவர்த்தியையுங் கவுந்திவாயாற் சொல்லுவித்தார்கள்.

10. பின்னர் மூவரும் எழுந்து புறப்பட்டுப்போய் உறையூரை யடைந்து, அங்கே ஒருநாள் இருந்து, மறுநாள் எழுந்து, சிறிது தூரம் போய், ஒரு சோலையிலே இளைப்பாறி யிருக்கும்போது, பாண்டியன் கீர்த்திகளைப் பாடிக்கொண்டு பிராமணன் ஒருவன் அங்கே வந்தான். அவர்கள் அவனோடு கலந்துபேசி மதுரைக்குப் போகும் வழிகளை அவன் சொல்லக் கேட்டுக்கொண்டு சோலையை விடுத்து அப்பாற் போகும் போது பலரைக் கண்டு பேசியும், பல சிறப்புகளைப் பார்த்தும், வழிகளை விசாரித்தும், காடுகளையும் ஊர்களையுங் கடந்து போய், வைகை யாற்றையுங் கடந்து, மதுரை நகர்க்கருகிலே முனிவர்கள் வசிக்கும் ஒரு மடத்திலே தங்கினார்கள்.

11. அற்றைநாள் கழிந்து மற்றைநாட் காலையிலே கோவலன் எழுந்து கவுந்தியைக் கைகுவித்து வணங்கித், 'தவமுடையீர், ஒழுக்கம் தவறினர் போல என் இருக்கையையுங் கைவிட்டு முன் ஒருகாலும் அறியாத தேசங்களிலே வந்து அரிய வழிகளிலே நடந்து சிறுமையுற்றேன். இந்நகரிற் போய் இடம் பார்த்து

வரும்வரையும் இவளைக் காத்துக்கொள்ளவேண்டும்' என்றான். அவன் துயரினைக் கவுந்தி அறிந்து, மனமிரங்கி, அவனை நோக்கி, 'நீ ஏன் வருந்துகின்றாய்? முன்செய்த தீவினை காரணமாக வருந் துயர்க்குப் பெரியோரும் வருந்துவாரோ? நாடும் நகரும் விட்டு மனைவியோடு காடும் பிறவும் புகுந்து திரிந்து வருந்தினவன் நீ ஒருவன் மாத்திரந்தானோ? அயோத்தி நகர்க்கு அரசனாயிருந்த ஸ்ரீ ராமசந்திரன், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்றவாறே, காதலியாகிய சீதையோடுங் காட்டிற் போய் அளவிறந்த துயர்களெல்லாம் அனுபவிக்க வில்லையா? நிடதேச ராஜனாயிருந்த நளனும் மனைவியோடுங் காட்டிற் போய்க் கணக்கில்லாத துயர்களை அநுபவிக்க வில்லையா? என்று இவ்வாறு சொல்லித் தேற்றக், கோவலன் ஒருவாறு தேறிக் கண்ணகியைக் கவுந்தியிடம் வைத்துவிட்டு, மதுரை நகருள்ளே போய், இடம் பார்த்துக்கொண்டு வந்தான்.

12. வந்தபின் அந் நகர்ச் சிறப்புகளைக் கவுந்திக்குச் சொல்லிக்கொண்டிருக்கையில், அங்கேவந்த மாடலன் என்பவனாற் பல செய்திகளையு மறிந்தான். மாடலனுங் கவுந்தியும், 'துறவிகளாகிய முனிவர்களிருக்கும் இவ்விடத்திலே இல்லாச்சிரமிகளாகிய நீங்கள் இருத்தலாகாது' என்று விலக்கினார்கள். அப்போது மாதரி என்னும் பேருடைய ஓரிடைச்சி அங்கே வந்து சேர்ந்தாள். அவள் குணங்களையும் செயல்களையும் ஆராய்ந்து நன்கறிந்த கவுந்தி, அவளுக்குக் கோவலன் கண்ணகி என்னும் இருவர் பெருமைகளையும் எடுத்துக் கூறி, அடைக்கலம் புகுவோரைப் பாதுகாப்போர் அடையும் பயனையும் அறிவித்துக், கண்ணகியைச் சில

நாள் வைத்துக் காக்கும்படி அவளிடத்தே அடைக்-கலமாகக் கொடுத்தாள்.

13. மாதரி யென்பவளும் ஆதரவோடுங் கோவ-லன் கண்ணகி என்னும் இருவரையும் தானிருக்கும் இடைச்சேரிக்குக் கூட்டிக் கொண்டு போய், ஒரு புதுவீட்டிலே வைத்து, வேண்டிய உபசாரங்களுஞ் செய்து, தன் மகளாகிய ஐயை யென்பவளையும் அக் கண்ணகிக்குத் தொண்டு செய்யும்படி வைத்தாள். இடைக்குலப் பெண்களும் மாதரி சொற்படியே கண்-ணகிக்கு உண்டி யமைத்தற்கு வேண்டுவன வெல்லாங் கொடுத்தார்கள். அவைகளைப் பெற்றுக் கண்ணகி செவ்வே பாகஞ் செய்து உண்பிக்கக் கோவலன் உண்டு மகிழ்ந்தபின், கண்ணகியை அருகிலே அழைத்-துப், 'பெண்ணே, எம்முடைய பெற்றோர் இவ் வரிய வழியிலே நீ வந்ததற் கிரங்கி யாது துயருற்றாரோ? நாம் இங்கே வந்தது மாயமோ? தீவினைப் பயனோ? நல்லொழுக்கந் தவறிய எனக்கு நற்கதியு முண்டோ? உனக்கும் சிறுமை செய்தேனே!' என்று பலவாறு பரிந்து கூறி, 'இனி நின் காற்சிலம்புக ளுள்ளே ஒன்-றைக் கொண்டுபோய் விற்று வருகின்றேன்; யான் வரும் வரையும் தனிமையால் வருந்தா தொழிக' என்று சொல்லி ஆறுதல் செய்து, சிலம்பினை வாங்கிக்-கொண்டு புறப்பட்டான்.

14. புறப்பட்டுப் பல தெருக்களைக் கடந்து, அவன், மதுரைமாநகர்க் கடைத் தெருவிற் போனான். போகும்போது காலதூதன்போலத் தட்டான் ஒரு-வன் வந்து தலைப்பட்டான். அந்தத் தட்டானை அவன் அணுகி, 'அரசன் தேவிக்கே அணிகலமாகத் தக்க சிலம்பு ஒன்று யான் வைத்திருக்கின்றேன். இச்

சிலம்பினை விலைமதித்தற்கு நின்னாலியலுமா ?' என்று வினவிச் சிலம்பினையுங் காட்டினன். தட்டான் சிலம்பிலுள்ள சித்திரச் செய்கைகளை யெல்லாம் உற்று நோக்கி, 'இராசாவின் பெருந்தேவிக்குத்தான் இப் பெருவிலைச் சிலம்பு பொருத்தமாகும் ; இதனை யான் போய் அரசனுக்குத் தெரிவித்து வருகின்றேன் ; அவ்வளவும் நீர் இவ்விடத்தே இருத்திர்' என்று சொல்லிச் சென்றான்.

15. செல்லும்போது, தான் முன்னரே அரசனை யறியாமல் அபகரித்து வைத்திருக்குஞ் சிலம்பு தன்னிட முளதென்று வெளிப்படுமுன் இச் சிலம்பையும் இவனையும் காட்டிக் கொடுத்தால், அக் களவு தன் மேல் வாராது நீங்கி, இவனையே சாருமென்றெண்ணி, விரைந்து போய்க், கோப்பெருந்தேவி கோயிலை நோக்கிக் காப்புடை வாயிலின் கடைபோய் நின்ற பாண்டியனைக் கண்டு பணிந்து, 'அரசனே, கன்னக்கோல் இல்லை ! கவைக்கோல் இல்லை ! சுவரிடிக்க வில்லை ! சிலம்பு கவர்ந்த வகையை என்னென்று சொல்வேன் ! மந்திரத்தாலே வாயிற் காவலரை மயக்கிக் கோயிலிற் புகுந்து சிலம்பினை ஒருவன் அபகரித்தான் ! அக் கள்வனும் இங்கேதான் என் குடிலிலே இருக்கின்றான்' என்று விண்ணப்பஞ் செய்தான்.

16. அரசனோ, இவ்வாறு விண்ணப்பஞ் செய்த தட்டான் தன் அரண்மனையிலுள்ள ஒரு சிலம்பினை முன்னரே கவர்ந்து மறைத்து வைத்திருக்கும் ஒரு கள்வன் என்பதையும் ஆராய்ந்து அறியவில்லை ! அச் சிலம்பு வெளியாகி ஒருபோது தன் மேல் அரச தண்டம் வருமென்றஞ்சி அது வருமுன்னர் அதனை நீக்குதற்கு உபாயமாக இச்சிலம்பினையும், இவனையும்

கொண்டுவந்து பொருத்துகின்றான் என்பதனையும் ஆராய்ந்தறியவில்லை! ஒன்றும் ஆராயாமல், உடனே, 'என் மனைவி சிலம்பு அக் கள்வனிட மிருக்குமாயின், இக்கணமே அவனைக் கொன்றுவிட்டுச் சிலம்பினை இங்கே கொண்டு வருக' என்று காவலாளர்க்குக் கட்டளையிட்டான். தட்டானும் தன் கருத்து வாய்த்த-தென்று மகிழ்ந்து காவலாளரை அழைத்துக்கொண்டு போய்க் கோவலனைக் காட்டினான். காவலாளர் கோவலனை உற்றுப் பார்த்தபின், 'இவன் கள்ளன் போலக் காணப்படவில்லை; கொல்லப்படத்தக்கவனும் அல்லன்' என்றார்கள். அவர்களைத் தட்டான் இகழ்-ந்து நகைத்துக் கள்வர்கள் துணையாகக் கொள்ளும் மந்திரம், தெய்வம், மருந்து முதலிய கருவிகளின் வலிமைகளையும், பிறவற்றையும் எடுத்துக்கூறி, 'இவன் கள்ளன்தான்' என்று சாதித்தான். அப்போது அவ-ருள்ளே கொலைக்கஞ்சாதவன் ஒருவன் வாளினை வீசிக் கோவலன் தலையை வெட்டினான்.

17. இவ்வாறு கோவலன் கொலைக்களத்திலே கொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட ஒரு பெண் ஓடிவந்து கண்ணகிக்கு முன்னே நின்று சொல்-லவும் இயலாதவளாய் மெல்ல மெல்ல இடைப்பெண்-களுக்குச் சொல்லி, பின்னர், 'அரசன் மனைவியுடைய சிலம்பினை அபகரித்தானென்று காவலாளர்கள் கோவ-லனைக் கொன்றார்களே!' என்றாள். என்றவுடனே கண்ணகியும் துயரிலே மிகுந்தாள்! தன்வச மிழந்-தாள்! பின்னர் எழுந்தாள்! விழுந்தாள்! 'ஐயோ, என் கணவா! என் கணவா!' என்றாள். 'எங்கே போயினை! எங்கே போயினை!' என்றாள். 'ஆ' என்-றாள். அழுதாள், புலம்பினாள்; அடுத்த பெண்களை

நோக்கினாள். 'எல்லீரும் கேளுங்கள்! எல்லீரும் கேளுங்கள்!' என்றாள். அப்பால் சூரியனை நோக்கினாள். 'சூரிய தேவனே, நீ அறியாத காரியமும் உண்டோ? என் கணவன் கள்வனோ? கள்வனோ?' என்றாள். அப்போது, 'நின் கணவன் கள்வனல்லன்; கள்வனென்ற இவ்வூர் எரிக்கு உணவாகும்' என ஒரு குரல் கூறிற்று.

18. கண்ணகி அதனைக் கேட்டுக்கொண்டு மிக்க கோபமுடையவளாய் மற்றைச் சிலம்பினை எடுத்தாள்; எடுத்துக்கொண்டு, உடனே புறப்பட்டு மதுரைமா நகர வீதியிற் போய்க் கற்புடை மகளிர்களை யெல்லாம் பார்த்து, 'பத்தினிப் பெண்டிர்காள், என் காற் சிலம்புகள் இரண்டுள்ளே ஒன்றினை இங்கே விற்கக் கொண்டுவந்த என் கணவன் கள்வன் தானோ? பாருங்கள்! இது மற்றைச் சிலம்பு! அரசன் மனைவியுடைய் சிலம்பு திருடினனென்று கொண்டுபோய் என் கணவனைக் கொன்றார்களே! இஃதென்ன ஆச்சரியம்! அந்தோ! படாத துயரெல்லாம் பட்டேனே! முன் போல என் கணவனை இன்னும் காண்பேனோ?' என்று பலவாறு சொல்லி வருந்தி அழுதாள். இப்படியே அழுகின்ற கண்ணகியைக் கண்ட மதுரைமா நகரத்தார் எல்லாரும் அவள் படுந் துயரை ஆற்றும் வழி ஒன்றுங் காணாது தாமும் இரங்கி, 'இப் பெண்ணுக்கு மரணபரியந்தம் நீங்காத பெருங்கவலையை உண்டாக்கி இவ் வரசன் அநியாயஞ் செய்து விட்டான்! சிலம் பொன்று கையிலே ஏந்திக்கொண்டு வந்து இங்கே நிற்பது ஒரு பெருந்தெய்வம்! இதனால் யாது சம்பவிக்குமோ அறியேம்!' என்று சொல்லிப் பின் கொலைக் களத்திலே கிடக்குங் கோவலனைக் கண்ணகிக்குக்

காட்டினார்கள். கண்ணகி கோவலனைக் கண்டு புலம்பி அழுது, கையாலே தழுவக், கோவலன் உயிர்பெற்று எழுந்து, 'பெண்ணே, நின் முகம் வாடியதே!' என்று கண்ணீர் துடைத்துக் கண்ணகியை, 'இரு' என்று சொல்லி, விண்ணுலகம் போயினான்.

19. கோவலன் போதலைக் கண்ட கண்ணகி, 'இங்கே தோன்றிநின்றது யாதோ? மாயமோ? மற்றொரு தெய்வமோ? ஒன்றுந் தெரியவில்லை! எங்கும் போய் என் கணவனைத் தேடுவேன். என் கோபம் தணிந்தபின் கூடுவேன். அரசனைக் கண்டு என் கணவனைக் கொன்ற காரணம் யாதென்று வினவி, என் கோபம் தணிவேன்' என்று சொல்லி, அரசனைக் கண்டு கேட்கப் போனாள்.

20. இவையெல்லாம் இவ்வாறு நிகழப், பாண்டியன் மனைவி பற்பல தீக் கனவுகளைக் கண்டு பயந்து, பாண்டியனுக்கு அவைகளைச் சொல்லிக்கொண்டிருந்தாள். அச் சமயத்திலே கண்ணகி போய் அரசனைக் கண்டாள். அரசன் கண்ணகியை நோக்கி, 'பெண்ணே, நீ யார்?' என்றான். கண்ணகி அரசனை நோக்கி, 'அரசனே, என் காற் சிலம்பு ஒன்றை விற்கும்படி இங்கே கொண்டுவந்து நின்பா லடைந்து கொலைக்களத் தீர்ப்புற்ற கோவலனுக்கு நான் மனைவி; என் பெயர் கண்ணகி; என்னூர் காவிரிப்பூம் பட்டினம்' என்று சொன்னாள். அரசன் கண்ணகியை நோக்கி, 'கள்வனை யுள்ளோனைக் கொல்லுவித்தல் காவலரா யுள்ளோர்க்குக் கடனா யுள்ள நீதியன்றோ?' என்றான். கண்ணகி, கோவலன் கள்வனல்லனென்று சாதிக்கக் கருதி, தன் காற்சிலம்பின் உள்ளிடுமணி மாணிக்கம்

என்ன, அரசன் தன் மனைவி சிலம்பின் உள்ளிடு மணி முத்து என்று, கோவலனைக் கொன்று கவர்ந்த சிலம்பினை முன்வைக்க, கண்ணகி அதனை யுடைத்த போது, உள்ளிட்ட மணி மாணிக்கமாய்த் தெறித்தது. அது கண்ட அரசன் அஞ்சி நடுநடுங்கி, 'தட்டான் சொற் கேட்டுத் தவறுசெய்த நானோ அரசன்? நானோ அரசன்? நானே கள்வன்! என்னுயுள் கெடுக' என்று சொல்லிச் சிங்காதனத்திற்றானே விழுந்திறந்தான்.

21. பின்னர்க் கண்ணகி, பாண்டியன் மனைவி பணிந்து வேண்டவும், கோபந்தணியாளாய், 'இங்கு உள்ளார் யாவருங் கேளுங்கள், தேவருங் கேளுங்கள், முனிவருங் கேளுங்கள்; என்பால் யாதொரு குற்றமும் இல்லை. என் கணவனைக் கள்வனென்று கொல்லுவித்த இவ்வரசன் நகரியை இப்போதழிக்கின்றேன், பாருங்கள்' என்று சொல்லி, வலக்கையாலே தன் மார்பைக் கீறி இரத்தமெடுத்து நகரியைச் சுற்றிவந்து வீதியிலே எறிந்தாள். எறிந்தபோதே அக்கினி தேவன் தோன்றிக் கண்ணகி கட்டளைப்படி பார்ப்பார், அறவோர், பசு, மூத்தோர், பத்தினிப் பெண்டிர், குழந்தைகள் என்னும் இவர்களை எரியாது விட்டுத் தீங்குள்ளாரையும் அந்நகரியையும் எரித்தான்.

22. எரியும்போது, மதுராபதி என்னும் அதிதெய்வம் கண்ணகிமுன் சென்று, கோவலன் இறத்தற்கும், காவலன் இறத்தற்கும், நகரியை எரித்தற்கும் காரணமாய் முன்னே நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் விரித்துச் சொல்லிக் கண்ணகியின் கோபத்துடன் அக்கினியின் தாபத்தையும் தணிப்பித்துச் சென்றது. சென்றபின், கண்ணகி, 'நான் கணவனைக் கண்டபின் அன்றி இருக்கவுமாட்டேன், நிற்கவு மாட்டேன்'

என்று சொல்லித் துர்க்கை கோயில் வாயிலிலே தன் வளையலை உடைத்தெறிந்துவிட்டு, மதுராபுரியை நீங்கி, வைகை யாற்றங் கரை வழியாக மேற்கே போய், மலை நாட்டுள்ள சுப்பிரமணிய ஸ்தலமாகிய திருச்செங்குன்றிலே நின்ற ஒரு வேங்கை மர நிழலை யடைந்து, பதினான்கு நாள் சென்ற பின், அங்கே கோவலன் வரக் கண்டு, தேவர்கள் வாழ்த்தொலி கூற, அவனோடு விமானத்திலேறித் தேவுலகம் போயினாள்.

23. போதற்கு முன்னரே கண்ணகியைக்கண்டு, 'நீவிர் யாவிர்?' என்று கேட்டறிந்தவராய், அம்மலையில் நின்ற வேட்டுவர்கள் இவ்வாறு கண்ணகி செல்வதை எதிரே கண்டு, பெரிதும் அதிசயமடைந்து, 'நங்குலத்துக் கெல்லாம் இவள்போலத் தெய்வமில்லை; இவளைத் தெய்வமாகக் கொள்ளுங்கள்' என்று பலவுஞ் சொல்லிக் கைகோத்து விளையாடலாகிய குரவைக் கூத்து விளையாடி, அந்நாட் டரசனாகிய செங்குட்டுவனுக்கு இச் செய்தியை அதிசயத்தோடும் அறிவித்தார்கள். செங்குட்டுவன் கண்ணகி செய்தியை வேட்டுவர் வாயாற் கேட்டுப் பேரதிசயமடைந் திருந்தான். அப்போது, மதுரைச் சங்கப் புலவருள் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனார் சென்று, செங்குட்டுவனைக் கண்டு பணிந்து, கோவலன் சிலம்பு விற்க வந்தது முதலாக நடந்த சம்பவங்களை யெல்லாம் நன்றாக அவனறியும்படி விரித்துச் சொன்னார்.

24. இவைகளை யெல்லாஞ் செங்குட்டுவன் கேட்டுச் சாத்தனாரை உபசரித்தான். அப்போது செங்குட்டுவன் மனைவி, 'நம்முடைய நாடு தேடி வந்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியை நாம் தாபித்து

வழிபடவேண்டும்' என்றாள். அதற்குச் செங்குட்டுவன் சம்மதித்துக் கண்ணகியைப் பிரதிட்டை செய்யக் கருதிக் கோயில் கட்டுவித்து, இமய மலையினின்றும் வருவித்த சிலையா லமைத்த விக்கிரகத்திலே பத்தினிக் கடவுளாகிய கண்ணகியைப் பிரதிட்டை செய்து, நித்திய பூசை முதலியன நியமமாக நடக்கும்படி கட்டளையிட்டான்.

25. கோவலன் கொலைக்களத் திறந்த செய்தியை மாடலன் போய்ச் சொல்லக்கேட்ட மாசாத்துவானாகிய கோவலன் பிதாவும் மனமயங்கி உலகம் பொய்யென்று துறந்தான்; அவன் மனைவியும் இறந்தாள். மற்றைக் கண்ணகியின் தோழியாகிய தேவந்தியும், செவிலித்தாயும், அடித் தோழியும் மிகப் பெருந் துயரி லமிழ்ந்து, கண்ணகியைக் காண்போம் என்று கருதிக் காவிரிப்பூம் பட்டினத்தினின்றும் புறப்பட்டு வழிக்கொண்டு, மதுரைமா நகரிற் போய், மதுரை எரிந்தது கேட்டு, மாதரி வீட்டிற் போய்க் கண்ணகியாகிய அடைக்கலப் பொருளை இழந்ததனால் மாதரி யிறந்ததையுங் கேட்டு, மாதரி மகளாகிய ஐயை என்பவளை அழைத்துக்கொண்டு வைகையாற்றங்கரை வழியாக மலைநாட்டிற் போய்க் கண்ணகி கோயிலையும் செங்குட்டுவனையும் கண்டார்கள். செங்குட்டுவனுக்குத் தமக்கும் கண்ணகிக்கும் உள்ள தொடர்புகளைச் சொல்லிப் புலம்பினார்கள். அப்போது கண்ணகி தெய்வ வடிவத்தோடும் வெளிப்பட்டுச் செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுத்து வாழ்த்தினாள். செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு நித்திய பூசையும் திருவிழாவும்

செய்யும்படி தேவந்திக்குச் சொல்லிக் கண்ணகியை மும்முறை வலம்வந்து வணங்கி நின்றான்.

26. அப்போது சிறையினின்றும் நீங்கிய ஆரிய தேசவரசரும், பிறரும் அங்கே வந்து கண்ணகியை வணங்கி, 'தேவி, இந் நாட்டிலே இச் செங்குட்டுவன் போல எம் நாட்டிலே யாங்கள் செய்யும் வேள்வியிலும் இப்படி எழுந்தருளி வந்து கிருபை செய்தல் வேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள். அப்போது, 'அவ்வாறு வரந்தந்தேன்' என்றொரு சத்தம் தோன்றிற்று. பின்னர் மதுரைமா நகர்க்கரசனாய் வந்த இளஞ்செழியன் என்பவனும் ஆயிரந் தட்டாரைக் கொன்று பலியிட்டுக் கண்ணகிக்கு விழாவுஞ் சாந்தியுஞ் செய்து, கோவலன் இறந்த நாள் தொடங்கிப் பெய்யாது வறந்த மழையும் வரப்பெற்று, வறுமை நோய் முதலிய சிறுமைகளும் தன்னாட்டினின்று நீங்கப் பெற்றான். அவ்வாறே இளஞ்செழியன் செய்து பெற்றதனைக் கேள்வியுற்ற கொங்கதேசத்து இளங்கோவாகிய கோசரும் கண்ணகிக்கு விழாவும் சாந்தியும் செய்து தந்நாட்டிலே எந்நாளும் மழை பெய்யப் பெற்றார். அவ்வாறே இலங்கைத் தேச வரசனாகிய கயவாகு என்பவனும் கண்ணகிக்குத் தன்னாட்டிலே கோயில் கட்டுவித்துத் திருவிழாச் செய்து மழை மிகுந்து தன்னாடு சிறக்கப் பெற்றான். அவ்வாறே சோழன் பெருங்கிள்ளி என்பவனும் தன்னுடைய இராஜதானியாகிய உறையூரிலே, 'இவள் ஒரு பத்தினிக் கடவுள்; யாம் விரும்பியவாறே எமக்கு வரந்தருவாள்' என்று கருதிக் கண்ணகிக்குக் கோயிலுங் கட்டுவித்து நித்திய விழாவணியும் நடத்தினான்.

6. பூமி கற்பிக்கும் நீதிகள்

உலகத்து உயிர்கள் உய்வதற்கு வேண்டிய பல நீதிகளையும் கற்பிக்கும்பொருட்டு ஜீவகாருணியரான கடவுள் இரண்டு பெரும் புத்தகங்களை ஏற்படுத்தியிருக்கிறார். அவை, சப்தமும் பிரகிருதியுமாம். சப்தமாவது யாவருக்கும் பிரசித்தமாகத் தெரிந்திருக்கிற வேதமாம்; பிரகிருதியாவது எப்போதும் சகல பிராணிகளுக்கும் பிரத்தியக்ஷமாகத் தோன்றிக்கொண்டிருக்கும் இந்தப் பிரபஞ்சமாம்.

2. அகண்டமான இப் பூமண்டலத்தில் வேதத்தின் பொருள்களை அறிந்தவர் மிகச் சிலர்; வேதாந்தங்களையும், அதிலுள்ள தத்துவங்களையும் காதினலேகூடக் கேளாதவரோ எண்ணிறந்தோர். வேதத்தை அறிந்துகொள்வது அதிக கஷ்ட சாத்தியமான காரியம். இந்தப் பிரபஞ்சமாகிய புத்தகமோ அப்படிப்பட்டது அன்று; அது யாவரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளக் கூடியதே; ஒருவன் ஒன்றுந் தெரியாத மிருகமாக இருந்தாலும் அவனுக்கும் ஒரு நல்லாசிரியனாய் நன்மைகளைக் கற்பிக்க அஃது எப்போதும் அவன் அண்டையிலேயே இருக்கின்றது; ஆயினும், அந்த ஆசிரியனது தன்மை இப்படிப்பட்டது என்பதை அறிந்துகொள்வது மாத்திரம் கடினமாகவே இருக்கின்றது.

3. இவ்விரண்டு புத்தகங்களுக்கும் பொதுவாகச் சில குறிப்புக்கள் உண்டு. இந்தப் புத்தகங்களை எப்போதும் கண்ணெதிரில் நன்ருகப் பரப்பி வைத்துக்கொண்டிருந்தாலும், அதனல் ஒரு நன்மையும் கண்டறியமாட்டாத மனிதரும் அநேகர் உளர். ஒருவன்

வேதம் அனைத்தையும் நன்முக ஓதியும் அவன் அதன் பொருளைச் சிறிதும் உணராமலிருக்கலாம். வேதாந்தப்பொருள்களை உள்ளபடி அறிந்துகொள்வ தற்கு அதி சமர்த்தனை ஆசிரியன் ஒருவன் இருத்தல் இன்றியமையாதது. அப்படியே பிரகிருதியாகிய புத்தகமும் எத் திசைகளிலும் நமது கண்ணுக்குத் தோன்றிக்கொண்டு இருந்தாலும், அதைக்கொண்டு நாம் கடவுளைப்பற்றி ஒன்றும் அறிந்துகொள்ளாமல் இருக்கக் கூடும். இச் சிறந்த புத்தகம் நல்ல விவேக மும் புத்திக் கூர்மையும் உள்ள ஞானிகள் தவிர, மற்ற-வர்கள் படித்தறியுந் தன்மையது அன்று. ஈசுவர கடாக்ஷத்தைப் பூர்ணமாகப் பெற்று, ஞான மார்க்-கத்திலேயே புத்தியைச் செலுத்துகின்ற புண்ணிய புருஷர்களே அதனைப் படித்தறியும் பாரபுத்தி யுடை-யவர். முதலில் ஒருவன் தன் மனத்தைக் கடவுளி-னிடத்திலேயே பற்றச் செய்வானுனல், பின்பு எங்கே பார்த்தாலும் அவன் கண்ணுக்குக். கடவுளுடைய மகிமைகளே தோன்றும். அப்படியே ஞானிகளுக்கு வேதார்த்தமும் தெளிவாக விளங்கி நிற்கும்.

4. ஒவ்வொரு வருஷத்திலும் விளைவுக் காலம் மிகவும் முக்கியமானது. அப்போது சகல ஜனங்-களும் களிப்புற்றிருப்பார்கள். அக் காலத்தில் பூமி பலவகைப் பொருள்களும் பயனுற நிறைந்து கண்-டோர் களிக்கக் கவின்பெற்று விளங்குகின்றது. நாடுகளில் அநேகர் அரிவாளும் கையுமாக நெல், கோதுமை முதலிய விளைவுகளை அறுத்துச் சேகரிக்க ஆவல்கொண்டு நாற்புறமும் ஓடுவார்கள். அநேகர் அங்கங்கே யுள்ள, காட்சிகளைக் கண்டு களிப்படை-வார்கள். ஆதலால், பூமி கற்பிக்கிற நீதிகளை யாவர்க்-

கும் குறித்துக் காட்ட விளைவுக் காலமே மிகவும் ஏற்றதாகத் தோன்றுகிறது. அக் காலத்தில் பூமியை உற்றுப் பார்ப்பார்களானால், அதுவே யாவர்க்கும் வேண்டிய நீதிகளை நன்றாய்க் கற்பித்துக் கொடுக்கும்.

5. பூமி கற்பிக்கும் நீதிகள் எவை? அவை பல விதமா யிருக்கும்; அவற்றை அறுதியிட்டு முற்றும் உணர ஒருவராலும் முடியாது. ஆயினும், முக்கியமான சில விஷயங்களை இங்கு எடுத்துச் சொல்லுவோம்:

I. கடவுளுடைய அறிவும் ஆண்மையும் இப்படிப்பட்டவை யென்பதை பூமி நன்றாய்க் காட்டுகிறது.

இந்த விஷயத்தை ஸ்தாபிப்பதற்கு அத்தாட்சி யொன்றும் வேண்டுவதில்லை. நிரீசுவரவாதிகள் தவிர மற்றெவரும் இந்த விஷயத்தை மறுக்கத் துணியார். சகல பிராணிகளுக்கும் இருப்பிடமாக அமைக்கப்பட்டுள்ள இப் பூமிக்கு முதல்வன் ஒருவன் இருக்க வேண்டும். இந்த உலக மெங்கும் எவருங் கண்டு வியக்க விளங்கும் அநேக அற்புதங்களும் பூதக் கண்ணாடியால் பார்க்கும்போது, அதிநுட்பமான பிராணி முதலியவற்றுள் தோன்றும் பல புதுமைகளும் தம்மைப் படைத்த கடவுளின் பெருமையை விளக்குகின்றன அல்லவா? இவற்றை யெல்லாம் மறுத்து உரைக்க எவரால் ஆகும்? இவற்றிற்கு ஆதி ஒன்று இல்லையென மறுத்து உரைப்பதைவிட, உண்டென்று சாதிப்பது எளிதான காரியம். ஆயினும், இவ் வுலகம் உண்டான நாள்முதல் இதிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் எதிரியொன்று உண்டாயிருப்பது போலவே, கடவுளுக்கும் விரோதிகள் அநேகர் ஏற்பட்டிருக்கிறார்கள். முற்காலத்திலிருந்த தத்துவ ஞானிகள்

அநேகர் ஈசுவரன் இல்லை யென்னும் வாதத்தை மேலோங்கவொட்டாமலே அவ்வப்போது கண்டனஞ் செய்துகொண்டு வந்தார்கள். இப்போது சிற்றறிவினரா யிருந்துகொண்டே பேரறிவுடையோம் என்று அகங்கரித்து நிரீசுவர வாதஞ் செய்யத் தலைப்பட்டிருப்பவர்கள், நாம் நிலையில்லாத தேகமுடையோம் என்று எண்ணி, அநாதியாய், சகல ஜீவராசிகளிலும் அந்தர்யாமியாய், தன்னை அடைக்கலம் புகுந்தவர்களுக் கெல்லாம் அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தருளி அகிலாண்டங்களையும் பிரகாசிக்கச் செய்யும் ஞானாநந்த மயமாய் விளங்கும் பரப்பிரமம் ஒன்று உண்டு என்பதற்கு நிதரிசனமாக முன்னோர் அனுபவித்து அறிந்து சொல்லியுள்ள உண்மைகளை ஆய்ந்து உணர்ந்து பார்ப்பரேல், ஈசுவர நிச்சயத்தை ஒருபோதும் நிராகரிக்க மாட்டார்கள்.

II. மனிதர்களுடைய பிறப்பும் வளர்ப்பும் இத் தன்மையன என்பதைப் பூமி நமக்கு நன்றாய் அறிவிக்கின்றது.

தெய்வச் செயலால் இப் பூமியில் உண்டாகின்ற சிறந்த பயிர்களைச் செழிப்பாக ஓங்கவொட்டாமல் அடக்கி, நன்றாகப் பலிக்கவொட்டாமல் அழிக்கின்ற விரோதிகள் எத்தனையோ இருக்கின்றன. பயிர்கள் முளைப்பதற்கு முன்னமே அவை செவ்வையாய்த் தலையெடுக்காதபடி அடக்கிக்கொண்டு வீரத்துடன் வரும் களைகள் அநேகம் உண்டு. அவற்றை உடனே வேரோடு களைந்துவிடாமற் போனால் பயிர் ஓங்கி வளராது. அதுவுமல்லாமல், பயிரை அழிக்கின்ற பூச்சிகளும், புழுக்களும் எண்ணிறந்தன. இன்னும், பயிர்களை வளரவொட்டாமற் செய்யும் நோய்களும்

பல. இவையெல்லாம் எங்கிருந்து உண்டானவை? யாராவது விதைபோட்டுப் பயிராக்கினர்களா? இல்லை. ஆயினும், அவை தாமே உண்டாகி, விலக்குவார் இல்லாவிட்டால், தாமே விருத்தியாகி வளர்ந்து, பயிரின் பயனை அழித்துவிடுகின்றன.

மனிதர்களுடைய வாழ்வையும் இந்தப் பயிர்களின் வாழ்வுக்கு ஒப்பாகச் சொல்லலாம். பாவமானது மனிதர்களுடைய நல்வாழ்க்கைக்கு முக்கியமான இடையூறா யிருக்கின்றது. இப் பூமியையும், இதில் வாழ்வதற்காகப் பிராணிகளையும் கடவுள் படைத்தபோது பாவத்தையும் படைத்தாரென்பது பொருந்தாது. பயிர்களுக்குக் களையும் செம்புக்குக் களிம்பும் இயற்கையா யிருப்பதுபோலவே, அநாதியான ஜீவகோடிகளுக்கும் பாவமும் இயற்கையானதே. அதை மேலெழவொட்டாமல் நமது நல்லொழுக்கமாகிய கோடரியால் வேரோடு வெட்டிக்கொண்டு வருவோமானல், கடவுளுடைய பொன்னடியாகிய பெரும் பயனைப் பெறலாம். அவ்வாறன்றிப் பாவத்திற்கு இடம் கொடுப்போமானல், ஒருநாளும் சுகம் அடையமாட்டோம்.

III. செங்கோலரசன் ஒருவன் தன் குடிகளைச் செவ்வையாகப் பரிபாலிப்பதுபோலக் கடவுளும் ஜீவகோடிகளை மிகவும் பரிவுடன் பரிபாலிக்கிருர் என்பதைப் பூமி தெளிவாக விளக்குகிறது.

ஒவ்வொரு வருஷமும் இப் பூமியில் அசேதனங்களான விருக்ஷம் முதலிய வடிவமாகக் கோடாநு கோடி ஜீவராசிகள் வந்து பிறக்கின்றன. அவற்றின் தொகையைக் கணக்கிட்டுச் சொல்ல அவற்றைப் படைத்தவனல்லது மற்றெவனலும் ஆகாது. அப்-

போது உண்டானவைகளுள் அநேகம் மறுபடியும் கோடாநு கோடி விருக்ஷாதிகள் உண்டாவதற்கு விதைகளாக ஏற்படுகின்றன. 'நட்டதெல்லாம் செடியாமா? பெற்றதெல்லாம் பிள்ளையாமா?' என்பது போல, விதையாகப் போட்டவற்றுள் சிலவற்றைப் பக்ஷி, பூச்சி முதலியவை பொறுக்கிப் புசித்துவிடுகின்றன; சிலவற்றை மனிதர்களே புசித்துவிடுகிறார்கள்; சில முளைக்கமாட்டாமல் பூமியிலேயே நசித்துப் போகின்றன. வயல்களை நாம் எவ்வளவு ஜாக்கிரதையாகச் செப்பனிட்டு விதை விதைத்துப் பாதுகாத்து வந்தாலும், போட்ட விதைகளெல்லாம் முளைக்கின்றன என்பதில்லை. சில அழிந்துபோகின்றன; மிகுந்த விதைகளினின்றும் அநேக ஸ்தாவரங்கள் உண்டாகின்றன; அவை முதிர்ந்து மறுபடியும் அழிகின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது நமக்கு ஒரு விதமான உண்மை தோன்றவில்லையா? ஊன்றிப் பாராதவர்களுக்கு இவற்றில் அதிசயம் ஒன்றும் தோன்றாவிடினும், ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு ஈசுவரன் ஜீவனிடத்தில் கொண்டிருக்கிற கருணையின் பெருக்கம் தெளிவாக விளங்கும். பரலோக ஐசுவரியத்தைப் பெறமாட்டாமல், பாவக் கடலுள் ஆழ்ந்து கிடக்கும் அநேக கோடி ஜீவன்களைப் பார்த்துத் திருவுளம் இரங்கி, அவர், இவை எப்படியாவது இந்தப் பாவத்தினின்றும் மீண்டாற் போதுமென்று அதற்கேற்றபடி மரம், செடி, பூச்சி, பறவை முதலாக மனிதர் ஈறாக அநேகவித வடிவங்கள் ஏற்படுத்தி, அவற்றிற்கு வேண்டிய உறுப்புகளும், தம்முடைய உண்மையைக் கண்டறிவதற்கு அறிவும் கொடுத்து, எவ்விதத்திலாவது கடைத்தேறட்டும் என்று கருணை கூர்ந்து கடாக்ஷித்து வருகின்றார்.

IV. ஒவ்வொன்றுக்கும் வேண்டிய உபாயங்களைச் சரியாக உபயோகிக்க வேண்டுவது நமது கடமை என்பதைப் பூமி நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

இந்தப் பூமியில் விளையும் எல்லாப் பொருள்களும் தாமாகவே மேன்மேலும் வளர்ந்து விருத்தியாகுந் திறமை யுடையவைகளா யிருக்கின்றன. இவ்விஷயம் தோட்டக்காரர்களுக்கும் வேளாளர்களுக்கும் செவ்வையாய்த் தெரியும். செடி, கொடி முதலியவைகளுக்கெல்லாம் அவர்கள் பிராணப் பிரதிஷ்டை செய்வதில்லை. அவைகள் உண்டாகும்பொழுதே நன்றாக வளர்ந்து விருத்தியாகவும் பலிக்கவும் வேண்டிய திறமை இயற்கையாகவே அவற்றுள் அமைந்திருக்கின்றது. பின், அவர்கள் செய்வது என்னவெனில், நிலத்தை நன்றாய் உழுது, எருவிட்டு, நீர்க்கால்கள் வாட்டமாக வெட்டி, திட்டமாகத் தண்ணீர் பாய்ச்சி, களை பறித்து, பக்குவமாகப் பாதுகாத்து வருவதே யாகும். அப்படிச் செய்வதனால் அவர்கள் விசேஷ பலனை அடைகிறார்கள்.

இவற்றை யெல்லாம் பார்க்கும்போது மற்றொரு விஷயம் நம் மனத்தில் நன்றாக உறுத்துகின்றது. ஒரு ஜீவனுக்கு வேண்டிய உறுப்புக்களையும் உயிரையும் கொடுப்பது மனிதர்களால் ஆகத்தக்க காரியமன்று; அது கடவுள் ஒருவராலேயே ஆகத்தக்க காரியம். இந்த மகோபகாரத்தைக் கடவுள் நிறைவேற்றிய பிறகு, அவர் கொடுத்த உறுப்புகளை நாம் சரியாக உபயோகித்து வந்தால், ஒப்புயர்வில்லாத பெரும் பயனை பெறக்கூடும்.

பரமாநந்தத்தை அடைய வேண்டும் என்னும் விருப்ப முடையவர்கள், தம்முடைய கவனத்தை நல்ல விஷயங்களிலே செலுத்தவேண்டும்; சோம்பல் முதலிய தீக்குணங்கள் தம்மை அண்டாமல் காத்து கடவுள் காட்டியுள்ள நல்வழியிலேயே நடக்கும்படி வருந்திப் பாடுபடுதல் வேண்டும். நீதி நூல்களிற் சொல்லியிருக்கிற நியாய வழிகளை ஐயமறத் தெரிந்து-கொண்டு, அவ் வழிகளிலேயே நடத்தல் வேண்டும். தம் மனத்தையும், வாயையும் காத்தல் வேண்டும்; கெட்டவர்களுடைய கூட்டுறவை முழுதும் விலக்கல் வேண்டும். அவ்வப்போது செய்யவேண்டிய கடமை-களைத் தவறாமல் செய்தல் வேண்டும்.

V. மாந்தரது உடல் கடைசியில் இத்தன்மைய-தாகிறதென்று அதன் முடிவைப் பூமி நன்றாய் விளக்-கிக் காட்டுகிறது.

இப் பூமியில் நமது கண்ணெதிரிலேயே புதிது புதிதாக பல செடிகளும் கொடிகளும் மரங்களும் முளைக்கக் காண்கிறோம்; அவை யெல்லாம் முளைத்துத் துளிர் விடும்போது எவ்வளவு அழகுடையனவா யிருக்கின்றன! பிறகு அவை, நாளுக்குநாள் பார்ப்-பவர்களுக்கு அதிக சந்தோஷங் கொடுத்துக்கொண்டு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பூவும் காயுங்கொண்டு யாவர்க்கும் விநோ-தமான காட்சியை அளித்து வருவதுமல்லாமல், தம் உடலாலும், இலையாலும், காய் கனிகளாலும் அவ-ரவர்க்கு வேண்டியபடி உதவுகின்றன. இத் தன்மை-யாகப் பலர்க்கும் ஆதரவாயிருக்கும் அவை செழித்-திருக்கும் காலம் மிகவும் சொற்பமானது. அந்தக்

காலம் கழிந்து போனால், பிறகு அவை கொஞ்சங் கொஞ்சமாகப் பலவீனப்பட்டு, ஒரு காரியத்திற்கும் உதவியற்றவையாகிக் கடைசியில் கீழே விழுந்து உருமாறிப் போகின்றன.

நன்றாய் ஆராய்ந்து பார்த்தால், மனிதர்களுடைய உடலின் நிலையும் இப்படிப்பட்டதே யாகும். மனிதர்கள் முதலில் இப் பூமியில் குழந்தைகளாக உற்பவித்து, நாள்தோறும் சுறுசுறுப்பும், உற்சாகமுங்கொண்டு வளர்ந்துவருகிறார்கள்; நல்ல பருவத்தை அடைந்தபோது பற்பல காரியங்கள் செய்து, கடைசியில் வலி குறைந்து, உடல் மெலிந்து இறந்து போகிறார்கள். இந்த உடலின் தன்மை இதுவென்று அறியாமல், அநேகர் இதனிடத்திலே விசேஷமாகப் பற்றுவைத்து, இதைப் பெற்றிருப்பதே பரமாநந்தம் என்று நினைக்கிறார்கள்.

தம்முடைய சரீரத்தின் நிலையும், ஆன்மாவின் உண்மையும் இத் தன்மைய என்று நன்கு உணராதவர்கள் எந்த நாளும் கடைத்தேற மாட்டார்கள். எங்கும் இருப்பவரும், எல்லாம் உணர்ந்தவருமான கடவுள், உயிர்களுடைய மனத்தின் தன்மையையும் நன்றாய் உணர்ந்தவராதலின், வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் உண்மையை உணர்ந்துகொள்ளத்தக்க திறமை யாவர்க்கும் இராதென்று தெரிந்து, அசேதனங்களுக்கும் நியாயங்கள் நன்றாகத் தெரிவதற்கு ஓர் அறிகுறியாக, இந்த உலகத்தையும் இதில் பற்பல பொருள்களையும் படைத்திருக்கிறார். இவ்வுலகத்திலுள்ள மற்றைப் பொருள்கள் அழிவது போலவே, மனித சரீரங்களும் அழிந்துபடும். மரம், செடி முதலியவைகளெல்லாம் வசந்த காலத்தில் நன்றாய்ச்

செழிக்கவும், இலையுதிர் காலத்தில் அழியவும், மறுபடி வசந்த காலத்தில் தளிர்க்கவும் கடவுள் ஏற்படுத்தியிருப்பது, 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்பதை நமக்கு நன்றாகத் தெரிவிப்பதற்காகவேயென்று தெளிந்து, நற்கதி பெறுவதற்கு ஏற்ற நன்னெறியில் நடப்போமாயின் நமக்கு நிகராவார் உலகில் ஒருவரும் இரார் என்பது நிச்சயம்.

7. வறுமையிற் செம்மை — II

ஒரு நாள், கற்பரசியாகிய சுசீலை தன் கணவனார் அடிகளில் வணங்கி, யாதோ ஒன்றை அவரிடம் விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புவாள்போல் மயங்கி நின்றாள். குசேலர் அவளது அகத்துக் குறிப்பை முகத்திற் கண்டனர்.

> 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்'

என்பது உண்மையேயன்றோ! பின்பு,

குசேலர் — பெண்ணே சுசீலா, நீ இப்போது என்னிடம் வேண்டி நிற்பது யாது?

சுசீலை — என் ஆருயிர்த் தலைவரே, அடியாள் மனத்தில் நெடுநாளாக ஒரு விருப்பம் உண்டு; அது நமது சிறுவரைப் பற்றியதே யாகும். தேவரீர் திருவுளங்கொண்டு அதனைக் கேட்டருளல்வேண்டும்.

குசேலர் — அப்படியா, அது யாது? சிறுவரைப் பற்றிய செய்தி யாது? அவர்களுக்கு என்ன நேர்ந்தது?

சுசீலை — நமது சிறுவர் பிறந்த நாள்தொட்டு இதுகாறும் வறுமையென்னும் பிணியால் வருந்துகின்றனர்; வறுமையினும் கொடியது வேறொன்றும்

இல்லையே. 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்று, தேவரீரைப் போன்ற ஆன்றோர் கூறியிருப்பது தாங்கள் உணர்ந்ததே யன்றோ ?

குசேலர் — பெண் பேதாய், நீ அறியாமையால் வருந்துகின்றனை. அவரவர் செய்த நன்மை தீமைகளுக்கு ஈடாகச் செல்வமும் வறுமையும் வந்து சேரும்; நன்மை செய்தோர் நலம் பெற்று இன்பமடைவர்; தீமை செய்தோர் வறுமையுற்றுத் துன்பமடைவர். ஆதலால், நீ இதன்பொருட்டு வருந்துவது பேதைமையாகும்.

சுசீலை — தேவரீர் கூறுவது உண்மையே; ஆயினும், 'அன்னமயம் பிராணமயம்' என்பதும், 'பசிக்கு முன் பத்தும் பறக்கும்' என்பதும் தாம் அறியாதன அன்றே. நமது சிறுவருக்கு ஒரு நாளேனும் பசி தீர்ந்தபா டில்லையே ! அதனை யொழிக்க முயல்வது நமது முதன்மையான கடமை யன்றோ ?

குசேலர் — பெண்ணே, இவ்வுலகில் மனிதராய்ப் பிறந்தவர் ஒவ்வொருவரும் என்றும் நன்மையுறவே நாடுவர்; தம் நிலைமைக்கு மேம்பட்ட பதவிகளை யெல்லாம் அடைய எண்ணி மனோராஜ்யம் செய்வர்; அவையெல்லாம் அவர் எண்ணுமாறே எப்படி எய்தும்; எய்தாது, எய்தாது. ஆதலால், எல்லாம் தெய்வத் திருவருள் என்றெண்ணி, வினை யளவாகக் கிடைத்ததைக் கொண்டு அனுபவித்து, அமைந்திருத்தலே அறிவுடைமை யாகும்.

சுசீலை—என் ஆருயிர்த் தலைவரே, யாவும் வினைப் பயனாகத் தெய்வத் திருவருளினாலேயே அமைகின்றன. ஆயினும், ஒருவன் ஒரு பொருளை அடைய

விரும்பினால், அவன் அதன்பொருட்டுத் தக்கவாறு முயலவேண்டும்; முயன்றால், அதனை முட்டின்றி முடித்துவைப்பது அக் கடவுளின் கடமை யாகும். எல்லாவற்றையும் அவனருளே கூட்டிவைக்கும் என்றெண்ணி வாளா இருத்தல் ஏற்றதாமோ?

'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்'

என்பர் பெரியோர். பாற் சோற்றை வெள்ளியங் கலத்திலிட்டு முன் வைப்பின், அதனை எடுத்து அருந்தும் முயற்சியேனும் ஒருவற்கு வேண்டுமன்றோ? ஒருவன் உழுங் காலத்தே ஊர் திரிந்து, அறுக்குங் காலத்தே அரிவாளை எடுத்துக்கொண்டு சென்றால் என்ன பெறுவான்! ஆதலால், எதற்கும் முயற்சி வேண்டும்.

குசேலர் — ஆம், ஆம், முயற்சி வேண்டும் என்பது உண்மையே. அந்த முயற்சியால் இந்த மைந்தர்களைக் காக்கப் பொருள்தேடிவருக என்கின்றனையோ? அந்தோ, என்ன பேதைமை! காட்டில் திரியும் பல்வகை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மற்றுமுள்ள உயிர்களுக்கும் தினமோ வாரமோ மாதமோ ஏதேனும் வருமென்னும் நிச்சயம் உண்டோ? தாய் தந்தையர் தேடிவைத்த சம்பத்துண்டோ? அவைகள் தமக்கு அன்றாடம் தம் வினையளவாகக் கிடைக்கும் உணவை அருந்தி அமைந்திருக்க வில்லையோ?' அவை, 'இன்று நாம் பசி தீர்ந்தோம், நாளை என்ன செய்வோம்?' என்று நவிதலுண்டோ? அல்லது, நம் உறவினர் செல்வத்தாற் சிறந்து வாழ்கின்றனரே, அங்கே சென்று சில நாள் தங்கி வருவோம் என்று ஒன்றை

யொன்று பற்றிக்கொண்டு வாழ்தலுண்டோ? அல்லது, ஒன்று ஒரு பொருளைத் தேடுதலும், மற்றொன்று அதனை யுண்டு, இடிப்புண்டு வாழ்தலும் உண்டோ? இவ்வாறெல்லாம் பிழைப்பது மானிடர்க்கே யன்றோ இயல்பாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மாந்தரை-விட அப்படிப்பட்ட விலங்கு முதலிய உயிர்களே உயர்ந்தவையன்றோ?

சுசீலை — தேவரீர் கூறியவை யனைத்தும் உண்மையே; ஆயினும், நாம் அரிதிற்பெற்ற மக்கள் பசியால் படுந்துயர் சிறிதன்று. ஆதலால், அந்நோயைத் தீர்த்து, அவர்களைக் காப்பாற்ற முயலவேண்டும் என்பது ஒன்றையே அடியாள் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன். அடியாளுக்கென ஏதும் பெற எண்ண வில்லையே.

குசேலர் — பெண்ணே, யான் எவ்வாறு இவர்களைக் காக்கவல்லேன்? நம்மால் ஓர் உயிரைப் படைத்தலும், காத்தலும், அழித்தலும் இயலுமோ? இயலாதன்றே. அப்படி யிருக்க, இப் பிள்ளைகள்பொருட்டு நீ என் இப்படி வருந்தவேண்டும்?

கல்லினுள் சிறுதே ரைக்கும்
கருப்பைஅண் டத்து உயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லும்நின் மைந்தர்க் காவாது
ஒழிவனோ ஒழியான் உண்மை
மெல்லியல் கொண்ட துன்பம்
விடுவிடு மறந்தும் எண்ணல்.

சுசீலை — தேவரீர் உரைக்கும் நீதிகள் யாவும் உண்மையே. இப் பிள்ளைகளை நாம் இளமையிற்

பாதுகாத்தால், அவர்கள் நமது முதுமைப் பருவத்தில் நமக்கு வேண்டிய அன்னபானுதிகள் அளித்து நம்மைக் காக்கக் கடமைப்பட்டவர் ஆவரன்றோ?

குசேலர் — பேதாய், நீ அப்படியா நினைத்தனை! இஃது அறியாமை யாகும். இம் மைந்தர்கள் யார்? நீ யார்? இவையனைத்தும் உரைக்கும் யான் யார்?

‘மதலையைப் பெறுநாள் துன்பம்
வளர்த்திடு நாளும் துன்பம்
விதலைநோ யடையில் துன்பம்
வியன்பரு வத்தும் துன்பம்
கதமுறு காலர் வந்து
கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால்
என்றைக்கும் துன்ப மானல்.’

சுசீலை — என் இன்னுயிர்த் தலைவரே, ‘கடந்தபேர்களும் கடப்பரோ மக்கள்மேற் காதல்’ என்பர். அன்றி, கற்புடைய மடந்தையர்க்குக் காந்தனே கடவுள். அடியார் கொண்ட விருப்பத்தை அன்புடன் முடித்தருளும் ஆண்டவனேபோல், அடியாள் கொண்ட விருப்பத்தை முட்டின்றி முடித்துத் தருதல் தேவரீரது கடமையே யன்றோ?

குசேலர் — ஆம், அதற்கென்ன ஐயம், நீ இப்போது விரும்புவது யாது?

சுசீலை — பெருமானே, அடியாள் விருப்பம் நமது மக்களைப் பற்றியதே யாகும். தேவரீர் இளமைப் பருவத்தில் கண்ணபிரானேடு ஒருசாலை மாணுக்கராய்ச் சாந்தீப முனிவரிடத்தே சகல கலைகளையும் ஓதி உணர்ந்ததாகக் கூறுகின்றனர். ஆதலின், தேவ-

நீர் மனங்கொண்டு, அப் பெருமானிடம் சென்று, சிறிது செல்வங் கொணர்ந்து, நமது செல்வர்கொண்ட தீராத செல்லலைத் தீர்த்தருளல் வேண்டும்.

குசேலர் — பேதாய், இதுவோ நின் விருப்பம்! நன்று, நன்று! கற்பகத்தைச் சார்ந்தோர் காஞ்சிரங்-காயை விழைவதேபோல், கண்ணபிரானை யணுகிப் பொன்னையோ விரும்புவது? நின் புன்மதி இருந்த-வாறு வெகு நன்று!

'சிறியரோ மதிக்கும் இந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளோர் மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிறகு செவிட ராவர்
குறிபெறுங் கண்ணு ளாரும் குருடராய் முடிவர் அன்றே.'

இத்தகைய பொருளின் தன்மையை நீ அறிந்திலை போலும்? அன்றியும், வறியனொருவன் செல்வரிடத்-தில் சென்றால், அவனை அவர்கள் ஒரு பொருளாக மதியாது, அவன் மனம் கன்றுமாறு பேசுவர். 'இல்-லாரை எல்லாரும் எள்ளுவர்' என்பது உறுதி யுரை யன்றோ? தாய் தந்தையரும், மனைவி மக்களுங்கூட வறிஞனை வெறுப்பரெனின், மற்றையோர் வெறுப்பர் என்பதை வழுத்தவும் வேண்டுமோ? தரித்திரனாகிய ஒருவன் செல்வனாகிய சிநேகனொருவனைக் காணுமாறு சென்றால், அச் செல்வன், 'ஆகா, இவன் இன்று ஏதோ ஒன்றைப் பெறக் கருதி நம்மிடம் வந்தான் போலும்!' என்று உன்னி, அவ்வறியன் தன் மனங் கன்றி வருந்துமாறு, குறிப்புரைகள் பல கூறுவன். ஆதலால், செல்வரிடம் சென்று இவன் பெற்றது சிறு-மையே யாகும். உலகில் சாமானியர் செய்கை யிது; எல்லாம்வல்ல இறைவனாகிய கண்ணபிரான் இவ்வாறு செய்வரென்று யான் கூறுகின்றேனில்லை. அழிந்துபடும்

பொருளின்மீது நீ இச்சைகொள்வது ஏற்றதன்றென்பதை வலியுறுத்தவே இவை யனைத்துங் கூறினேன்.

சுசீலை — அடியாள் அந்தப் பொருளைச் சிறிதும் இச்சிக்கவில்லை; சிறுவர் படும் துன்பத்தைக் காண மனம் பொறுமல் அதனை விரும்பினேன், வேறன்று.

குசேலர் — 'அஃது எவ்வாறாயினும் ஆகுக; என்றும் அழிதலில்லாத இன்பவீட்டினை விரும்பினும் எளிதில் ஈயவல்ல இறைவனை யணுகி, இப் பொருட் செல்வத்தையோ ஏற்பது? நின் விருப்பத்தை நிறைவேற்ற ஒருவாறு மனங்கொண்டு செல்லலா மெனின், கையுறை ஏதேனும் வேண்டுமே! தெய்வ சந்நிதானத்திற்கும், ராஜ சமுகத்திற்கும், ஆசிரியர் பாலர் கர்ப்பஸ்திரீகள் முதலானவர்கள் உள்ள இடத்திற்கும் வெறுங் கையோடு ஏகலாகாதே. கண்ணபிரான், நமக்குக் கடவுளாகவும், காவல னாகவும், கடுநட்பினனாகவும் இருக்க, அப்புருஷோத்தமனிடம் கையுறை ஏதுமின்றி எவ்வாறு செல்வது?' என்று கூறினர்.

அதுகேட்ட சுசீலை உள்ளத்தில் உவகை பூத்து, தன் எண்ணம் பலித்ததென்று பூரித்து, அன்றுமுதல் உபவாச மிருந்து, அந்தணர் அரிதில் தேடிக்கொண்டு வரும் தானியத்தில், தன் பாகத்திற்கானதை எடுத்து ஒருபால் சேர்த்து வைப்பாளாயினள். பின்னர், ஒரு நாள் அவள் அத்தானியத்தை நீரில் நனைத்து, நன்கு ஊறவைத்து, பதமுற வறுத்து, உலக்கைகொண்டு வெள்ளிதாகக் குற்றி, கரிசு போக்கி, வெள்ளிய அவலாக்கி, அதனைக் குசேலருக்கு அறிக்கை யிட்டனள். அதுகேட்ட குசேலர் உவகைகொண்டு உளந்துணிந்து துவாரகைக்குச் செல்ல மனங்கொண்டனர்.

பின்னர் அக்கற்பரசி அந்த அவலை ஒரு கந்தை-யில்வைத்து முடிந்துக் கொடுத்து வணங்கி நின்றாள். குசேலர் அந்த அவற்பொதியை அன்புடன் ஏற்று, அடக்கஞ் செய்துகொண்டு, கண்ணபிரான் அமர்ந்து அரசுபுரியும் துவாரகையைநோக்கிச் செல்வாராயினர்.

8. மனோன்மணி

முற்காலத்தில் மதுரைமா நகரில் ஜீவகன் என்னும் பாண்டியன் ஒருவன் அரசு புரிந்து வந்தான். அவன் பளிங்குபோலக் களங்க மில்லாத நெஞ்சினன். அவன் மந்திரி குடிலன் என்பவன் ஒப்பற்ற சூழ்ச்சித் திறம் உடையவ னாயினும், முற்றும் தன்னயம் ஒன்றே கருதும் தன்மையனாக இருந்தான். அதனால், அரச-னுக்கு மிகவும் உண்மை யுடையவன்போல் நடித்து, அவனை எளிதில் தன் வசப்படுத்திக் கொண்டான். அங்ஙனம் சுவாதீனப் படுத்திய பின்பு, தன் மனம் போனபடியெல்லாம் அரசனை யாட்டித் தான் செல்-வமும், செல்வாக்கும் வளர்த்துக்கொள்ள, தொன்னக ராகிய மதுரை இடங்கொடாதென உட்கொண்டு, அந் நகரின்மேற் பாண்டியனுக்கு வெறுப்புப் பிறப்-பித்து, திருநெல்வேலி யென்னும் பதியில், கோட்டை கொத்தளம் முதலியன இயற்றுவித்து, அவ்விடமே தலைநகராக அரசன் இருந்து அரசாளும்படி செய்-தான். முதுநகராகிய மதுரையைத் துறந்து, கெடு மதியனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலைமையால் ஜீவகனுக்கு யாது விளையுமோ என இரக்கமுற்று, அவனுடைய குலகுருவாகிய சுந்தரமுனிவர் அவனுக்-குத் தோன்றாத் துணையாயிருந்து ஆதரிக்க எண்ணி,

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஓர் ஆச்சிரமத்தில் வந்து அமர்ந்தருளினர்.

2, முனிவர் எழுந்தருளி யிருப்பதை யுணர்ந்து, ஜீவகன், அவரைத் தன் சபைக்கு அழைப்பித்து, தன் அரண்மனை, கோட்டை முதலியவற்றைக் காட்டி, அவை சாசுவதம் என மதித்து வியந்துகொள்ள, அவ் விறுமாப்பைக் குறிப்பாகக் கூறியும் அரசன் அறியாதொழிய, அவன் குடும்பத்திற்கும் கோட்டை முதலியவற்றிற்கும் க்ஷேமகரமாகச் சில கிரியா-விசேஷம் செய்யும்பொருட்டு அவன் அரண்மனையில் ஓர் அறையைத் தம் சுவாதீனத்து விடும்படி கேட்டு, அதன் திறவுகோலை வாங்கிக்கொண்டு, தம் ஆச்சிரமம் போயினர். ஜீவக வழுதிக்குச் சந்ததியாக மனோன்-மணி என்னும் புத்திரி யொருத்தியே இருந்தனள். அப்பெண்மணி அழகிலும் நற்குண நற்செயல்களிலும் ஒப்புயர்வற்றவள்; அவளுக்கு அப்பொழுது வயது பதினாறாக இருந்தும், அவள் உள்ளம் குழந்தையின் கருத்தும் துறந்தோர் நெஞ்சமும் போல யாதொரு களங்கமும் பற்றும் அற்றதாய் நிர்மலமாகவே யிருந்-தது. அவளுக்கு உற்ற தோழியாக இருந்தவள் வாணி. இவள் ஒழுக்கம் தவறா உள்ளத்தினள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெரிந்தவற்றையே நம்பும் திறத்தினள்; அல்லனவற்றை யகற்றும் துணிவும் உடையள். இவ்வாணி நடராஜன் என்னும் அழக-மைந்த ஆனந்த புருஷன் ஒருவனை யறிய, அவர்கள் இருவர் உள்ளமும் ஒருவழிப்படர்ந்து அன்பு நேர்ந்-தது. அதற்கு மாறாக இவ்வாணியினது பிதா, மிக்க பொருளாசை யுடையோனாதலால், குடிலனுடைய மகன் பலதேவன் என்னும் துன்மார்க்கனுக்குத் தன்

மகளை மணம்புரியில், தனக்குச் செல்வமும் கௌரவமும் உண்டாமென்னும் பேராசைகொண்டு, அவ்வாறே அரசன் அநுமதி பெற்று, விவாகம் நடத்தத் துணிந்தனன். அதனால் வாணிக்கு விளைந்த சோகம் அளவற்றதாயிற்று. இச் சோகம் நீங்க மனோன்மணி பலவாறு ஆறுதல் கூறிவரும் வழக்கமுடையளாயிருந்தாள்.

3. இவ்வாறு இருக்கும்போது, முனிவர் கோட்டையைக் காண வந்தார். இரவில், ஈடுமெடுப்புமற்ற சேரதேசத் தரசனாகிய புருடோத்தம வர்மனைப் பூர்வ மலபரிபாகத்தால் மனோன்மணி கனைக்கண்டு இச்சை கொள்ள, அதுவே சுரமாகி அவள் உடலை வருத்தியது. அச் சுரம் இன்ன தன்மையதென்று உணராது வருந்தும் ஜீவகனுக்கு, தெய்வகதியாகத் தம் அறைக்கு மறுநாட் காலை வந்த முனிவர் மனோன்மணியின் மனநிலை இன்னது எனக் குறிப்பால் உணர்ந்து, அவள் நோய் நீங்கு மருந்து மணவினையே எனவும், அதற்கு எவ்விதத்திலும் பொருத்தமுடையோன் சேரதேசத்துப் புருடோத்தமனே யெனவும், அவ்வரசனது கருத்தினை நன்கு உணர்ந்து அம் மணவினை எளிதில் முடிக்க வல்லோன் நடராஜனே எனவும் உபதேசித்து அகன்றனர். வாணியினது காதலனாகிய நடராஜன்மேல் அவள் பிதா ஆரோபித்திருந்த அபராதங்களால் வெறுப்புக்கொண் டிருந்த பாண்டியன், அக் குருமொழியை உட்கொள்ளாதவனாய்க் குடிலனுடைய துன்மந்திரத்தை விரும்பினன். குடிலனோ தன்னயமே கருதுவோனாதலால், சேரதேசத்து அரசன் மருமகனாக வருங்காலத்தில், தன் சுவாதந்திரியத்திற்கு எங்ஙனம் கெடுதி வருமோ என்ற அச்சத்

தாலும், ஒருகால் தன் மகனாகிய பலதேவனுக்கே மனோன்மணியும் அவட்குரிய அரசாட்சியும் சித்திக்கலாகாதா என்ற பேராசையாலும், முனிவர் கூறிய மணத்தைத் தடுப்பதற்குத் துணிந்து, தொடக்கத்திற் பெண்வீட்டார் மணம்பேசிப் போதல் இழிவென்னும் வழக்கத்தைப் பாராட்டிப் புருடோத்தமன் மனக்கோள் அறிந்தே அதற்கு யத்தனிக்க வேண்டும் என்றும், அப்படி அறிதற்குப் பழைய சில விவாதங்களை மேற்கொண்டு ஒரு தூது அனுப்பவேண்டும் என்றும், அப்போது கலியாணத்திற்குரிய சங்கதிகளையும் விசாரித்துவிடலாம் என்றும் ஒரு சூது கூற, அதனை அரசன் நம்பி, குடிலன் மகன் பலதேவனையே இவ் விஷயத்திற்குத் தூதனாக அனுப்பினான்.

4. சேரதேசத்திலே புருடோத்தமன் தனக்குச் சில நாளாக நிகழ்ந்து வரும் கனாக்களில் மனோன்மணியைக் கண்டு விருப்புற்று, அவள் இன்னாளென வெளிப்படாமையால் மனம் புழுங்கி, யாருடனேனும் போர் நேர்ந்தால் அவ் வழியி லாயினும் தன் மனத்தைக் கொள்ளை கொள்ளும் கனா ஒழியாதா என்ற நோக்கத்துட னிருக்கும் சந்தியாக இருந்தது. அதனால், பலதேவன் சென்று, தன் பிதா தனக்கு இரகசியமாகக் கற்பித்தனுப்பியபடி, சேரன் சபையில் அகௌரவமான துர்வாதம் சொல்லவே, புருடோத்தமன் கோபமூண்டு, போர்க்கோலம் பூண்டு, பாண்டிய நாட்டின்மேற் படையெடுத்துப் புறப்பட்டான். அச் செய்தி யறிந்து ஜீவகனும் போருக்கு ஆயத்தமாகவே, இருபடையும் திருநெல்வேலிக்கு எதிரில் கைகலந்தன.

5. அப்படிப் போர் நடக்கும்போது பாண்டியன் சேனையின் ஒரு வியூகத்திற்குத் தலைவனாக இருந்த பலதேவனை அவன்கீழிருந்த ஒரு சேவகன் தன் வேலாலே தாக்க, அதனால் அவன் மூர்ச்சிக்கவும் படை முழுதும் குழம்பித் திகைத்து ஓடலாயிற்று. அப்படித் தாக்க நேரிட்ட காரணம் ஏதென்றால், பலதேவன் மனம் போனவழி நடக்கும் துன்மார்க்கனாதலால், அப் படைஞனது சகோதரியை வலுவில் மணக்கக் கருதியதால் உண்டான வைரமே என்பது, படைஞன் வேலாற் பலதேவனைத் தாக்கியபொழுது கூறிய வன்மொழியாலும், அவன் தங்கைக்கு அரண்மனையினின்றும் பலதேவன் திருடிப் பரிசாக அளித்த ஒரு பொற்றொடி அவன் கையில் அக் காலம் இருந்தமையாலும் வெளிப்பட்டது. படைநியதி கடந்த அச் சேவகனை அருகு நின்ற வீரர் அக்கணமே கொன்றுவிட்டார்கள். பலதேவனும் மூர்ச்சை தெளிந்துகொண்டான். ஆயினும், படையிற் பிறந்த குழப்பம் தணியாது பெருகிவிட்டதனால், பாண்டியன் சேனை சின்னபின்னப்பட்டுச் சிதறுண்டு ஜீவகன் உயிர் தப்புவதும் அரிதாகும்படி தோல்வி நேர்ந்தது. சத்தியவாதியாகிய நாராயணன் என்னும் சுத்தவீரன் அக்காலம் வந்து உதவிசெய்திராவிடில் அப் போர்க்களத்தில் ஜீவகன் மாண்டே யிருப்பான்.

6. இந்த நாராயணன் யாரென்றால் நடராஜனுடைய நண்பனாவான். இவன் குடிலனுடைய சூதுகள் தெரிந்தவன். அரசன் நிந்தித்துத் தள்ளினும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனை விட்டு நீங்காது, மதுரையினின்றும் அவனோடு தொடர்ந்து வந்த பரோபகாரி. குடிலன் இவனது திறமும் உண்மையும்

அறிந்துளா னாதலால், இந் நாராயணன் போர்முகத்திருக்கில் தான் எண்ணியபடி ஜீவகனுயிருக்குக் கேடு வரவொட்டான் எனக் கருதி, சண்டை ஆரம்பிக்கு முன்னமே அவனைக் கோட்டைக் காவலுக்காக நியமித்து அனுப்பினான். ஆயினும், அப் போர்க்களமே கண்ணாக இருந்த நாராயணன், சேனையிற் குழப்பம் பிறந்தது கண்டு, சில குதிரைப்படைகளைத் திரட்டிக்கொண்டு திடீரென்று பாய்ந்து சென்று, அரசனையும் எஞ்சின சேவகரையும் காப்பாற்றிக் கோட்டைக்குக் கொண்டுவந்து விடுத்தான்.

7. சுத்த வீரனாகிய அரசன் இங்ஙனம் தான் பகைவருக்கு முதுகிட்ட இழிவை நினைந்து நினைந்து, துக்கமும் வெட்கமும் தூண்டவே, தற்கொலை புரிய யத்தனிக்கும் எல்லை, நாராயணன் மனோன்மணிக்கு வேறு ஆதரவின்மையை அரசனுக்கு நினைப்பூட்டி, அக்கொடுந் தொழிலிலிருந்து விலக்கிக் காத்தான். அவனது நயவுரையால் அரசன் ஒருவாறு தெளிவடைந்திருக்கும்போது, சேரன் விடுத்த தூதுவன் ஒருவன் வந்து, ஒரு குடம் தாமிரவர்ணி நீரும், ஒரு வேப்பந்தாரும், போரிலே தோற்றதற்கு அறிகுறியாகக் கொடுத்தால் சமர்நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாட் காலையிற் கோட்டை முதலிய யாவும் வெற்றிடமாம்படி தம்பைசூடிப் போர் முடிப்பதாகவும் கூறினான். போரில் ஒரு முறை தான் புறங்கொடுத்த புகழ்க்கெடுதியை உயிர்விடுத்தேனும் நீக்கத் துணிவு கொண்ட ஜீவகன், அதற்கு உடன்படாமல் மறுத்துவிட்டு, பின்னும் சமருக்கே யத்தனித்துத் தனது அரண்களைச் சோதித்து நோக்குங்கால், அவை ஒரு நாள் முற்றுகைக்கேனும் தகுதியற்றபடி அழிந்து

இருப்பதைக் கண்ணுற்று, அவ்வளவாகத் தன் படை முற்றும் தோற்க நேரிட்ட காரணம் குடிலனோடு வினவலாயினன். தன் கருத்திற்கெதிராக அரசனைக் காப்பாற்றிவரும் நாராயணன் மேல் தனக்குள்ள பழம் பகை முடிக்க இதுவே தருணம் எனக்கண்டு, அரண் காவலுக்கு நியமிக்கப்பட்ட நாராயணன் காவல் விடுத்துக் கடமை மீறி யுத்தகளம் வந்ததே காரணமாகக் காட்டி, கோபமூட்டி, படையிற்பிறந்த குழப்பத்திற்கு ஏதுவாகப் பலதேவனை ஒரு சேவகன் வேலால் தாக்கினதும் தெரிவித்து, அதுவும் வியூகத் தலைவனை ஆக்கப்பெறாத பொறாமையால் நாராயணன் ஏவிவிட்ட காரியமே எனவும், அந்தத் தொழிலிற்குப் பரிசாக அவன் அரண்மனையினின்றும் திருடிக் கொடுத்ததே அவன் கையிலிருந்த அரண்மனை முத்திரை பொறித்த பொற்றொடி எனவும், குடிலன் ஒரு பொய்க் கதை கட்டி, அதனை அரசன் நம்பும்படி செய்தான். அவ்வாறே களவு, கொலை முதலிய குற்றங்களை நாராயணன் மேற் சுமத்த, அவற்றிற்காக அவனைக் கழுவேற்றும்படி விதியும் பிறந்தது.

8. இத் தருணத்திற் சுந்தரமுனிவர் அத்தியந்த ஆவசியகமான ஓர் இரகசியாலோசனைக்கு அரசனை அழைப்பதாகச் செய்தி வந்தமையால், நாராயணனை அவ் விதியின்படி கழுவேற்றவில்லை. முனிவர் இப்போது வந்த காரணம் என்னவென்றால், ஜீவகன் குடிலன் வசத்தனாய் நெல்வேலிக் கோட்டையே சாசுவதமென இறுமாந்திருந்தமை கண்டு, பரிதாபங்கொண்டு, தமக்கென இரந்து வேண்டிக்கொண்ட அன்று முதல் தம் ஆச்சிரம வெளிவரையும், ஆபத் காலத்தில் உபயோகமாக அதிரகசியமான ஒரு சுருங்கை உழைத்-

துச் சமைத்துக் கொண்டு பற்றுக்கோடற்று நின்ற ஜீவகனையும் அவன் மகளையும் கேடுற்ற கோட்டையி-னின்றும் தமது ஆச்சிரமத்திற்கு அச் சுருங்கைவழி அழைத்துச் செல்லும்பொருட்டே யாகும்.

9. கோட்டையின் நிலையாமையை யுணர்ந்தும், அதன்மேல் வைத்த அபிமானம் ஒழியாமையால், அஃதுடன் தான் முடியினும் இன்னும் ஒரு முறை போருக்கஞ்சிப் புறங்கொடுத்தல் தகாதென ஜீவகன் துணிந்து மறுக்க, மனோன்மணி, பாண்டியர் குலத்-திற்கு ஏக சந்ததியாக இருப்பதனால் மற்றையர் எக்கேடுறினும் அவளையேனும் காப்பாற்றுதல் தம் கடமையென ஒருதலையாக ஒறுத்து முனிவர் கூற, மன்னன் அங்ஙனம் இயைந்து நடுநிசியில் முனிவரோடு தன் மகளை ஆச்சிரமம் அனுப்புவதாக ஒப்புக்கொண்-டான். முனிவரும் சம்மதித்து அகன்றார். உடனே நிசாமுகம் தோன்றிற்று. தன் அருமை மகளைப் பிரி-யும் வருத்தம் ஒரு புறமும், பிரியாதிருக்கில் அவட்கு உண்டாகும் கெடுதியைக் குறித்த அச்சம் மற்றொரு புறமுமாக ஜீவகன் சித்தத்தைப் பிடித்தலைக்க, கலக்க-முற்று, குருமொழியிலும் ஐயம்பிறந்து, குடிலனை வர-வழைத்து, முனிவர் அதிரகசியமாகக் கூறிய சுருங்கை முதல் சகல சங்கதியும் தெரிவித்து, அவனது அபிப்-பிராயம் உசாவுவானாயினன். அதற்கு அப் பாதகன் இதுவே தன் மனக்கோள் நிறைவேறற்கு ஏற்றகாலம் எனத் துணிந்துகொண்டு, மனோன்மணியை இடம் பெயர்ப்பது தற்கால நிலைமைக்கு எவ் விதத்திலும் உத்தமமெனவும், ஆயினும், மணவினை முடியா முன்-னமே அனுப்புதலால், கன்னியாகிய அவளுக்குப் பழிப்புரைக்கு இடமாவதே யல்லாமல், அரசனுக்குச்

சற்றும் சித்த சமாதானத்திற்கு இடமில்லை யெனவும் சொல்லி, அவன் நெஞ்சில் சஞ்சலம் விளைவித்து, ஜீவகன் தானாகவே பலதேவனுக்கு மனோன்மணியை அன்றிரவே கலியாணம் செய்துகொடுத்து, முனிவர் ஆச்சிரமத்திற்கு மகளையும் மருமகனையும் சேர்த்து அனுப்புவதாகத் துணியும்படி தூண்டிவிட்டு, தான் நெடுங்காலமாகக் கொண்டிருந்த அபிலாஷையைப் பூர்த்திப் படுத்திக்கொண்டான்.

10. ஆயினும், அவ்வளவோடு நில்லாமல், தன்னை யறியாமல் முனிவர் வகுத்த கள்ள வழியைக் கண்டறிய வேண்டுமென்று விருப்புற்று, அது அவர் வந்த அன்றே தமக்காகப் பெற்றுக்கொண்ட அறைக்குச் சம்பந்தப்பட்டு இருப்பதே இயல்பென ஊகித்து, அவ்வறையிற் சென்று நோக்கி, அச் சுருங்கையைக் கண்டுபிடித்து, அவ் வழியே போய் வெளியேறிப் பார்க்குங்கால், சத்துரு பாசறை அருகே தோன்றிற்று. அன்று பகலில் தன்மகனுக்குச் சண்டையில் நேரிட்ட மோசடி போலத் தனக்கும் இனி வரக் கிடக்கும் கொடும்போரில் உட்பகையாலோ வெளிப்பகையாலோ யாதேனும் அபாயம் நேரிட்டுவிடலாமென்ற பயத்தாலும், மனோன்மணி விவாகம் எப்படியும் அன்றிரவே நடந்தேறுமென்ற துணிவாலும், நடந்தேறில் ஜீவகனது பிரீதியால் சித்திக்கத்தக்கது வேறொன்றும் இல்லை யென்ற உறுதியாலும் கோட்டைக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் விடுபட்டது. தான் வருந்திக் கண்டுபிடித்த கற்படையைச் சேரனுக்குக் காட்டி, அவ் வழியே அவனை அழைத்துச் சென்று யாதோர் உயிர்ச்சேதத்திற்கும் இடமில்லாமல், பாண்டியனையும் அவன் கோட்டை

வினையும் சுலபமாகப் பகைவன் கையில் ஒப்பித்து-விட்டால், ஒரு குடம் ஜலத்திற்கும் ஒரு பூமாலைக்கு-மாகச் சமரை நிறுத்தித் தன்னூருக்குத் திரும்ப எண்ணிய சேரன், தன்னையே முடிசூட்டிச் சிங்கா-தனம் சேர்க்காதொழிவனு என்னும் பேராசை பிடர் பிடித்து உந்தவும், ஊழ்வலி ஒத்து நிற்கவும் அத் துரோகியாகிய குடிலன், மெள்ள மெள்ளப் பாசறை நோக்கிப் போகவே, கனவில் மனோன்மணியினது உருவங் கண்டு விருப்புற்ற நாள்முதலாக யாதொன்-றிலும் மனஞ்செல்லாதவனுய் இரவெல்லாம் நித்திரை-யற்றுத் தனியே திரிந்து வருந்தும் புருடோத்தமனை நடுவழியிற் சந்தித்துக்கொண்டான். அதுவும் தனது பாக்கியக் குறியாகவே மதித்து மகிழ்ந்த குடிலன், எதிர்ப்பட்ட சேரனிடம் தனது துரோக சிந்தனையை வெளிப்படுத்த, தன்னயங் கருதாச் சதுரனுகிய புரு-டோத்தமன், தனது சேவகரைக் கூவிக் குடிலன் காலி-லும் கையிலும் விலங்கிடுவித்து, 'வீரமே யுயிராக வுடைய வஞ்சி வேந்தருக்கு வெற்றியன்று விருப்பு, இவ்வித இராஜ துரோகிகளைக் காட்டிக் கொடுத்து மாற்றலராகிய மன்னவரையும் இரட்சித்துப் பின்பு வேண்டுமேற் பொருது தமது வீரம் நாட்டலேயாம்' என அவனுக்கு விடை கூறி, அவன் கூறிய சுருங்கை வழியே ஜீவகன் சபைக்கு வழிகாட்டி வரும்படி கட்-டளை யிட்டான். இம்மொழி கேட்ட பாவி, இடி-யொலி கேட்ட பாம்புபோல், திடுக்கிட்டுத் திகைத்து நின்றான். ஆயினும், தானிட்ட கட்டளை மீறில் சித்திர வதையே சிக்ஷையாமென்று சேரன் சினந்து கூற, அதற்கு அஞ்சி அவ்வாறே கற்படைக்கு வழிகாட்டி நடப்பானுயினன்.

11. இப்பால் ஜீவகன் தன் மகளைப் பலதேவனுக்கு மணஞ் செய்வித்து, இருவரையும் முனிவர் ஆச்சிரமம் அனுப்புவதே தகுதியெனத் தெளிந்தவாறே இச்செய்தியை மனோன்மணிக் கறிவிக்க, அது அவள் செவிக்குக் காய்ச்சின் நாராசம்போல் இருந்ததாயினும், தன் பிதாவுக்கு நேர்ந்த ஆபத் காலத்தை நன்குணர்ந்து அவனுக்கேற்றபடி நடந்து, அவனைத் தேற்றுவதே தற்கால நிலைக்கு ஏற்ற தனது கடப்பாடு எனத் தெளிந்து, அங்ஙனம் ஒப்புக்கொண்டதுமன்றி, தன்பாடு எங்ஙனமாயினும், தன்னைச் சார்ந்தவர் சுகத்தைப் பாராட்டும் பெருங் குணத்தால் காதல்கொண்டிருக்கும் வாணி தன் கருத்திற்கிசைய நடராஜனை மணம் செய்துகொள்ளவும், நெடுங் காலமாகத் தன் குடும்ப ஊழியம் தலைக்கொண்டு நின்ற நாராயணன் செய்த தவறு யாதேயாயினும் அதைப் பொறுத்து அவனைச் சிறைவிடவும், தன் பிதாவினிடம் விரும்பிக் கேட்டுக்கொண்டனள். அப்படியே ஜீவகன் அநுமதி கொடுத்து, அகமகிழ்ந்து மணவினைக்கு ஆயத்தம் செய்யவே, நடுநிசி சமீபிக்க, முனிவரும் நடராஜனும் வந்து சேர்ந்தார்கள். தாம் போய் மீளுவதற்குள் குடிலன் செய்த துராலோசனையும், அதற்கு உடன்பட்ட மன்னவனுடைய ஏழைமையும், கருணைவிலாசம் இருந்தமையும் கண்டு வியந்து, அரசன் நிச்சயித்தவண்ணமே நடத்தச் சுந்தரர் இசைந்தார்.

12. கற்படைக்கு அருகிலுள்ள மணவறையை விவாக முகூர்த்தத்திற்கு இசைந்தவாறு அலங்கரித்து, அதில் குடிலன் ஒழிய மற்ற மந்திரி பிரதானிகளுடன் முனிவர் ஜீவகன் நடராஜன் பலதேவன் நாராயணன்

முதலிய அனைவரும் கூடிக் குடிலன் வரவிற்குச் சற்று எதிர்பார்த் திருந்தும், வரக் காணாமையால், மண-வினைச் சடங்குகள் தொடங்கி, பலதேவனுக்கு மாலை சூட்ட மனோன்மணியை வரவழைக்கும் எல்லை, குடி-லன் வழிகாட்டக் கற்படை வழிவந்த புருடோத்த-மனும் முனிவர் அறையில் வந்து சேர்ந்து, அடுத்த அறையாகிய மணவறையில் நடக்கும் ஆகோஷம் என்ன வென்று நோக்கவே, தன் திரைவிட்டு வெளி வந்து பலதேவனெதிரே மணமாலையும் கையுமாய்ச் சித்திரப் பிரதிமைபோல உணர்வற்றுச் செயலற்று நின்ற தன் காதலியாகிய மனோன்மணியைக் கண்-ணிரண்டும் களிக்கக் காணலும், பள்ளத்துட் பாயும் பெருவெள்ளம்போல், அவாப் பெருகி யீர்த்தெழ, திடீரென்று கடிதிற் குதித்து யாரும் அறியாது சபை-யுட் புகுந்து, கரையற்ற சோகத்தால் மனமிறந்து நின்ற மனோன்மணியின் கண்முன் சென்று நின்றனன்.

13. தன்னுள்ளத் திருந்த தலைவன் இங்ஙனம் பிரத்தியக்ஷப்படலும், அக்கணமே ஆனந்தபரவசப்-பட்டு, மனோன்மணி, தான் கைக்கொண்ட மண மாலையை அவன் கழுத்தோடு சேர்த்து, தற்போதம் இழந்து, அவன் தோள்மேல் வீழ்ந்து மூர்ச்சை யாயி-னள். இங்ஙனம் அயலான் ஒருவன் சபையுட் புகுந்-ததும், மனோன்மணி அவனுக்கு மாலைசூட்டி மூர்ச்-சித்ததும் கண்டு, ஜீவகனுதியர் திடுக்கிட்டுச் சூதெனக் கருதி, பொருதற் கெழுங்கால், சுந்தரமுனிவர் கை-யமைத்துச் சமாதானம் பிறப்பிக்க, புருடோத்தமன், குடிலன் தன்னிடத்தில் வந்து கூறிய துரோகசிந்தனை-யும், தான் அதற்கிசையாது அவனையே கால்யாப்பிட்டு ஜீவகனிடம் ஒப்பிக்கக் கொணர்ந்தமையும் கூறி,

குடிலனை விலங்கும் காலுமாகச் சபை முன் நிறுத்தி-விட்டுத் தனக்கு உயிர்நிலையாக நின்ற மனோன்மணி-யுடன் பாசறைக்கு மீள யத்தனிக்குமளவில், சுந்தர முனிவர் ஆஞ்ஞையால் ஜீவகன் மனந் தெளிந்து, மக-ளையும் மருமகனையும் வாழ்த்த, அதுகண்ட யாவரும் கண் படைத்த பெரும் பயனடைந்து, அருட் டிறம் புகழ்ந்து ஆனந்தம் அடைந்தனர்.

9. மின்வாங்கிகள்

மின்னலை வாங்கிக்கொள்ளும் பொருள்களுக்கு மின் வாங்கிகள் என்று பெயர். உலோகத்தினால் செய்யப்-பட்ட கம்பிகளைக் கட்டடங்களின் உன்னத ஸ்தா-னங்களிலிருந்து பூமிக்குள்ளே அழுந்தி யிருக்கும்படி பதித்து வைப்போமானால், அந்தக் கட்டடங்களுக்கு மின்னலால் சேதம் உண்டாவதில்லை என்னும் உண்-மையை அனுபவத்திற் காண்கிறோம். இதன் காரணம் எளிதில் புலப்படும்: உலோகக் கம்பிகளை நிலத்தோடு சம்பந்தப்படும்படி அமைத்திருந்தால்மட்டுமே மின்-சாரம் அக் கம்பிகளின் மார்க்கமாய்ப் பூமிக்குள் செல்-லுகிறது என்றும், அவ்வா றின்றி உலோகங்களினால் செய்யப்பட்ட கம்பிகளுக்குப் பதிலாகக் கண்ணாடிக் கம்பிகளை வைத்திருந்தால் மின்சாரம் அவற்றின் வழி-யாய்ப் பூமிக்குள் செல்லுகிறதில்லை என்றும் சாஸ்திரிகள் கண்டறிந்திருக்கின்றனர். நாம் நமது கைவிரலை நீட்டி, மின்பொறி பறக்கும்படி மின்யந்திரத்தைக் கையாடி, ஒரு கையில் உலோகக் கம்பியை எடுத்துக்கொண்டு, அதன் நுனியில் மற்றொரு கையின் விரல் பொருந்தும்-படி செய்து, இவ் விரண்டையும் அந்த யந்திரத்தின் பிரதான மின்வாங்கிக்கு அருகே பிடிப்போமானால்,

மின்னின் ஒரு பொறிகூட நமது கையில் ஏருமல் உலோகக் கம்பிக்குச் செல்லுவதையும், அக் கம்பி நீளமாயிருந்து நிலத்தோடு சம்பந்தித்திருக்குமானல் மின்சாரம் அதன்வழியாய்ச் செல்லுமாகையால், நமது தேகத்திற்குள் புகுகிறதில்லை என்பதையும் காணலாம். இவ்வாறின்றி, உலோகக் கம்பிக்குப் பதிலாகக் கண்ணுடிக் கம்பியை மேற் சொன்னவண்ணம் வைத்துப் பார்த்தால், மின்சாரம் அதில் பற்ருமல் விரலில் தாவி நமது தேகத்தின் வழியாகப் பூமிக்குள் செல்லுவதை நாம் காண்போம். ஆதலால், மின்னலும் இடியும் அதிகமாகப் பெரும்புயலடிக்குங் காலத்திலும், நமக்கருகே உலோகக் கம்பியை நாட்டியிருப்போமாயின், மேலே காட்டியவண்ணமே அது நம்மைத் தொடாமல், அந்தக் கம்பியின் வழியாகப் பூமிக்குள்ளே செல்லும். அவ்வாறின்றிக் கண்ணுடிக் கம்பியை நம்மண்டை நாட்டியிருப்போமாயின், மின்சாரம் அதில் செல்லாமல், நமது தேகத்தின் வழியாகப் பூமிக்குட் செல்லுமாகையால், பெரும்பான்மையாய் அபாயத்திற்கு இடமாகும். மின்வாங்கிகளின் கூறுபாடு இத்தன்மைத்து. மின்சாரத்தை வாங்குவதற்கு ஏற்றவை எவையோ அவற்றின் வழியாகத்தான் அது செல்லும். சாதாரணமாய் நாம் நமது வீடுகளைக் கட்டுவதற்கு உரியவைக ளாகிய கல், மரம் முதலியவற்றைவிட உலோகங்கள் மின்சாரத்தை எளிதில் கவர்வதற்கு ஏற்றவைகளாதலால், அவற்ருல் செய்யப்பட்ட நெடுங் கம்பிகளை நமது வீடு முதலியவற்றின் உச்சிக்குமேல் நின்று நிலத்தோடு சம்பந்தப்படும்படி நாட்டி வைப்போமானல், அவற்றிற்கு மின்னலால் தீங்கு விளையாது. கம்பி எவ்வளவுக்கெவ்வளவு உயரமோ அதற்கு

இரட்டிப்பான தூரமுள்ள சுற்றுப்புறம் இடி விழாமல் ரக்ஷிக்கப்படுகிறது என்று அறிஞர் பரீக்ஷித்து அறிந்திருக்கிறார்கள். ஐம்பதடி உயரமுள்ள கம்பி வைக்கப்பட்டிருந்தால், அக்கம்பியைச் சுற்றிலும் நூறு அடி வரைக்கும இடிவிழாது. மின்னலின் கூறுபாட்டை அறிந்துகொள்வதனால், அதனாலுண்டாகும் அபாயத்தினின்றும் நாம் விலக வழியுண்டு.

2. ஆகாயத்தில் மின்தாது ஒன்றாய்ச் சேர்வதனால் கல்மழை பெய்யுமென்று, பிரான்சு தேசத்தார் தங்கள் திராக்ஷைமத்தியம் காய்ச்சுகிற இடம் சேதப்படாதபடி அங்கே மின்வாங்கிக் கம்பங்களை நாட்டி வைப்பது உண்டு. ஆராகோ என்னும் வித்துவான் ஒருவர், அக் கம்பங்கள் உயரமாய் இருக்கவேண்டும் என்றும், மற்றும் அவற்றோடு மின்யந்திரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன் கம்பிகளாவது சங்கிலிகளாவது அவற்றினின்றும் பூமியோடு சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார். விநோதமான மற்ற மின்வாங்கிகளைப் போலவே இதுவும் நன்றாய்ப் பயன்படுகிறதென்றாலும், அதிக விலைபெற்றதாகையால், இதை நாடெங்கும் வாங்கி வைப்பதற்கு வாய்க்கவில்லை. சிறிய பெண்குழந்தை ஒன்று தன் தலையில் வைத்திருந்த பொன்னூசியும், ஒரு சீமாட்டி தன் கையில் அணிந்திருந்த கடகமும் மின்னலால் உருகிப் போயிற்றே அன்றி, அதனால் அவற்றைத் தரித்திருந்தவர்களுக்குத் தீங்கொன்றும் நேரவில்லை. வேட்டை யாடுகிறவர்கள் தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்களில் இரும்பு சேர்ந்திருப்பதனால் அவர்களுக்கு மின்னலால் அபாயம் ஏற்படுவதுண்டு. இதைப்பற்றித்தான் வித்துவான் ஒருவர், பாதி பரிகாசமா-

கவும் பாதி மெய்யாகவும், 'மின்னும்போது நடக்கிறவர்கள் தங்கள் கைக்குடையோடு உலோகத்தினுற் செய்யப்பட்ட கம்பியொன்றைச் சேர்த்து வைத்திருக்க வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். குடையின் நுனிப்பூணினின்று கூரிய கம்பியொன்றைச் சேர்த்துக் கட்டி அதற்கு மேலே ஆகாயத்தை நோக்கி நிற்கும்படி செய்து, அந்தப் பூணினின்று நமது பின்பக்கமாய் நிலத்திற் பரவும்படி மெல்லிய கம்பிகளைத் தொங்கவிட் டிருப்போமானால், நம்மைச் சுற்றிலும் மின்னலும் இடியும் எவ்வளவுதான் மின்னிக் குமுறினும் நாம் சற்றுவது அவற்றிற்கு அஞ்சவேண்டுவதில்லை. அதிகமாய் மின்னும் காலத்தில் நாம் மின்வாங்கிகள் இல்லாத இடத்தை விட்டு விலகி, சிறந்த மின்வாங்கிகள் நிலத்தோடு பொருத்தப்பட்டிருக்கும் இடத்தைத் தேடிச் செல்லவேண்டும். உருக்குச் சீரா கவசம் முதலியவைகளை அணிந்துகொண்டிருப்பவனுக்கு அதுவே அவனைச் சுற்றிலும் நல்ல மின்வாங்கியாகின்றமையால், அவனுக்கு மின்னலால் அபாயம் உண்டாகாது; இதனோடு அவனுடைய பாதரக்ஷையின் அடிப்புறத்தில் கூரிய இருப்பு முட்களும் நிலத்தில் படும்படி பொருத்தி வைக்கப்படுமானுல் அவனுக்கு மின்னலால் சற்றேனும் அச்சம் வேண்டா என்பது நிச்சயம்.

3. மின்னும்போது மரம் முதலியவற்றண்டை நாம் நிற்கலாகாது. ஏனெனில், மின்சாரம் எப்போதும் உன்னதமானவற்றையே தாவி வரும். அப்படி உயரமுள்ள பொருள்கள் மனிதர்களிலும் சிறந்த மின்வாங்கிகளாக இராவிட்டால், அவற்றினருகேயுள்ள மனிதர்களின்மேல் பாயுமாதலால், விலகி நிற்பதே உத்தமம்.

10. வறுமையிற் செம்மை — III

அருந்ததி, அநசூயை முதலிய கற்பரசிகளும் தொழுது எத்தும் தெய்வம் போல்பவளாகிய சுசீலை முடிந்து கொடுத்த அவற்பொதியினை ஏற்று, கண்ணபிரானைக் காணச் செல்லுங் குசேல முனிவர், தம் நாட்டை விட்டு வழியிலிருந்த வனங்களையும், குன்றுகளையும் அரிதிற் கடந்து சென்று, ஒரு பாலைவனத்தின் எல்லையை யணுகினர்.

2. அவர் அந்தச் சுரத்தைக் கண்டு, உள்ளம் நடுங்கி, 'அந்தோ, இவ் வெப்பத்தினை ஊழித் தீக்கு உவமை கூறினும் ஒவ்வாதே! செல்வஞ் சிறந்தும் தினையளவும் ஈயாத புல்லரைப் பாடிப் பரிசு பெருமல் திரும்பிவரும் புலவர் மனத்திற்கு இதனை உவமை கூறுதல் ஒருவாறு அமைவுடையதாகும். இனி, என்ன செய்வது! இதனை எவ்வாறு கடந்து செல்லுவது!' என்று மயங்கி நின்று, ஒருவாறு தேறி, அப் பாலை வனத்தைக் கடந்து, அப்பால் நடக்கையில், கிளைவழி யொன்று குறுக்கிட்டது. முனிவர் அதைக் கண்டு மயங்கினர். பின்னர் உய்த்துணர்ந்து சென்று, மேலைக் கடற்கரையை அடைந்தனர்.

3. அங்கே துவாரகைக்குச் செல்லுவோர் சிலர் மரக்கலத்தில் ஏறுவதைக் கண்டு, 'ஓகோ, இதற்கு யாம் என்ன செய்வது! இக் கலம் உகைப்பவனுக்குக் கூலி கொடுத்தல் வேண்டுமே! நம்மிடம் இம்மியும் இல்லையே!' என்று எண்ணி, இன்சொல் பல இயம்பினர். நல்லோர் தரிசனத்தால் நற்குணம் அடைந்த அப்பட்கோட்டி, குசேல முனிவரிடத்தில் பேரன்பு பூண்டவனாய், அவரைத் தன் மரக்கலத்தில் ஏற்றிக்-

கொண்டு போய், துவாரகைப் பதியின் துறைமுகத்தில் இறக்கினன்.

4. துவாரகைக் கரையில் இறங்கிய முனிவர், கண்ணனையே கண்டாற்போல் பெருமகிழ் வடைந்து, அரண்மனையை நோக்கிச் செல்லுவாராயினர். அவர் ஆண்டுத் தோன்றிய சிறப்புக்களைக் கண்டு, இறும்பூது எய்தினர். பின்னர், அப் பெரியார், கண்ணபிரானது அரண்மனையை அடைந்து, அங்கிருந்த கடைக்காவலரை நோக்கி, 'மக்களுள் மிக்க மாதவ முடையீர், யானோர் அந்தணன், குசேலன் என்னும் பெயரினன், கண்ணபிரானோடு இளமையில் சாந்தீப முனிவரிடத்து ஒருசாலை மாணாக்கனாய் வாசித்தவன்; ஆதலின், எனது வரவைத் தயைசெய்து அப் பெருமானுக்கு அறிவித்தல் வேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர்.

5. அங்கு நின்ற காவலரிற் சிலர் குசேலர் முனிவர் கூறிய செய்திகளைக் கேட்டு, வயிறும் புண்பட நகைத்து, 'ஏ பிராமண, நீயும் நின் கோலமும் இருந்தவாறு நன்று நன்று! நீ அரசவையை அடையுமாறு நினைத்ததும் வெகு நன்று! மூப்பின் மிகுதியால் பகுத்துணர்வு அற்றனைபோலும்! அந்தோ நின் புன்மதி இருந்தவாறு என்னே!' என்று இழித்துக்கூறி, மற்றுஞ் சொல்லுவர்: 'மணிமுடிதரித்த மன்னர் பலர் ஈண்டு நெடுங்காலமாகக் காத்திருந்தும், அரசரைக் காணும் அமயமறியாது வாடி நிற்கின்றனர், காணாய்! நின் நிலையையும் எமது நிருபர் நிலையையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து, யானையும் எறும்பும் போலும்! அது நிற்க, அரசவையை அடைய விரும்புவார்க்குவேண்டிய சிறப்புக்களுள் ஒரு சிறிதுமற்ற நீ அரசனை எவ்வாறு

காண்பை ? பாலிய சிநேகம் என்கின்றனையே, அதனை அவர் உளத்திற் கொண்டிருப்பாராயின், ஒரு முறை-யேனும் அவர் உன்னைக் காண விரும்பி யிராரோ? அந்தோ, வீணே வருந்தினை! மெய்யும் இளைத்தனை! பேரவா பிடர் பிடித்துத் தள்ள வந்தனை போலும்!' என, முனிவர் மனங் கன்றுமாறு, இழி மொழிகள் பற்பல இசைத்தனர். பின்னும் அவர்கள், 'அந்தண், இதோ காணுய், இவர் அயோத்தி அரசர்; இவர் கோசல நாட்டுக் கோமான்; இவர் மகத நாட்டு மன்னர்; இவர் கலிங்க நாட்டுக் காவலர்; இன்னோர் அனைவோரும், நாள் பலவாகியும், மன்னர் திருமுன் நண்ணுதற்கின்றி, வாட்டமுற்று வருந்தி நிற்கின்றனர். இவர்களை நோக்குமிடத்து நீ என்னுவை! ஆதலின், வந்தவாறே வழிக்கொண்டு நின் மனைக்கு ஏகுதலே சாலச் சிறப்பாகும்' என்றனர்.

6. இவையனைத்தும் செவிமடுத்த குசேல முனி-வர், 'இஃது என்னே! சிறிதும் எண்ணிப் பாராது, மனைவி சொற் கேட்டு இம் முயற்சியில் தலையிட்டுக்-கொண்டோம்!

> "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
> எண்ணுவம் என்ப திழுக்கு"

என்னும் மறை மொழியையும் மறந்தோமே! இனி, மன்னனைக் காண வென்றால், ஆரமாம், மதாணியாம், பட்டாம், ஊர்தியாம் இவை யனைத்தும் நம் மூதாதை காலத்தும் கேட்டறியோமே!' என எண்ணி ஏங்கி நிற்குமளவில், அங்கிருந்த துவாரபாலகர் அக்கயவரை நோக்கி, 'பேதையீர், இம் முனிபுங்கவரை எள்-ளாதீர், எத்துமின்; "துறவிக்கு வேந்தன் துரும்பு"

என்பதேபோல், மெய்ஞ்ஞானியராகிய இவ் வந்தணர் பெருமானுக்கு நம்மாலும், நம்மிறைவராலும் ஆகும் பயன் யாது? இப் பெரியார் வரவு எம்பெருமான் வரவை ஒப்பதாகும். அருளுருவாய்ந்த அடிகளும் அடியவரில் அடக்கம் என்றால், அப் பெரியார் பெருமையை அளவிட்டுரைக்க நம்மா லாகுமோ?' எனக் கூறி, அக் கயவரை வாயடக்கிய பின்னர், குசேல முனிவரை நோக்கி, 'ஐம்புலன் அடக்கிய அந்தணர் பெரும, இப்பதகர் அறியாது கூறிய பழிமொழியைப் பாராட்டாமல் பொறுத்தருள்க.

"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே"

என்பது தாம் அறியாததன்றே' எனப் பற்பல இதவார்த்தைகள் கூறி வணங்கி, 'ஐய, சிறிது போழ்து பொறுத்தருள்வீரேல், விரைந்தோடி எமது வேந்தர்க்குத் தம் வரவை அறிவித்து வருகின்றேம்' என்று விரைந்து சென்று, அந்தப்புரத்தை யணுகினர்.

7. ஆண்டு, அவர்கள் கண்ணபிரானைக் காணப்பெறுமல், உவளகத்தை யடைந்து, அங்கே கண்டனர். கண்டு, தம் சிரத்திற் குவித்த கரத்தினை யுடையராய் வணங்கி நிற்க, எல்லாம் வல்ல எம்பெருமான் காவலரைக் கடைக்கணித்தருளினர். அப்பொழுது, அத் துவாரபாலகர் உடல் நடுங்க, நாக்குழற,

'மாமறைத் தலைவா போற்றி மதிக்குல விளக்கே போற்றி
காமரிங் கிரன்முன் ஞேனர் காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ண போற்றி தரியலர் ஏறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த துவாரகைக் கிறைவா போற்றி'

என்று தொழுது, 'எம் இறைவனே,

'ஆதிநா ளயில்நின் னோடு அருங்கலை சற்று ளாரும்
போதவும் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவனும் கந்தை
மேதகக் கொண்ட நீரான் மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்தின் மிக்கான் குசேலனென் றியம்பி னான்பேர்'

எனக் கூறக்கேட்ட கண்ணபிரான், கனிந்த மனத்தோடு விரைந்து இருக்கையை விட்டெழுந்து,

'தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடையோ னாகி நெஞ்சினு ளுவகை பூப்பப்
போயழைத் திடுமி னின்னே போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே எனவிரை பொருளிற் சொற்றான்'

அதுகேட்ட காவலர் விரைந்தோடி, குசேலமுனிவர் அடிகளில் தம் முடிபட வணங்கி, 'அந்தணர் பெரும, பலவாறு கூறிப் பயன் என், தேவரீர் எம்முடன் விரைந்து வாராது காலந் தாழ்ப்பீராயின், வேந்தரே இங்கு வந்துவிடுவர்' எனலும், குசேலர், உள்ளத்தில் உவகை பொங்கக் காவலரைப் பின்பற்றிச் சென்று,

'எண்ணணைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிடம் உறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும் வாசுதே வனைம ணக்கும்
கண்ணனைத் துளவத்தாமக் கண்ணனைக் கண்ணிற்கண்டான்'

காண்டலும், கண்ணபிரான் மடையுடைந்த வெள்ளமேபோல் எழுந்து, மறையவர் மலரடியில் தன் முடிபட வணங்கி வழுத்தி, 'தேவரீர் அடியேனது வேண்டுகோளையும் வேண்டாமலே ஈண்டு அடைந்தமை, யான் இயற்றிய தவமோ? அன்றி, இந்தத் துவாரகை செய்த அருந்தவமோ? யாதோ அறியேன்! என் நற்றவப் பயன் இன்றே பலித்தது. அடியேனது இல்லமும் தூய்மை யடைந்தது. இனி, அடியேன் பெறத் தகும் பேறு வேறு யாதுளது?' என்று பலவாறு புகழ்ந்து மகிழ்ந்தனர்.

*11. நிலக்காற்று, கடற்காற்று உண்டாவது எப்படி?

காலைப்பொழுதிலும் பகற்காலத்திலும் நிலத்திலிருந்து சமுத்திரத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்கு நிலக்காற்று என்று பெயர். மாலைப்பொழுதில் சமுத்திரத்திலிருந்து நிலத்தை நோக்கி அடிக்குங் காற்றுக்குக் கடற்காற்று என்று பெயர். இவ்விருவகைக் காற்றும் நாடோறும் மாறி மாறி வருவது ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தம். கடற்காற்று தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியத்தைத் தரத்தக்கது. பகற்காலத்திலே சூரிய உஷ்ணமிகுதியினால் வாடித் துன்பப்படும் உயிர் வர்க்கங்கள், மழையை எதிர்பார்த்து நிற்கும் பைங்கூழ்போல், கடற்காற்றை எதிர்பார்த்து நிற்கின்றன. நிலக்காற்று அவ்வளவாகத் தேகத்திற்கு ஆரோக்கியமானதன்று. நிற்க, மாறி மாறி வீசும் மேற்கண்ட இருவகைக் காற்றுக்கள் உண்டாவதற்குக் காரணங்களை அடியில் காட்டுகிறோம் :

2. பகற்காலத்திலே சூரியோதய காலமுதல் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் யாவும், சூரிய உஷ்ணத்தினால் வெகு சீக்கிரம் அதிக வெப்பமாய்விடுகின்றன. அப்படி உஷ்ணக் கொதிப்பேறிய பொருள்களுக்குச் சமீபமாயுள்ள * நிச்சல வாயுவும் வெகு சீக்கிரத்தில் வெப்பமாய்-

* வாயு எங்குமுள்ள பொருள். அஃது அலைமோதி இடம் விட்டுப் பெயருகையில் அதற்குக் காற்று என்று பெயர்; அங்ஙனமின்றி இயக்கமற்று நின்ற நிலையில் இருக்கும்போது அதற்கு நிச்சலவாயு (air) என்று பெயர்.

விடுகின்றது. அந்தப்படி அங்குள்ளவாயு வெப்பமான வுடனே அது நுண்ணியதாகி மேலெழும்பி வெளிப் பரப்பில் போய்விடுகின்றது. அதே காலத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீரும் சூரிய உஷ்ணத்தினால் வெப்பமாகிக்கொண்டு வருகிறது. ஆனால், கல் மண் முதலிய கனத்தபொருள்கள் உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரத்தில் கிரகித்துக் கொண்டு வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் சமுத்திரத்திலுள்ள தண்ணீர் உஷ்ணத்தைக் கிரகிக்கிறதில்லை; ஆகையால் வெப்பமடைகிறதில்லை. இதற்குத் திருஷ்டாந்தமாகக் கொஞ்சம் மணலையாவது சில கற்களையாவது ஒரு புறத்திலும், தண்ணீரை ஒரு பாத்திரத்தில் வார்த்து அதை மற்றொரு புறத்திலும் வெய்யிலில் ஒரு மணி நேரம்வரையில் வைத்துப் பார்ப்போமாயின், அந்தக் கற்களுக்கும் மணலுக்கும் உண்டாய்விடுகிற உஷ்ணக் கொதிப்பு எவ்வளவோ அதில் ஆயிரத்தில் ஒருபங்குகூட அந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீருக்கு உண்டாகாமல் இருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம். அந்த ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே மேற்படி தண்ணீரின் உஷ்ணத்தையும் அது வார்க்கப்பட்டிருக்கிற பாத்திரத்தின் உஷ்ணத்தையும் தொட்டு ஒத்திட்டுப் பார்க்கையில், தண்ணீரைவிடக் கனத்த பொருளாகிய அந்தப் பாத்திரம் அதிக வெப்பமாயிருப்பதை நாம் பிரத்தியட்சமாய் அறியலாம். ஆகையால், சமுத்திரத்திலுள்ள ஜலத்தைவிட நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பதார்த்தங்கள் சீக்கிரம் வெப்பமாய்விடுகின்றன. அப்படி வெப்பமாய்ப்போகும் நிலத்திலிருந்து மேலெழும்பிச் செல்லும் நிச்சலவாயு இருந்த இடத்தை நிரப்பும்படி

சமுத்திர ஜலத்தின் மேற்புறமாயுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு நிலத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கின்றது. இந்தப்படி சமுத்திரத்திலுள்ள நிச்சலவாயு நிலத்தை நோக்கி மோதும்போதுதான் அதற்குக் கடற்காற்று என்னும் பெயர் ஏற்படுகிறது.

3. உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரமாய் நிலத்திலுள்ள கல் மண் முதலிய திண்ணிய பொருள்கள் கிரகித்து வெப்பமாகின்றனவோ அவ்வளவு சீக்கிரமாய் அவை உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்ந்துபோய்விடுகின்றன. அந்தப்படி அவைகள் சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பே குளிர ஆரம்பிக்கின்றபடியால் வெகு சீக்கிரத்தில் அவைகள் குளிர்ந்து சில்லென்று போய்விடுகின்றன. சமுத்திரத்திலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தை எவ்வளவு மெதுவாய்க் கிரகிக்கின்றதோ அவ்வளவு மெதுவாகவே அந்த உஷ்ணத்தை வெளிவிட்டுக் குளிர்கிறது. ஆகையால், சூரிய அஸ்தமனத்துக்குப்பிறகு மறுநாள் சூரியோதயம் வரையில் நிலத்திலுள்ள மண் கல் முதலிய திண்ணிய பொருள்கள் யாவும் குளிர்ந்துபோயிருக்குங் காலத்தில் சமுத்திரத்திலுள்ள ஜலம் உஷ்ணமாகவே இருக்கின்றது. இரவிலும் பிராதக் காலத்திலும் சமுத்திரத்திலாவது தடாகங்களிலாவது ஸ்நானஞ்செய்ய இறங்கும்போது தண்ணீர் உஷ்ணமா யிருப்பதை நாம் அனுபவ சித்தமாய்க் காண்கிறோம். உஷ்ணமா யிருக்கும் பகற் காலத்தில் சீதளமா யிருக்கவும், சீதளமா யிருக்கும் இராக்காலத்திலும் பிராதக்காலத்திலும் உஷ்ணமா யிருக்கவும் தண்ணீருக்கு இயல்பை அமைத்துவைத்த ஜகதீசனது கருணையே கருணை!

'வாவியுறை நீரும் வடநிழலும் பாவசமும்

....

மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனில்
இன்பாருஞ் சீதளமா மே.'

தடாகத்து நீரும் ஆலமர நிழலும் பாவுகல்போட்ட கருங்கற் கட்டடமும் சீதளகாலத்தில் வெப்பமாயும் உஷ்ணகாலத்தில் சீதளமாயும் இருக்கின்றன என்று தமிழ்ப் பண்டிதர்கள் இவ்வுண்மையை நெடுங்காலத்துக்கு முன்பே அறிந்து கூறியுளார்.

4. இப்படிக் கடவுள் அமைத்து வைக்காவிட்டால், உஷ்ணகாலமாகிய பகற் பொழுதில் வேறு சீதளஸ்தானம் இல்லாமையாலும், சீதளகாலமாகிய இராக்காலத்திலும் பிராதக்காலத்திலும் வேறு உஷ்ணஸ்தானம் இல்லாமையாலும் உயிர்வர்க்கங்கள் என்ன பாடுபடும்! இராக்காலத்திலும் பிராதக்காலத்திலும் நிலத்திலுள்ள கல் மண் முதலிய யாவும் குளிர்ந்து போயிருக்கும்போது சமுத்திரஜலம் உஷ்ணமாகவேயிருக்கிறபடியால் அங்குள்ள உஷ்ணமான நிச்சலவாயு மேலே கிளம்பிப் போய்விடுகின்றது. அந்த இடத்தை நிரப்புவதற்காக அப்போது நிலத்தின் மேற்புறமாயுள்ள சீதளமான நிச்சலவாயு சமுத்திரத்தை நோக்கி அடிக்க ஆரம்பிக்கின்றது. இந்தப்படி நிலத்திலுள்ள குளிர்ச்சியான நிச்சலவாயு சமுத்திரத்தைநோக்கி மோதும்போதுதான் அதற்கு நிலக்காற்று என்னும் பெயர் ஏற்படுகிறது.

12. சுவபாஷையை அலட்சியஞ் செய்தல்

நமது நாட்டுச் சிறுவர்கள் தற்காலத்தில் ஆங்கிலேய பாஷையிலும், அப்பாஷை வாயிலாக அங்ககணிதம், பீஜகணிதம், க்ஷேத்திரகணித முதலிய பற்பல கணித சாஸ்திரங்களிலும், மனோதத்துவ லக்ஷண சாஸ்திரத்திலும், தர்க்க சாஸ்திரத்திலும், பௌதிக லட்சண சாஸ்திரத்திலும், வானசாஸ்திர முதலிய அளவிறந்த சாஸ்திரங்களிலும் மிகவும் தேர்ச்சியடைந்து, பாண்டித்திய சின்னங்களாகிய சிறந்த பட்டங்கள் பெற்றுச் சிறப்படைதல் நம்மனோர் யாவர்க்கும் பெருமகிழ்ச்சியை விளைக்கின்றது. ஆயினும், அம் மகிழ்ச்சியை அறவே கெடுத்து நம்மனோரைப் பெருந்துக்கத்துக்கு இலக்காக்கத் தக்கதோர் பெருங்குறையும் உளது. அக் குறை நந்தம் சிறுவர்கள் தம் தாய்மொழியை முற்றும் புறக்கணித்து வருவதேயாம். அங்கில பாஷையில் தேர்ச்சியடைந்து பரீக்ஷைகளில் தேற அவாவுடைய ஒவ்வொரு வித்தியார்த்தியும் தன் சுவபாஷையிலே நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்குத் தேர்ச்சியடைய வேண்டும் என்னும் நிபந்தனையைச் சர்வகலாசாலைச் சங்கத்துப் புலவர்கள் ஏற்படுத்தியிருக்கிற காரணத்தினாற்றான் மாணுக்கர் ஒருவாறு தம் தாய்மொழியின் முகத்திலாயினும் விழிக்கின்றனர். இத்தகைய நிபந்தனை ஏற்பட்டிராவிடில் பல வருடங்களுக்கு முன்னரே சுதேசபாஷைகள் இருந்த இடமுந் தெரியாமற் போயிருக்கும். ஒருவன் அந்நியபாஷையில் எவ்வளவு தேர்ச்சியடைந்து சிறந்த சாஸ்திர உண்மைகளை யறிவானாயினும், அவ்வுண்மைகளைத் தன்னுடைய மனத்தில் ஆவாகனஞ் செய்துகொள்ளும்போது, குழந்-

தைப் பருவத்தில் தான் தனக்குத் தெரியாமலே கற்றுக்கொண்ட தாய்மொழியே அவனுடைய மனத்திற் பேசிக்கொள்ளும் பாஷையாயிருக்கிறதென்னும் வாய்மை ஒவ்வொருவருக்கும் அனுபவசித்தமானது. ஆகையால், இப்படிப்பட்ட தாய்மொழியை ஒருவன் முற்றுங் கைசோரவிட்டு அந்நியபாஷையில் தேர்ச்சியடையப் போவாக்கொள்ளுதல் முதற்பண மில்லாமலே வட்டியைச் சேகரிக்க முயல்வதை ஒக்கும்.

2. இக்காலத்தில் அங்கில பாஷையில் கல்வி பயின்றுவரும் சில இளம்பக்குவிகள் சுவபாஷையில் பிறருடன் வசனிப்பதும் பிறர்க்கு எழுதுவதும் தமக்கு அகௌரவமென்று மதிமயக்கங் கொள்ளுகிறார்கள். அவர்தம் பேதைமை, அம்மம்ம, பரிதபிக்கத்தக்கதாம்! சுவபாஷையில் சாதாரண விஷயங்களையும் வசனிப்பதற்கு வேண்டிய சொற்கள் அவர்களுக்கு முற்றுந் தெரியாமையே அவர்கள் அங்ஙனம் துரபிப்பிராயங் கொள்ளுவதற்கு ஏற்ற காரணமாகும். டய்ம், ரெடி, லேட், க்ளீன் முதலிய அங்கில மொழிகளைச் சிறுவர்கள் தம வீட்டிலும் வழங்குவதனால், ஸ்திரீகளும் அச்சொற்களைப் பெருமையாகக் கொண்டு பேசுகின்றனர். இவ்வண்ணம் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் அங்கிலேய வார்த்தைகளையே சாமானிய விஷயங்களுக்கும் உபயோகித்துக்கொண்டு வருவார்களானால், அந்தோ! நந்தம் தாய்மொழியின் கதி என்னவது! சாதாரணமாய் வசனிப்பதற்கு வேண்டிய முக்கியமான சொற்களும் வழங்காமற் போகின்றமையால் நம் தாய்மொழி முற்றும் ஒளிமழுங்கிப் புனிதங்குன்றி க்ஷீணித்துவிடுமன்றோ?

3. நம் தேயத்தின் ஒரு பெரும் பகுதியாகிய வங்காள (Bengal) வாசிகள் அங்கிலேய பாஷையின் உருசியினால் மதிமயங்கித் தம் சுவபாஷையாகிய பங்காலி பாஷையைச் சில வருடங்களுக்கு முன் வரையில் முற்றும் அலட்சியம் செய்து வந்தனர். அவர்களுடைய ஸ்திரீகளும் அங்கிலேய பாஷா ஞானத்தினால் புருஷர்களைப் போலவே நடிக்கத் தலைப்பட்டனர். இவ்விபரீதத்தைக் கண்ட சில தேசாபிமானிகள் அங்கு அடிக்கடி பற்பல உபந்நியாசங்கள் செய்து பிரஜைகளின் மதிமயக்கத்தை மாற்றிய காரணத்தினால் இப்போது பங்காலி பாஷை அப்பிரதேசத்தில் யாவராலும் போற்றிக் கையாளப்பட்டு வருகின்றது. அங்கிலேய பாஷையில் அதிக பாண்டித்தியம் அடைந்து, சிறந்த பி.ஏ., எம்.ஏ., பட்டங்கள் பெற்ற வித்துவச் சிரோமணிகளாகிய சில பங்காலிகள் ஒருவர்க்கொருவர் கடித சம்பாஷணை செய்யும்போதும் சுதேசாசார சம்பந்தமான கூட்டம் கூடும்போதும், தத்தம் கிருகங்களில் வசனிக்கும்போதும், மற்றும் அநேக சந்தர்ப்பங்களிலும் சுவபாஷையை யன்றி அங்கில பாஷையையாவது அப்பாஷையின் வார்த்தைகளையாவது கூடுமான வரையில் உபயோகிக்கலாகாது என்று பெருஞ் சபதம் பண்ணிக்கொண்டு, ஒரு கட்டுப்பாடாயிருந்து வருகின்றார்கள். அன்றியும், அச்சுவபாஷையில் இப்போது சில பத்திரிகைகளை அங்கிலேய பாஷா ஞானிகளாகிய சில சிறந்த பங்காலிப் பண்டிதர்கள் நடத்திக் கொண்டு வருகின்றார்கள். அங்கிலேய பாஷையிலே எழுதப்பட்ட சில சிறந்த பத்திரிகைகளைப் போலவே பங்காலி பாஷையில் எழுதப்பட்டு வரும் அப்பத்திரிகைகளும் யாவராலும்

நன்கு மதிக்கப்பட்டு வருகின்றன. நமது பங்காளத்-துச் சகோதரர்கள் செய்துகொண்ட வண்ணம் ஒரு வித சங்கேதத்தை இத் தேசத்து ஏனைய பிரதேச-வாசிகளும் செய்துகொள்வது சர்வோத்தமமாகும்.

4. நம்முடைய தேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வாராத அப்பியாசங்கள் முதலியவற்றிற்கும், இங்கு அகப்படாத பண்டங்கள் முதலியவற்றிற்கும், நமது சாஸ்திரங்களில் கூறப்படாத கோட்பாடுகள் முதலிய-வற்றிற்கும் சுவபாஷைகளில் வார்த்தைகள் அகப்படு-வது துர்லபந்தான். அப்படிப்பட்ட விஷயங்களுக்-காக மாத்திரம் அந்நிய பாஷையிலுள்ள வார்த்தை-களைக் கையாளவேண்டியது இன்றியமையாததே.

5. அந்நிய ஜாதியாருடன் கூட்டுறவு கொண்டு வருகையில் அவர்களுடைய நடை யுடை பாவனைகள் நம்மிடத்துப் படிவனபோல் அவர்களுடைய பாஷை-யின் சொற்களும் நம்முடைய பாஷையில் பையப் பையப் புகுவது இயல்புதான்.

> 'பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே.'

இரண்டு ஜாதியார் ஒருவரோடொருவர் கலந்து உற-வாடும்போது அவர்களுடைய பாஷைகளும் உறவா-டாமற் போகமாட்டா. முகம்மதியர் இத் தேசத்தை அரசாண்டு வருகையில் அவர்களுடன் நம்மவர் கலந்து உறவாட நேர்ந்த காரணத்தினால் தயார், ஆஜர், பதில், பத்ரம், பந்தோபஸ்த், உஷார் முதலிய சொற்கள் நம் பாஷையில் இடம்பெற்றுவிட்டன. அந்நிய தேசத்-தார் நம் தேசத்து அரசர்களா யிருப்பார்களாகில் அவர்களுடைய நடையுடை பாவனைகளும், வார்த்தை-

களும் சாதாரணமாக நம் மனத்தைக் கவர்ந்துவிடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

6. நம் தேசத்து வாலிபர்கள் தம் சுவபாஷைகளை அலட்சியஞ் செய்து வருவதனால் விளையும் தீமைகளில் மற்றும் சிலவற்றை ஈண்டுக் கூறுவோம்: நம்மைத் தற்காலத்தில் அங்கிலேயர்கள் அரசாண்டு வருகிற காரணத்தினாலேயே அங்கில பாஷை உயர்ந்தது என்றும், நாம் ஆளப்படுபவர்களா யிருக்கிற காரணத்தினாலேயே நம் தேச பாஷைகள் தாழ்ந்தன என்றும் அநேகர் மதிமயக்கங் கொள்ளுகிறார்கள். அத்தகையோர் அங்கில பாஷையிலேயே முழுவதும் எக்காலத்தும் வசனித்துக்கொண் டிருப்பது பெருங் கௌரவம் என்றும், அங்ஙனம் வசனிக்கச் சக்தி போதாவிடத்து அப் பாஷையின் பதங்களையேனும் சுவபாஷையின் பதங்களுடன் இடையிடையே கலந்து பேசுவதே ஒரு விதத்தில் கௌரவம் என்றும், இவ்விரு வகையான சக்தியும் அமையப் பெறாத சுதேசிகள் சுதேச பாஷையில் எவ்வளவு சிறந்தவர்களா யிருக்கினும் அவர்கள் நன்கு மதிக்கப்படுவதற்கு எவ்வளவும் அருகரல்லர் என்றும் துரபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இத்தகைய துரபிப்பிராயங் கொண்ட சில சிறுவர்கள் தாம் சர்வகலாசாலையில் கல்வி பயின்று உயர்ந்த பரீட்சைகளுக்குப் போகும்போது, அங்கிலேய பாஷையிலாயினும், வேறே கணிதம், தர்க்கம், பூகோளம், சரித்திரம் முதலியவற்றுள் எதிலாயினும் போதுமான அளவுக்குத் திறமை பெற்றிராத காரணத்தாற் பரீட்சையில் தவறுவார்களாகில், அவர்கள் தம்முடைய நண்பர், உறவினர் முதலியோர், 'எந்தப் பாடத்தில் தவறிப் போனீர்?' என்று பரிந்து உசா-

வுகையில் வாஸ்தவத்தில் சுவபாஷையில் தவறிப் போகாமலிருந்தும் அதிற்றான் தவறிப் போனதாகப் பொய்யுரை கூறிப் போலிக் கௌரவம் பாராட்டிக்-கொள்ளுகின்றனர். தாய்மொழியில் தவறுவது ஏனைய பாடங்களில் தவறுவதைக்காட்டினும் அதிக அவமான மானதென்பதை அன்னார் உணர்ந்திலர்போலும்!

7. நந்தம் சிறுவர்கள் உண்மையில் அங்கில பாஷையிற் சிறந்தோங்க வேண்டும் என்கிற எண்ணம் சர்வகலாசாலைச் சங்கத்தவர்க்கிருக்குமாயின் அவர்-கள் பிரதமத்தில் சுதேச சிறுவர்களைத் தம் சுவபாஷை-யில் நல்ல பாண்டித்தியம் அடையுமாறு செய்வது அத்தியாவசியகமென்று, சில வருடங்களுக்கு முன் இச் சென்னையில் துரைத்தனத்தார் சார்பிலே (Advocate General) நியாய துரந்தர மஹா நிபுணராயிருந்த கன்னிங்ஹாம் துரையவர்கள் ஓர் உபந்நியாசஞ் செய்-தனர். சர்வகலாசாலைப் பரீட்சைகளில் தேற வேண்-டிய சிறுவர்கள் தத்தம் சுவபாஷையில் மொத்த எண்-ணில் நான்கிலொரு பாகம் பெற்றால் போதும் என்று முன்னே ஏற்பாடு செய்திருந்த இச் சென்னைச் சர்வ-கலாசாலைச் சங்கப் புலவர்கள், இப்போது சுவ-பாஷையிலே மொத்த எண்ணில் மூன்றிலொருபங்கு பெற்றால்தான் அவர்கள் பரீட்சையில் தேறினவர்க-ளாக எண்ணப்படுவார்களென்னும் நிபந்தனை ஏற்ப-டுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் உசிதமான நிபந்-தனையென்று யாம் புகழ்ந்து கொண்டாடுகின்றோம். சுவபாஷையிலே மொத்த எண்ணில் ஒவ்வொரு சிறு-வனும் குறைந்தது செம்பாதியாவது பெறவேண்டு மென்று ஏற்பாடு செய்தால் பின்னும் உசிதமாயிருக்கு மென்பது என் அபிப்பிராயம்.

8. ஒருவன் அந்நிய பாஷையைக் கற்கப் புகுவதன் முன், குறைந்தது நாலைந்து வருடமாவது, தன் சுவபாஷையிலே இலக்கண இலக்கிய ஞானம் பெற்றிருப்பது பெரும் பயனை யளிக்கும். பின்னர் அவன் அந்நிய பாஷையைக் கற்கப் புகுவானாயின் அஃது அவனுக்கு அதிலேசாய் வந்துவிடும். ஏனெனில், சற்றேறக்குறைய சகல பாஷைகளும் ஒரே மாதிரியான மூலாதாரக் கோட்பாடுகளை யனுசரித்தே அமைந் திருக்கின்றன. இப்போது நமது துரைத்தனத்தார் சிறுவர்களின் கல்வி அபிவிர்த்தி விஷயத்தில் மிக்க நாட்ட முடையவர்களாகி அளவிறந்த உசிதமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்களேனும் ஒரு பெருங் குறை எமக்குப் புலப்படுகின்றது. அஃது யாதெனில் — இப்போதைய ஏற்பாட்டின்படி சிறு குழந்தைகள் முதலில் தத்தம் சுவபாஷையின் நெடுங்கணக்கை ஆரம்பிக்கும்போதே அங்கில பாஷையின் நெடுங் கணக்கையும் ஆரம்பித்துக் கற்க வேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இஃது ஒரு பெருங் குறை யென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. சிறுவர் அங்கிலேய பாஷையின் எழுத்துக்களையும், அசைகளையும், சொற்களையும், சொற்றொடர்களையும் கற்கும்போது எவ்வளவு சிரமம் அடைய வேண்டியவர்களா யிருக்கிறார்களோ, அவ்வளவு சிரமத்தைத் தம் சுவ பாஷையின் எழுத்துக்களையும், அசைகளையும், சொற்களையும், சொற்றொடர்களையும் கற்கும்போதும் அடைய வேண்டியவர்களா யிருக்கிறார்கள். இவ்வாறே அங்கில பாஷையில் முதற் பாட புஸ்தகம் படிக்கும் சிறுவர்கள் சுவபாஷையில் முதற் பாட புஸ்தகத்தைத்தான் வாசிக்க வேண்டியவர்களா யிருக்-

கின்றனர். ஆகவே, அங்கிலேய வகுப்புப் பாடங்களும் சுவபாஷை வகுப்புப் பாடங்களும் சிறுவர்களுக்கு ஒரு தன்மையனவாகவே யிருக்கின்றன. இதனால் அந்நிய பாஷையாகிய அங்கிலேய பாஷை சிறுவர்களுக்கு எவ்வளவு பிரயாசையா யிருக்கின்றதோ அவ்வளவு பிரயாசையாகவே சுவபாஷையும் அவர்களுக்கு இருக்கின்றது. இளமைப் பருவத்தில் சிறுவர்களுக்கு அதிக பிரயாசை கொடுப்பதனல் அவர்களுடைய மனோபலமும் தேகபலமும் குன்றிவிடுகின்றன. இப்படி யாவதனல் அவர்களுடைய வாழ்நாள் எல்லாவிதத்திலும் க்ஷீணித்துப்போகுமே! அங்கில பாஷையின் இலக்கணத்தைக் கற்கத் தொடங்குமுன் ஒவ்வொரு வித்தியார்த்தியும் தன் சுவ பாஷையின் இலக்கணத்தைச் செவ்வையாய் வாசித்திருக்க வேண்டும். இல்லாவிடில் அந்நிய பாஷையிலுள்ள சொற்களுக்குள்ளே பெயர் வினை இடை உரி என்னும் பாகுபாடுகளையும் வாக்கியங்களில் அச்சொற்களுக்குள்ள சம்பந்தங்களையும் இன்னும் பாஷை நடையைச் சேர்ந்த அனேக அமைதிகளையும் அறிந்து கொள்வது மிகவும் துர்லபமாய் முடியும்; ஆகையால், அந்நிய பாஷையைக் கற்கத் தொடங்கும் ஒருவன் தன் சுவபாஷையைக் குறைந்தது நாலைந்து வருடம் வரையிலாயினும் கற்றுத் தேர்ச்சியடைவானுகில் அவ்வந்நிய பாஷையை அவன் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடியவனுவான்.

9. மேற்கண்ட காரணங்களினல் பிரதமத்திலேயே நம் தேசத்துச் சிறுவர்கள் இக்காலத்துக் கல்வி ஏற்பாட்டின் குறைவினுலே தம் சுவபாஷையை அந்நிய பாஷையைப் போலவே பாவிக்க வேண்டியவர்க-

ளாகின்றூர்கள். இதனுல் அங்கிலேய பாஷையில் அவர்கள் விரைவிலே தேர்ச்சி யடையக் கூடாதவர்க-ளாய் விடுகின்றனர். இங்கிலாந்திலே அங்கிலேய பாஷையில் பாண்டித்தியம்பெற்ற பல கனவான்கள் ஐரோப்பா கண்டத்தில் வழங்கும் பற்பல பாஷை-களையும் நம் தேசத்துக் கஷ்டமான சம்ஸ்கிருதம் திராவிடம் முதலிய பாஷைகளையும் நாலைந்து வருடங்-களுக்குள்ளே கற்றுத் தம்முடைய சுவபாஷையிலே மொழி பெயர்த்துக்கொள்ளக்கூடிய நிபுணத்துவம் அடைந்துவிடுகிறூர்கள். அவர்கள் அங்ஙனம் ஆவதற்-குக் காரணம் யாது? தம்முடைய சுவபாஷையில் அடைந்த தேர்ச்சியே அதி சீக்கிரத்தில் ஏனைய பாஷைகளிலும் அடையும் தேர்ச்சிக்குக் காரணமா யிருக்கின்றது. இத்தேசத்துக் கல்விமான்களுக்குள் அனேகர் தம் சுவபாஷையிலுள்ள கிரந்தங்களை அங்-கிலேய பாஷாந்தரம் அதிவிலசாய்ச் செய்யக்கூடிய-வர்களாயிருந்து அங்கிலேயர்களுக்குப் பயன்படுகின்-றூர்களே யன்றி அங்கிலேய பாஷையிலுள்ள கிரந்-தங்களைத் தமது சுவபாஷைகளில் மொழிபெயர்த்துத் தம் நாட்டவர்களுக்குப் பயன்படுவதில்லை. இஃது என்ன விபரீதம்! அங்கிலேய கனவான்கள் தம்தேசத்-திடத்தும் தம் தேசத்தாரிடத்தும் கொண்டிருக்கும் அபிமானம் நம் தேசத்துக் கனவான்களுக்கு நம்மு-டைய நாட்டிடத்தும் நாட்டவரிடத்தும் இல்லைபோ-லும்! அன்னிய பாஷையில் அடைந்திருக்கும் அவ்-வளவுதேர்ச்சி அக்கனவான்களுக்குத் தம் சுவபாஷை-யில் இராமையே அதற்குக் காரணம். இத்தேசத்துக் கனவான்கள் அனேகர் இராமாயணம் பாரதம் முத-லிய காவியங்களின் சரித்திரங்களைத் தெரிந்துகொள்-

ளத் தொடங்குகையில் அங்கிலேயர்கள் அங்கில பாஷையில் தம் நாட்டவருடைய உபயோகத்துக்காகச் செய்துகொண்ட மொழி பெயர்ப்பையே எடுத்து வாசிக்கின்றார்கள். இஃது அங்கிலேயர்களுடைய நகைப்புக்கு எவ்வளவு இலக்காகும்!

10. தற்காலத்தில் நமது சிறுவர்கள் வித்தியாரம்பஞ் செய்யும்போதே சுவபாஷையையும் அந்நிய பாஷையாகிய அங்கிலேய பாஷையையும் ஏககாலத்தில் ஒருபடித்தாய்க் கற்கவேண்டியவர்களா யிருக்கிறபடியால் அவ்விரண்டு பாஷைகளும் ஒரு தன்மையனவாகவே கஷ்டத்தைப் பயக்கின்றன என்று முன்னமே கூறினோம். பிறகு அவர்கள் மேல்வகுப்புகளுக்குச் செல்லும்போது சுவபாஷையைப் படிப்பதெல்லாம் ஒரு மணி நேரந்தான். மற்ற ஐந்து மணி நேரமும் அங்கிலேய பாஷையையும் அந்தப் பாஷைவாயிலாகக் கணிதம் பூகோளம் சரித்திரம் தர்க்கம் முதலிய பாடங்களையுமே அவர்கள் கவனிக்க வேண்டியவர்களா யிருக்கிறபடியினால், தினம் ஒருமடங்கு சுவபாஷையில் நாட்டமும், அதற்கு ஐந்து மடங்கு அந்நிய பாஷையில் நாட்டமும் அவர்கள் வைக்கவேண்டியவர்களா யிருக்கின்றார்கள். இந்த ஸ்திதியிலே அவர்களுக்குச் சுவபாஷையில் எங்ஙனம் உருசியும் ஞானமும் விளைதல்கூடும்? எதை வாசிப்பது ஒருவனுக்குச் சுலபமா யிருக்கிறதோ அதில்தான் அவனுக்கு உருசியுண்டாகும். மேற்போந்த நியாயங்களினால் சுவபாஷை அங்கிலேய பாஷையைக் காட்டினும் சிறுவர்களுக்குக் கஷ்டமா யிருக்கிறபடியால் அவர்களுக்குஅஃது அங்கிலேய பாஷையைவிடஉருசி குறைந்ததாகக் காட்டுகிறது; இஃது இயற்கையே.

11. ஒவ்வொருவனும் இளமைப் பருவத்தி-லேயே தன் தன் தேசாசாரம் மதலட்சணம் தெய்வ லக்ஷணம் முதலியவைகளைத் தெரிந்திருத்தல் வேண்-டும். அதற்குச் சுவபாஷையின் ஞானம் இன்றி-யமையாதது. ஆகையால், தாய்ப் பாஷையில் ஞான சூனியர்களா யிருக்கும் சிறுவர்கள் பெரும்பாலும் தெய்வ நம்பிக்கை யற்றவர்களாயும் தேசாசார முத-லியவைகளை உணராதவர்களாயும் இருக்கின்றனர். இந்த ஸ்திதியைக் காட்டிலும் நமது தேசத்துச் சிறு-வர்களுக்கு வேறே ஈன ஸ்திதியு முண்டோ? மேற் காட்டிய நியாயங்களைச் சித்த சமாதானத்துடன் கவனித்து, நம் தேசத்துச் சிறுவர்கள் தத்தம் தாய்ப் பாஷைகளை அலட்சியம் செய்யாம லிருப்பார்களாக.

13. அடக்கமுடைமை

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.'

அறிவுள்ளவனே அரிய பெரிய புரவலன்; அவனுக்-குத் தன் உள்ளத்திலேயே ஓர் அரசு உண்டு: அறிவு, ஆள்பவனாகிய அரியணையின்மேல் வீற்றிருந்து, செங்-கோல் செலுத்தும்; அவனுடைய அந்தக்கரணங்கள் எல்லாம் வணக்கமுள்ள ஏவலரைப்போல் அவனைப் பணிந்து நிற்கும். அவ்வரசு சிற்றரசாகக் காணப்-படினும், அதன் அரசன் மிக்க செல்வாக்கும் சிறப்பும் உள்ளவனாகிச் சக்கரவர்த்தியினும் மேம்பட்டவன் ஆவான். அந்தக்கரணமும் அறிவும் ஒற்றுமையின்றி, என்றும் ஒழியாத உள்ளூர்க் கலகம்போல், தம்முள் சச்சரவு நடத்திக்கொண்டே இருக்கும். இவ் விரண்-

டினுள் எது மேற்கொள்ளுமோ அதற்குத் தக்க-வாறு நாம் நல்லோராவதும் தீயோராவதும் ஏற்படும். நாம் புலன்களை யடக்கி, அவற்றை அறிவோடு இணங்-கச்செய்ய வல்லோமாயின், அதனால் ஏற்படுவதைப்-போல் பேரானந்தம் வேறொன்றும் இராது.

2. பகைவரது கூரிய அம்பினும் அடங்காப் புலன்களே கொடியனவாம்; அவற்றிற்கு நாம் ஆட்-பட்டிருத்தல், பகைவரிட்ட பெரிய விலங்கில் அகப்-பட் டிருத்தலினுங் கொடிது. தன்னைக் கெடுக்கும் நெஞ்சுக்குக் குற்றேவல் செய்பவன் பிடிபட்ட களிற்-றுக்கு ஒப்பாவன். இயற்கையில் சினமுள்ள ஒருவன் சான்றோர் இனத்தைச் சார்ந்திருத்தல் வேண்டும்; அவ்வாறு செய்வதனால் அவன் எளிதில் நற்குணம் உள்ளவனாகலாம்; அதனால், ஒழுக்கமும் குணமும் மாத்திரமே அல்ல, அவனது விருப்பமும் அவனை அறியாமலே சீர்பெறும். தன்னை அடக்கி ஆள்பவன் இவ்வுலகத்தையும் அடக்கி ஆள்கின்றான்; நாம், மற்ற-வர்களை அடக்கி ஆள்வதிலும், நம்மை அடக்கி ஆள்-வதே சிறப்புடையதாம்.

> 'நின்வை யறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே
> பின்வையான் யாரைப் பெறுகிற்பேன் — நின்வை
> அறப்பெறு கிற்பனேற் பெற்றேன்மற் றீண்டு
> துறக்கம் திறப்பதோர் தாள்.'

3. பிறர் நமக்கிழைத்த சிறு பிழைகளை எண்ணா-மல் அவற்றை மறப்பதே நன்று; அவற்றை மறப்பத-னால் நாம் உயர்ந்தோ ராவோம்; மறவாமல், தீங்குக்-குத் தீங்கிழைப்போமாயின் அவரினும் நாம் இழிந்-தவரே யாவோம்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.'

4. சினம் என்பது மனத்திற்குள் தோன்றுவ-தோர் வெப்பு நோயாம். நோய் நீங்கிய பின்பு துர்ப்-பலம் உண்டாவது போலவே, சினங்கொண்டவர்க-ளுக்கும், அது நீங்கினபின்பு, தேகத்தில் பலக்குறைவு உண்டாகும். புலன்களனைத்தையும் ஒருங்கே அடக்கி ஆள்வது சிலருக்கு அதிக வருத்தமாதலால், அத் தகையோர் அவற்றை ஒருவாறு நாளடைவிலாயினும் அடக்க முயல்வது நன்று.

'உணர்ச்சியச் சாக உசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி — உணர்ந்ததனை
ஊர்கின்ற பாகன் உணர்வுடைய னாகுமேல்
பேர்கின்ற தாகும் பிறப்பு.'

5. நமது சினம் செல்லுமிடமும் உண்டு, செல்-லாத இடமும் உண்டு. நம்மினும் மேலோரைச் சினந்துகொள்ளுதல் புத்தியீனம்; கீழானோ ரிடத்தில் சினத்தைச் செலுத்தல் இழிவாகும்.

'காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால் — ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.'

6. மிகைபடக் கூறப் பழகலாகாது; நமது நாவி-னின்றும் வார்த்தைகள் வெளிப்படு முன்னரே அவற்றை ஆய்ந்து அறிந்து உரைத்தல் வேண்டும்.

'செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.'

7. அறிவினும் புலன்களே முற்பிறந்தவை; நாம் பிறக்கும்போதே புலன்கள் நம்மோடு கூடப் பிறந்-

தன. நாம் அறிவுடையராதற்கு, பிறந்தபின் சிறிது காலம் செல்லும். இந்திரியங்களை, அவற்றின் போக்கின்படி விடாமல், அடக்கிக்கொள்ள வேண்டும். ஒரு கோட்டையைப் பிடித்துக்கொள்ளுவதிலும் கரணங்களை யெல்லாம் நமது வசமாக்கிக்கொள்ளுதலே சிறந்தது. நியாயாதிபதி ஒருவர், 'ஆசை யற்றவனே தனிகன்; தன்னைத்தான் அடக்கப்பெற்றவனே ஆண்மையுடையவன்; மரணத்தை மகிழ்ச்சியோடு எதிர்பார்ப்பவனே மகா புருஷன்; மற்றவைகளைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படேன்; மேற்சொன்ன மூன்றனுள் முற்கூறிய இரண்டைப்பற்றி நான் அவ்வளவு கவலைப்படேன்; மூன்றாவதைப்பற்றி நான் எவ்வளவு கவலை வைத்திருந்தாலும் தகும்' என்று கூறுகின்றார். கோபம் எழும்போதே அதை வேரோடு களைந்துவிட வேண்டும்; ஆரம்பத்தில் அப்படிச் செய்யாவிட்டால், அது வேரூன்றி விருத்தியாகி, ஆதியில் நகத்தாற் கிள்ளி எறிவதைப் பின்பு கோடரிகொண்டு வெட்ட வேண்டுவதாக முடியும். எங்கே அறிவும் நீதியும் அமைந்து குடியிருக்குமோ, அங்கே அமைதியும் ஆநந்தமும் பல்கிப் பெருகும்.

8. மிதமான செல்வமும் பெருந்தன்மையும் இருந்தால், அவ்விடத்தில் அச்சமாவது பொறாமையாவது கொஞ்சமேனும் இராது. இப்படி வாழ்ந்திருத்தலே இன்புற்று வாழ்ந்திருத்தல் என்று சொல்லப்படும். பொல்லாங்கு இழைத்தற்காகவே அதிகாரத்தை வகிக்கவேண்டும் என்று விரும்புகிறவர்கள் சிலர் உளர்.

9. ஒன்றைப்பற்றி வாதிக்கும்போது, அகங்காரத்தோடும் ஆத்திரத்தோடும் பேசலாகாது. ஏனெ-

னில், உண்மை, பகைவருடைய எதிர் வாதத்தினும், தன்னை வந்திப்பவர்களின் சினத்தீயினும் அதிகமாக வருத்தும். அமைந்து பேசினுல்மட்டுமே அறிவிற்கு உண்மை புலப்படும். நாம் அந்தக்கரணங்களை யெல்லாம் நமது வசமாக்கிக் கொண்டாற்ருன் நமக்கு மனநிலை யுண்டாகுமே யன்றி, அவற்றிற்கு ஆட்படுவதனுல் ஒருபோதும் அம் மனநிலை உண்டாகாது. செல்வம், பலம் முதலியவற்ருலும் மனநிலை யுண்டாவதரிது. அடக்கமான மனமே நிலைபெறும். மூத்தோர் வார்த்தையைக் கேளாமல், எந்தக் கருமத்திலும் நாம் பிரவர்த்திப்பது கூடாது; எக் கருமத்தையும் எளிதில் முடிப்பதற்கு இளமைப் பருவம் ஏற்றதாயினும், யோசனை கேட்பதில் மூத்தோர் சொல்லும் வார்த்தையே அமிர்தமாகும். சீர்தூக்கிப் பாராட்டப்படாத இறுமாப்பு மறைந்துபோகும்; அதைப் பாராட்டுகிறவன் உறுதியற்றவ னுகவாவது குற்றமுள்ளவனுகவாவது ஆதல்வேண்டும்.

10. நம்மிடத்தில் இவ்வுலக இன்பம் குடிகொண்டிருந்தால், அது காரணமாகத் தெய்வபக்தி குன்றிப் போம்; ஆதலால், நாம் இவ்வுலக இன்பத்தைத் துறந்து ஈசுவரனுடைய கிருபைக்குப் பாத்திர ராகும்படி பார்க்கவேண்டும். அந்த இன்பம் என்றைக்கும் அழிவற்றதாகும். ஈசுவர கடாக்ஷமிருந்தால் அதுவே பிறவி நோய்க்கு மருந்தாகும்; புல்லறிவைப் போக்கி நல்லறிவைத் தரும்; சோம்பலைக் கொன்று பகுத்தறிவைக் கூராக்கும்; மறதியைப் போக்கி ஞாபக சக்தியை நிலைநிறுத்தும்; அச்சத்தை அகற்றி ஆண்மையைத் தரும்; மடத்தைக் கொன்று அறிவை விசாலப்படுத்தும்; தெய்வ நிந்தையைப் போக்கிப்

பக்தியை ஆக்கும்; வீண்பெருமையை ஒழித்து விநயத்தைச் செழிப்பிக்கும்.

11. பிறர் கூறும் நிந்தனைக்காக நாம் கிலேசப்பட லாகாது; யார் எப்படி நிந்தித்தாலும் அதனை மௌனமாகப் பொறுத்துக்கொள்ளுதலே நன்று.

> 'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
> தகுதியான் வென்று விடல்.'

180860

12. நாம் பிறருடைய செய்கைகளைப் பற்றி விசாரியாமலே செய்யவேண்டிய வற்றை ஆய்ந்து செய்தல் வேண்டும்; நற்குணங்கள் பலவற்றுள்ளும் நாவடக்கம் மேலானது; நாம் நாவடக்கமுள்ளவர்களாயிருந்தால், நமது குற்றம் வெளிப்படாமல் மற்றவர்களுடைய குற்றங்களை அறிவது எளிதாகும். நாம் பெரியோருடைய அநுஷ்டானத்தை அநுஷ்டிக்கையில், குற்றமுள்ளவைகளை நீக்கிக் குணமானவைகளை மட்டும் கொள்ள வேண்டும். எவரும் சினத்தைப் பொருளென்று கொள்ளலாகாது.

03/6/8 1023

14. வறுமையிற் செம்மை — IV

கண்ணபிரான் குசேல முனிவரை ஆதனத்தில் இருத்தி நீராட்டி, ஈரம் புலர்த்தி, பட்டாடை சாத்திய பின்னர், நறுமணச் சாந்து பூசி, அறு சுவையோடு நால்வகையுண்டியும் அமர்ந்து இட்டனன்; பின்னும், அம்முனிவர்க்குத் தாம்பூலம் அளித்து அமளியில் அமரச் செய்தனன்; குசேலர் நெடுந் தூரம் நடந்து வந்த களைப்பினாலும், வயிறுர உண்ட இளைப்பினாலும் மெய் மறந்து படுத்தனர். அப்போது, கண்ணன் அவர் அருகில் உட்காந்து இன்சொற் கூறினன். பின்பு,

'வழிநடந் திளைத்த வேதம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினுன் கமலக் கண்ணன்
பழியில்பல் உபசா ரங்கள் பண்ணவுந் தெரியா ளுகி
ஒழிவறு தவக்கு சேலன் ஒன்றும்பே சாதி ருந்தான்.'

ஆயினும், குசேல முனிவர் தம் மனத்தினுள்ளே, அக்கண்ணபிரானது அவயவங்களைப் பாதாதி கேசமாகத் தியானித்து, யோகு செய்திருந்தனர். அக்காலத்தே, கண்ணன் முனிவரை நோக்கி, அவரது மனைவி மைந்தர் முதலாயினுரைக் குறித்து, 'அந்தணர் பெரும, தமது மனைவியார் நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவரோ? தமது உடலினைப் போற்றி வளர்க்கும் தன்மையரோ? தமது வருவாய்க்குத் தக்கவாறு செலவிடும் செய்கையரோ? தமது மக்கள் மாண்புடைய குணத்தினரோ? நீவிர் அவர்கட்கு உபநயநம் முதலிய சடங்குகளைக் குறையற நிறைவேற்றினீரோ?' என்பது முதலிய பற்பல செய்திகளைப் பற்றி வினவ, குசேலர் அவற்றிற் கெல்லாம் ஒன்றும் உரையாது, வாளா இருந்தனர். இருத்தலும், பெருமான், 'என்னே மோனமுற்றிருக்கின்றீர்? "தோழனேடும் ஏழைமை பேசேல்" என்பதை யுன்னி, கிருகச் சித்திரங்களை வெளியிடுதல் நன்றன்று என இவ்வாறு இருக்கின்றீரோ? அவ்வாருயின், அது நிற்க; நாம் சாந்தீப முனிவரைச் சார்ந்து கல்வி கற்ற காலத்தே, நிகழ்ந்தன யாவும் நினைவிருக்கின்றனவோ?' என்று வினவினன். அதற்கெல்லாம் குசேலர் தக்கவாறு விடை கூறினர். இவ்வாறு இருவரும் அளவளாவி முடிந்த பின்னர், கண்ணன்,

'பந்தவ யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தவ எனக்கென் கொண்டு வந்தவ?'

'அதனை இன்னே எனக்குத் தருக, என் வாய் ஊறுகின்றது' என்று தன் மலர்க்கை நீட்டிக் கேட்டனன்.

2. அப்போது, குசேல முனிவர் ஒன்றுங் கூற அறியாராய், 'என்னே, இம் மன்னர் மன்னனுக்கு யாம் தருவது யாது? இவற்கு இவ்வவலைக் கொடுத்தல், பாலுண்பானுக்குப் புளிங்காடி கொடுத்து உண்க என்று உபசரித்தலாகுமன்றே' என்றுன்னி, சும்மா இருந்தனர்.

3. அது கண்ட மாயன், குசேல முனிவரது கந்தையை எடுத்துத் தேடி, அதன் முன்றானையில் முடியிட்டிருந்த சிறு பொதியைக் கண்டு, அதனை அவிழ்த்துப் பார்த்தலும், அஃது அவலாக இருந்தமை கண்டான். கண்டு, பெருமகிழ்ச்சி கொண்டு, 'ஆகா, நல்லதோர் சிற்றுணவு நமக்குக் கிடைத்தது!' என்று கூறி, அதில் ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். பின்பு, அதனைத் தன் வாயின் இரு புறங்களிலும் அடக்கி, உமிழ் நீரில் பதமுற நனைத்த பின், சிறிது சிறிதாக மென்று, பல முறை தலையை அசைத்து அசைத்து,

'சேறிதரு சுவைத்தீ தென்றும் தேவர்க்கும் அரிய தாகும்
அறிதரு விருப்பின் இல்லின் அமைத்ததே பழைதும் அன்று
குறிதரும் விலைப்பாற் சென்று கோடலிவ் வளத்த தோஎன்று
உறியவள வாரி யுண்டோன் ஒருபிடி அவல்தின் றூனே.'

மாயனது மாயச் செயல்களைக் கண்ட குசேல முனிவர் ஒன்றும் உரையாமல் அமைந்திருந்தனர். பின்னர், முனிவர் இரண்டொரு பகல் அங்கே இருந்து, மூன்றும் நாள் அவர், தமது அகத்திற்குத் தம்மைச் செலவிடுமாறு கண்ணனிடத்து விடை பெற்றனர். மாத-

வனும் வாயிற்கடை வரையில் நடந்து வந்து மாதவரை வழிவிட்டான்.

4. வந்ததே போல் வறிய கோலத்தோடு செல்லுங் குசேல முனிவரைக் கண்ட மாதர் பலர், கண்ணனது கள்ள வுள்ளத்தைக் குறித்துப் பலவாறு பகர்வாராயினர்: 'அந்தோ, இவ்வந்தணர் யாது கருதி வந்தனரோ! இப்போது வறிதே செல்கின்றனரே! இந்த மாயனை நம்பியும் வரலாமோ! வந்ததும் இவன் அவர்தம் காலில் விழுந்தான், கட்டியணைத்தான், ஆடினன், பாடினன்; புகழ்ந்தான், போற்றினன்; முடிவில் ஒன்றும் கொடாது ஊருக்கு அனுப்பிவிட்டானே! "கடித்த பாக்குக் கொடாத சிற்றப்பன் கடைத் தெரு வரையில் வழி விட்டான்" என்னும் உலக வழக்கே போல், கடை வாயில் வரையிலும் வந்து வழி காட்டினன். என்னே, இவன் வஞ்ச நெஞ்சம் இருந்தவாறு!' எனத் தூற்றுவா ராயினர். அவர்களில் ஒருத்தி, 'நாம் வீணே நமது கண்ணபிரானை இவ்வாறு தூற்றலாகாது; அவன் எல்லாம் செய்ய வல்லவன்; அணுவை மலையாகவும், மலையை அணுவாகவும் மாற்றவல்ல ஆற்றலுள்ளவன்; நல்லோர் எதையும் சொல்லாமலே செய்வர்.

'சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே — நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடின்
பலாமாவைப் பாதிரியைப் பார்.'

என்னும் முதுமொழியை நீவிர் அறியீரோ?' என்றாள். அது கேட்ட மற்றொருத்தி, 'ஆம், ஆம், எதனையும் தீர யோசியாமல் உரைத்தல் கூடாது; தன் உள்ளத்தில் நினைத்த மாத்திரத்தால் இந்திர பதவியையும்

எளிதில் ஈயவல்ல நமது கண்ணபிரான் இந்த அந்தணருக்குச் சிறிது பொருள் கொடுப்பதையும் சிரமமாக எண்ணுமோ! வந்தவருக்குக் கையில் கொடுத்து அனுப்புவது நல்லதோர் வழக்கன்று. அதனால், நமது கண்ணபிரான் அவருக்கு வியப்பு உண்டாகும்படி வேண்டியவற்றைப் பின்பு அவர் தம் அகத்திற்கே அனுப்ப எண்ணியிருக்கலாம்; அல்லது, இப்போதே ஆண்டு அமைத்துவிட்டும் இருக்கலாம். அவனது திருவிளையாடலை அறியவல்லார் யாவர்!' என்றாள்.

5. இஃது இவ்வாறாக, கண்ணன்பால் விடைகொண்ட முனிவர் துவரைப் பதியின் திருவீதிகளைக் கடந்து, துறைமுகத்தை யணுகி, மரக்கலம் ஊர்ந்து, தம் நகர்ப்புறமாகச் செல்லுங் காலத்தே, கந்தை எல்லாம் கனக வஸ்திரமாயிற்று; துளபமாலை துகளில்லாத நவமணி மாலையாகத் தோன்றிற்று. உடலம் பூரித்தது.

6. அதுகண்ட குசேலர் தம் யாக்கையை நோக்கித் தாமே ஐயுற்று, அதனைப் பன்முறை பார்த்துப் பார்த்து வியப்புடன் நடப்பாராயினர். ஆண்டுக் கண்ணன் ஏவலினால் ஏவலர் பலர் தொடர்ந்து வந்து குசேலரது குற்றேவலுக்கு எதிர் நோக்கிச் சூழ்ந்து நின்றனர். அப்போது முனிவர் கண்ணபிரானது நட்பின் திறத்தை உன்னியுன்னி, அவரைப் பலவாறு புகழ்ந்துகொண்டே சகல ஆடம்பரங்களோடும் தம் சூழலை யடைந்தனர்.

7. ஆண்டு, அவரது பர்ணசாலை முற்றும் சொர்ணசாலையாக மாறி யிருந்தது. குசேலர் அது தம்முடைய அகம் என்பதையும் அறியாராய் மயங்கி

நின்றனர். 'இஃது என்னே, யாவும் புதுமையாக விளங்குகின்றன ! நம்மை நாமே அறிதற்கில்லையே ! இது செல்வத்தின் செய்கை யன்றோ? நமது கண்ணபிரான் திருவிளையாடலை என்னென்று இயம்பு ! அடியவர் எண்ணியதை எண்ணியவாறே ஈயவல்ல கருணாநிதி அவனேயன்றோ' என்று அவனது அருட்டிறத்தை யுன்னித் திகைத்து நின்றார். தன் மணாளர் மயங்குவது கண்ட சுசீலை, பரிந்துவந்து, அவரை எதிர்கொண்டழைத்தனள்; மக்களும் பேரவாவுடன் ஓடி வந்து தம் தந்தையைச் சூழ்ந்து மகிழ்ந்தனர். குசேலரது குடிசை குபேரன் மாளிகைபோல் விளங்கிற்று. பொற்குவியலும், நவமணிக் குப்பையும் மூலைக்கு மூலை குவிந்திருந்தன. சுசீலை அன்று தொடங்கித் தன் மக்களுக்கு வயிறார உணவுகொடுத்து, அவர்களை ஆடை அணிகளால் அலங்கரித்து கண்குளிரக் கண்டு, மகிழ்ந்து வாழ்ந்திருந்தனள்.

8. குசேலர் செல்வ வாழ்க்கையைக் கண்டனர். அதனைச் சிலநாள் அனுபவித்த பின், வறுமையே நல்வாழ் வெனக் கொண்டனர். செல்வத்தால் வருவது தீமையே யென்று உணர்ந்தனர். செல்வமே தெய்வபக்தியைக் கெடுப்பது, செல்வமே சிந்தையை மயக்குவது என்பதை உண்மையுறத் தெளிந்தனர். அதனால் முனிவர் அவ் வாழ்க்கையில் சற்றும் பற்றில்லாதவராய், தாமரை யிலைமேல் தண்ணீரே போல், பற்றியும் பற்றாமலும் இருந்து, கண்ண னடிகளைக் கனவினும் மறவாது, மனமொழி மெய்களால் வழுத்தி வாழ்ந்திருந்து, முடிவில் பரந்தாமத்தை யடைந்து இன்புற்றனர். அவர்தம் மக்களும் வளம் பெற வாழ்ந்திருந்தனர்.

15. ஸர் ஐஸக் நியூட்டன்

ஸர் ஐஸக் நியூட்டன் கி. பி. 1642ஆ டிஸெம்பர்மீ 25உ பிறந்தனர். அவர் பிறந்தவுடனே ஒரு சிறிய தட்டத்தில் அடங்கக்கூடியவளவு சிறிய குழந்தையா யிருந்தனராம். அவர் ஓர் இளவாழைக் குருத்தேபோல் துவண்டு மெலிந்த உடலினரா யிருந்தமையால், அவர் உயிரோடு பிழைத்திருப்பார் என்று எவரும் நம்பவில்லை. ஆயினும், அவர் இந் நிலவுலகில் அடைதற்கரிய கீர்த்தியும் பிரதாபமும் அடைந்து, நெடுநாள் வாழ்ந்திருந்தனர் என்பது அவர் சரிதத்தால் நன்கு விளங்கும்.

2. நியூட்டன் குழந்தையா யிருக்கும் பொழுதே அவருடைய தகப்பனுர் மரணமடைந்தனர். அவரது தாயார் அவரை அதிக கவனத்தோடும் ஜாக்கிரதையோடும் வளர்த்து, அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினுர்; அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டு. முதலில் அவர் படிப்பிலே அதிகமாகக் கவனஞ் செலுத்திப் படிக்கவில்லை. ஆனல், வரவர அவர் கல்வியில் கவனம் செலுத்தி அதிக பிரயாசப்பட்டுப் பாடங்களைச் செவ்வையாய்ப் படித்து வரவே, தம் சகபாடிகளுக்குள் தாமே முதன்மையான ஸ்தானத்தை வகித்தனர். மாணுக்கர்கள் விளையாடும்பொழுது, ஐஸக் நியூட்டன் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து எதைப்பற்றியாவது யோசித்துக்கொண்டாவது, கடினமான கணக்குகளை ஆராய்ந்துகொண்டாவது, பலவிதமான யந்திரப்படங்களை வரைந்து அவைகள் சரியா யிருக்கின்றனவா என்று உற்று ஊகித்துப் பார்த்துக்கொண்டாவது இருப்பார். அவர் சாந்த

குணம் உள்ளவர்; ஒருபோதும் சும்மா இராமல் எந்த விஷயத்தைப் பற்றியாவது சிந்தித்துக்கொண்டிருக்-கும் சுபாவமுள்ளவர். அவர் மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து ஒருபோதும் விளையாடமாட்டார்; ஆனால், அவர்கள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டு மகிழ்-ந்திருப்பார். காற்றிலே பறக்க விட்டு விளையாடும் காகிதக் காற்றாடியை அந்நாட்டில் பிள்ளைகளுக்காக நூதனமாய்க் கண்டுபிடித்தவர் நியூட்டனே. கடிதாசி-யினாலே ஒருவிதமான கைலாந்தரைப் புதிதாகச் செய்-தனர். மேல்நாடுகளில் மாரிக்காலத்தில் காலைநேரம் இருட்டாயிருக்குமாதலால், அவர், தாம் செய்த கடிதாசி லாந்தரைக் கையில் பிடித்துக்கொண்டு அதன் வெளிச்சத்திலே பள்ளிக்கூடத்திற்கு நடந்து போவார். சித்திரப்படம் வரைவதும் செய்யுள் இயற்-றுவதும் அவருக்கு மிகவும் விருப்பமான காரியங்கள்.

3. நியூட்டன் பதினைந்து பிராய முள்ளவரா-யிருக்கும்போது, தம் தகப்பனுருடைய நிலங்களையும் மற்றச் சொத்துக்களையும் பார்க்கும்படி அவரது தாயார் அவருக்குக் கூறவே, அவர் பள்ளிக்கூடத்தை விடும்படி நேரிட்டது. பொருள்களை வாங்குவதிலே-யும் விற்பதிலேயும் அவரைப் பழக்கும்பொருட்டு அவருடைய தாயார் அவரைச் சனிக்கிழமைதோறும் சந்தைக்கு அனுப்புவது வழக்கம். நம்பிக்கையுள்ள வேலைக்காரி ஒருத்தியை அவருடைய தாயார் அவ-ருடன் கூட்டி அனுப்புவது உண்டு. சந்தைக்குப் போவதும் வருவதும் நியூட்டனுக்குப் பிரியமில்லை. அவர் குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு சந்தைக்குப் போவது வழக்கமாகையால், குதிரையை வண்டியில் பூட்டினவுடனே அவர் தம் வேலைக்காரியை விட்டு

விட்டு, விரைந்து போய்விடுவார். லண்டன் பட்டணத்தில் எங்கேயாவது படிக்கிற இடத்திற்குப்போய், சந்தையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வருகிற நேரம்வரையில், ஏதாவது நல்ல புத்தகங்களை எடுத்துப் படித்துக்கொண்டிருப்பார்.

4. வயல் வெளிகளிலே ஆடுமாடுகளை மேய்க்கும்பொருட்டு அவருடைய தாயார் அவரை அனுப்புவதுண்டு; அதுவும் அவருக்கு விருப்பமில்லை. ஆடு மாடுகளைக் கவனியாமல், கையிலே ஏதாவது புத்தகம் வைத்துப் படித்துக்கொண்டிருப்பார்; அப்பொழுது ஆடு மாடுகள் அயலார் வயலுக்குள் இறங்கிப் பயிர் பச்சைகளையும், கதிர்களையும் மேய்ந்து அழித்துவிடும். அதுகண்டு வயலுக்கு உடையவர்கள் நியூட்டனைப் பலவாறு நிந்திப்பார்கள்.

5. ஒருநாள் அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, தம் கையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு, முக்கியமான ஒரு பெரிய கணக்கை ஆய்ந்துகொண்டிருக்கும்பொழுது, அவ் வழியே போய்க்கொண்டிருந்த அவருடைய சிறிய தகப்பனர், நியூட்டனுடைய கண்ணும் கருத்தும் அக் கணக்கிலேயே பதிந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து, அவருடைய தாயாரிடம் சென்று, அவரை மறுபடியும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி சொன்னர். அவ்வம்மை அதற்குச் சம்மதித்து, அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினர். நியூட்டன் அதிக உற்சாகத்துடன் பள்ளிக்கூடத்திற்குப் போவாராயினர்.

6. அவர் பதினெட்டுப் பிராயமுள்ளவரா யிருக்கும்பொழுது, உயர்தரப் படிப்பிற்காகக் கேம்பிரிட்ஜ்

பட்டணத்திற்குச் சென்று கேம்ப்ரிட்ஜ் கலாசாலையிற் சேர்ந்தார். நியூட்டன் அப்பொழுது நக்ஷத்திரம், ஒளி, கணிதம், யந்திரம் முதலியவற்றில் அதிக நிபுணராக விளங்கினர். நெடுங்காலம் நியூட்டன் அங்கேயே தங்கியிருந்து, அதிக ஜாக்கிரதையோடு படித்துக்கொண்டிருந்தனர். 1655 ஆம் வருஷத்தில், கேம்ப்ரிட்ஜ் பட்டணத்தில் பயங்கரமான நோய் ஒன்று உண்டாயிற்று. அதனால் அவர் கொஞ்சகாலம் கேம்ப்ரிட்ஜ் பட்டணத்தை விட்டு அப்பாற் சென்றிருக்க நேர்ந்தது.

7. நியூட்டன் மறுபடியும் கேம்ப்ரிட்ஜ் பட்டணத்திற்கு வந்தபொழுது அதிவிநோதமான தூரதிருஷ்டிக் கண்ணுடி யொன்றைச் செய்து, அதனை, அப்போது இங்கிலந்தின் அரசராய் விளங்கிய இரண்டாம் சார்ல்ஸ் மன்னனிடத்தே கொண்டுபோய்க் கொடுத்தனர். அரசன் அதனைக் கண்டு அதிசயித்தான். அதுமுதல் நியூட்டனுடைய பெயர் அந்நாடு முழுதும் பிரசித்தமடைந்தது.

8. ஒருநாள், நியூட்டன் தமது தோட்டத்தில் ஒரு பெரிய விருக்ஷத்தின் கீழே தனிமையாக உட்காந்துகொண்டிருந்தனர். அப்பொழுது அவர் ஏதோ ஒரு காரியத்தைப்பற்றி ஆழ்ந்த கருத்துடன் ஆலோசித்துக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில், அவருக்குச் சமீபத்தில் இருந்த ஒரு மரத்திலிருந்து திடீரென்று ஒரு பழம் விழுந்தது. உடனே அவருடைய மனத்தில் வேறொரு ஆலோசனை பிறந்தது. 'அந்தப் பழம் பூமியின்மேல் விழக் காரணம் என்ன ? அஃது அப்படியே மேலே போயிருக்கக் கூடாதா ? அதைப் பூமிக்கு இழுப்பதற்கு ஏதோ ஒன்று இருக்கவேண்டும்.

அஃது யாது ? பூமியா அல்லது வேறென்று ?' என்று அவர் சிந்தித்தனர். பிறகு அது பூமியினிடத்து அமைந்துள்ள ஒருவித சக்தியே என்று உணர்ந்தனர். ஒரு பொருளை மேலேயிருந்து கீழே இழுப்பதற்குப் பூமியினிடத்தே அமைந்துள்ள சக்திக்கு, 'மத்தியக் கவர்ச்சி விசை' என்று பெயர்.

9. அடுத்த வருஷத்தில் நியூட்டன் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலைச் சபையின் அங்கத்தினரில் ஒருவ-ராயினர். அதன்பின்பு அவர் அங்கேயே உபாத்தியா-யரா யமர்ந்திருந்து, கடைசியாக அதே கலாசாலையில் கணிதசாஸ்திர பண்டித ஸ்தானத்தை வகித்து, அவ் வுத்தியோகத்தை மிக்க திறமையுடன் நடத்திவந்தனர்.

10. அப்பொழுது அவர் அநேக நூதனவிஷயங்-களைக் கண்டுபிடித்துக்கொண்டே இருந்தனர். சில வருஷங்களுக்கு முன்னே, சந்திரன், ஒளி, நக்ஷத்திரம் முதலியவைகளைப்பற்றித் தாம் கண்டுபிடித் திருந்த அநேக காரியங்களைப்பற்றி ஒரு நூல் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருந்தனர். அந்த நூலை அநேகர் வாங்கிப் படித்து அவரைப் புகழ்ந்து கொண்டாடி-ஞர்கள் ; நியூட்டன் பெயரை எடுத்துப் பேசாதவர் எவரும் இலர். ஒரு பிரெஞ்சுக்காரன் நியூட்டனுடைய புத்தகத்தை வாசித்துப்பார்த்தபொழுது, 'நியூட்டன் மற்றவர்களைப்போல் உண்கிறாரா ? உறங்குகிறாரா ? அவர் வேறோர் உலகத்திலே வசிப்பவராகத் தோன்று கின்றதே !' என்று கூறினனும்.

11. அதன்பின் நியூட்டன் மற்றும் பல சிறந்த புத்தகங்களை எழுதினர். ஒருமுறை அவருக்கு அதிக

மனவருத்தம் உண்டாயிற்று; இருபது வருஷமாக அவர் நாடோறும் அதிக நேரத்தையும் பணத்தையும் செலவு செய்து, பலவகைப்பட்ட நிறங்களின் தன்மையையும் ஒளியின் தன்மையையும் ஆராய்ந்து அறியப் பிரயாசப்பட்டுக்கொண்டு இருந்தனர். கடைசியாக அவைகளைப்பற்றி ஒரு நூல் எழுதி முடித்தனர். அந்த நூலை எழுதி முடிக்க வெகுகாலம் சென்றது. அதனைச் சுத்தமாக எழுதி அச்சுக்கூடத்திற்கு அனுப்பும்படி தீர்மானித் திருந்தனர். அது மாரிக் காலம். ஒரு நாள் காலை நியூட்டன் ஆலயத்திற்குப் போயினர். போகும்பொழுது, அந்நூலை மேஜையின் மீது எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்தி விளக்கின் சமீபத்தில் வைத்துவிட்டுப் போயினர். அவர் அங்கு இல்லாதபோது காற்று பலமாக அடித்தமையால் விளக்கு அசைந்து அருகிலிருந்த அரிய கையெழுத்துப் பிரதியாகிய அந்த நூலின்மேல் தாக்கவே, அஃது எரிந்து கரிந்து போயிற்று. நியூட்டன் ஆலயத்தி லிருந்து வீட்டிற்குத் திரும்பிவந்தபோது, அங்கு நடந்திருந்த ஆபத்தைக் கண்டு, அடக்கமுடியாத் துக்கங் கொண்டு, பைத்தியம் பிடித்தவர்போல் இருந்தனர். நெடுநாள்வரையில் அத்துன்பம் அவர் மனத்தைவிட்டு நீங்கவேயில்லை.

12. ஆன் என்னும் மாதுசிரோமணி இங்கிலந்து தேசத்திற்கு இராணியாராகச் சிங்காதனப் பேறு பெற்றபொழுது, அவர், நியூட்டன் கண்டுபிடித்த நூதனமான விஷயங்களையும் அவருடைய புத்தி சாமர்த்தியங்களையும் கண்டு வியந்து மகிழ்ந்து, அவருக்கு ‘நைட்’ என்னும் பட்டம் அளித்து, அவரைக் கௌரவப்படுத்தினர்.

13. ஐஸக் நியூட்டன், எதையாவது கருத்துடன் ஆலோசித்துக்கொண் டிருக்கும்போது, அவர் தம்மை மறந்திருத்தல் வழக்கமாம். தமக்கு அருகில் நடக்கும் செய்திகளும் அவருக்குத் தெரிவதில்லையாம். ஒருநாள் வித்துவச் சிரோமணியாகிய சாஸ்திரி ஒருவர் நியூட்டனைப் பார்க்க அவர் வீட்டுக்கு வந்து காத்துக்கொண்டிருந்தனர். போஜன சமயமாயிற்று; நியூட்டன் போஜனம்பண்ண வரவில்லை. மேஜையின்மீது ஆகாரம் சித்தமாயிருந்தும், நியூட்டன் எழுந்து வருவதாக ஏற்படவில்லை. அவரைப் பார்க்க வந்திருந்த அந்தச் சாஸ்திரி நெடுநேரம் காத்துக்கொண் டிருந்தனர்; நியூட்டன் வரவே யில்லை. சாஸ்திரிக்கோ பசி அதிகமாயிற்று. ஆகையால், அவர், நியூட்டனுக்காக மேஜைமேல் வைத்திருந்த பொரித்த கோழியைச் சாப்பிட்டுவிட்டு, அதன் எலும்பை மாத்திரம் கிண்ணத்திற் போட்டு முன்போலவே அதை மூடி வைத்துவிட்டு, நெருப்பண்டை உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண் டிருந்தனர். நியூட்டன், கடைசியாகத் தம் ஆலோசனை முடிந்து, சாப்பாட்டு அறைக்கு வந்தார், அங்கேயிருந்த சாதிஸ்ரியாரைப் பார்த்து, அவரைக் காக்கவைத்ததற்காக மன்னிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டே, 'போஜனம் ஆயிற்று?' என்று வினவினர். அதற்குச் சாஸ்திரியார், 'ஆம் ஆயிற்று' என்றனர். அதன் பின்பு நியூட்டன் நாற்காலியில் உட்கார்ந்து போஜனஞ் செய்யும்படி கிண்ணத்தைத் திறக்க, அதில் பொரித்த கோழியின் எலும்புகள் நிறைந்திருக்கக் கண்டு, 'இதென்ன, நான் சற்று முன்னே சாப்பிட்டதையும் மறந்துபோனேனே!' என்று வியந்து கூறினராம்.

14. 1704 ஆம் வருஷம் நியூட்டன் ஒளியைப்பற்றி ஒரு நூல் எழுதி வெளியிட்டனர். அதனால் அவருக்கு மிகவும் மேலான கீர்த்தி உண்டாயிற்று.

15. நியூட்டனிடத்தில் விசேஷ குணம் ஒன்று இருந்தது. அவருக்கு ஒருபோதும் கோபம் வருவதில்லை. ஒருநாள் சாயங்காலம் அவர் சில விஷயங்களைப்பற்றி எழுதிக்கொண்டிருந்தனர்; அப்பொழுது அக்காகிதங்களை மேஜைமேல் வைத்துவிட்டுத் தோட்டத்திற்போய்ச் சற்று உலவிவிட்டுத் திரும்பிவந்தனர். அதற்குள்ளே, அவர் செல்வமாக வளர்த்த ஒரு சிறிய நாய் அக் கடிதங்களை யெல்லாம் கடித்துக் கிழித் துண்டு துண்டாகக் கிழித்துவிட்டது. அவர் கொஞ்ச நேரம் அக் கடிதாசித் துண்டுகளை அதிக துக்கத்தோடு பார்த்துக்கொண் டிருந்துவிட்டு, 'டயமண்ட்' (வயிரம்) என்னும் பெயருடைய அந் நாயை நோக்கித் திரும்பி நின்று, 'ஐயோ, டயமண்ட், நீ எனக்கு எவ்வளவு நஷ்டத்திற்குக் காரணமானாய் என்பது உனக்குத் தெரியாதே!' என்று கூறினர்.

16. நியூட்டனுக்குச் செருக்கு என்பதே கிடையாது. அவர் எல்லாரிடத்திலும் தாழ்மையாகவே பேசுவார். இங்கிலந்து தேசம் முழுதும் அவரைப் புகழ்ந்து கொண்டாடிற்று. அவர் எழுதி அச்சிட்ட நூல்களெல்லாம் நாடு முழுதும் பரவி, அவருக்கு என்றும் அழியாத கீர்த்தியை விளைவித்தன. அந்தக் காலத்திலே உயிரோடிருந்த பண்டித சிகாமணிகளுள்ளே தாம் சிறந்தவரென்பது அவருக்குத் தெரியும்; ஆயினும், அவர் ஒருபோதும் கர்வம் படைத்துத் தமது சாமர்த்தியத்தைப்பற்றிப் பெருமை பாராட்டிப் பேசியதில்லை. யாராவது எவ்விஷயத்தைப்பற்றி-

யாவது சந்தேக நிவர்த்தி செய்துகொள்ளுமாறு அவ-ரோடு சம்பாஷித்தால், அவர் அந்த விஷயத்தைப்-பற்றித் தமக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டு, 'என்-னைப் பார்க்கிலும் இவ்விஷயத்தை நன்கு அறிந்தவர் யாரையாவது கேட்டு இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று சொல்வது வழக்கம்.

17. முடிவில் நியூட்டனுடைய மனத்திற்கும் தேகத்திற்கும் சுகவீனம் உண்டாயிற்று. அவர் அத-னால் அதிக வேதனை அடைந்தனராயினும், அதைச் சற்றும் வெளிக்குத் தெரிவிக்காமல் கடைசிவரையில் தம் வேலையை ஊக்கமாக நடத்திக்கொண்டிருந்தனர். அவர் மரிக்கும்பொழுது அவருக்கு வயது எண்பத்-தைந்து. அவரது சரீரம், 'வெஸ்ட்மினிஸ்ட்டர் அபே' என்னும் ஆலயத்தில் சமாதி செய்யப்பட்டது. அவ-ருக்கு ஞாபகஸ்தம்பமாக ஒரு கோரியும் கட்டப்பட்-டுள்ளது. கேம்ப்ரிட்ஜ் பட்டணத்திலே நியூட்டன் படித்துக்கொண்டிருந்த சர்வகலாசாலைக்குச் சமீப-மாக இருக்கும் ஆலயத்திலே அவரைப்போல் சிலை பொன்று செய்து வைக்கப்பட்டு இருக்கிறது. அப் படத்திலே நியூட்டன் நீண்ட அங்கி தரித்துக்கொண்டு வானத்தைப் பார்த்து மிகவும் கருத்தாக ஆலோ-சித்துக்கொண்டிருப்பதுபோல் காட்டப்பட்டுள்ளது. ஆனால், 'ஸர் ஐஸக் நியூட்டன்' என்னும் அவரு-டைய பெயரை ஜனங்களுக்கு ஞாபகப்படுத்துவதற்கு யாதொரு உருநாட்டும் வேண்டுவதில்லை. அவர் கல்வி விஷயமாகவும் சாஸ்திர விஷயமாகவும் செய்த நன்-மைகளே அவருடைய பெயரையும் கீர்த்தியையும் என்றும் நன்கு விளக்காநிற்கும்.

16. தருமிக்குப் பொற்கிழி யளித்தது

வம்மிச சூடாமணி பாண்டியன், சோமசுந்தரக் கடவுள்பொருட்டுத் திருநந்தவனம் ஒன்று உண்டாக்கிச் சம்பகவனமும் தனியே வைத்தான். அதிலே மலர்ந்த சம்பகப் பூக்களைக் கொய்து, இண்டை முதலிய பலவித மாலைகளைத் தொடுத்துச், சோமசுந்தரக் கடவுளுக்குச் சாத்துவித்தான். சம்பகமாலை யணிந்த சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோலத்தைத் தரிசித்து வியந்து, 'இவர் சம்பக சுந்தரர்' என்று சொல்லி, வணங்கினான். இன்றைக்கும் அக்கடவுளுக்கு அத் திருநாமம் வழங்குகின்றது. அவருக்குச் சம்பக மாலை சாத்துவித்த காரணத்தினாலே, வம்மிச சூடாமணி பாண்டியனும் சம்பக பாண்டியன் எனப் பெயர் பெற்றான். சம்பக பாண்டியன் சம்பக சுந்தரருக்குப் பணிசெய்துகொண்டு வரு நாளிலே, இளவேனிற் காலம் வந்தது.

2. அவ் விளவேனிற் காலத்திலே ஒரு நாள், சம்பகபாண்டியன், தன்னுடைய தேவியோடும் வெப்ப நீக்கத்தின் பொருட்டு, அச் சம்பகவனத்தில் ஒரு சந்திரகாந்தக் குன்றில் இருந்தான். அவனுக்கு நேரே, ஒரு நறுமணம் தோன்றும்படி, தென்றற் காற்று வீசிற்று. பாண்டியன், அவ் வாசத்தை மோந்து, 'இஃது ஒரு திவ்விய வாசம்; தென்றற் காற்றானது சோலையில் வெளவிய வாசமன்று. காற்றுக்கும் வாசமில்லை. இஃது எவ்வாசமோ!' என்று நினைந்து, தன்னுடைய தேவியைத் திரும்பிப் பார்த்தான்; அது அவளுடைய கூந்தலின் வாசமாயிருந்ததைக் கண்டு, 'இவ்வாசம் வண்டுக்கும் தெரியாது' என்று நினைந்து மகிழ்ந்து, 'இவ்வாசம் கூந்தலுக்கு இயற்கையோ,

செயற்கையோ!' என்று ஐயங்கொண்டான். 'நான் ஐயுற்ற கருத்தை யாவராயினும் அறிந்து பாடல் செய்வாராயின், அவரே இவ்வாயிரம் பொன்னுக்கும் உரியர்' என்று சொல்லி, ஒரு பொற்கிழியை ஏவ-லாளர் கையிற் கொடுத்தான். அவர்கள், அதைக் கொண்டு போய்ச், சங்க மண்டபத்தின் முன்னே தூக்கினார்கள். சங்கப் புலவர்களெல்லாரும், தனித் தனியே ஆராய்ந்து ஆராய்ந்து, பாண்டியனுடைய மனக்கருத்தை அறியாது வருந்தினார்கள்.

3. அப்பொழுது, ஆதிசைவருள் ஒருவனும், தந்தை தாய் இல்லாதவனும், பிரமசாரியும், விவாகத்-தில் விருப்புடையனுமாகிய தருமி என்பவன், சோம சுந்தரக்கடவுள் சந்நிதியை அடைந்து வணங்கி, 'எம்பெருமானே, அடியேனுக்குத் தந்தையும் தாயும் இல்லை; விவாகத்தில் விருப்பமுற் றிருக்கின்றேன். அதற்குப் பொருள் சிறிதுமில்லை. அடியேன் வேத சிவாகமங்களெல்லாம் ஓதினேனாயினும், இல்வாழ்க்-கையின்றி உமது பூசைக்கு அருகனானேனே! ஆகேன். நீர் சர்வஞ்ஞர். பாண்டியனுடைய மனக்கருத்தை யறிந்து, ஒரு செய்யுள் செய்து தந்தருளும்' என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே, சோமசுந்தரக் கடவுள், ஒரு தமிழ்ச் செய்யுளைச் செய்து கொடுத்-தருளினார். அஃது இது,

'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே.'

தருமி வணங்கி, அந்தச் செய்யுளை வாங்கிக்கொண்டு

போய்ச், சங்கமண்டபத்தை அடைந்து, அங்குள்ள புலவர்கள் கையிலே நீட்டினன். அவர்கள் யாவரும் வாங்கி வாசித்துச் சொற்சுவையும் பொருட் சுவை-யுந்தூக்கி, 'நன்று, நன்று' என்று மகிழ்ச்சியடைந்து, பாண்டியனெதிரே போய், அப்பாட்டைச் சொன்-னார்கள். பாண்டியன், தன் மனக்கருத்து ஒத்தலி-னாலே முடியசைத்து, மனமகிழ்ந்து, 'இச் செய்யுள் கொண்டுவந்த பிராமணன், இப்புலவர்களோடுபோய், ஆயிரம் பொன்னையும் கிரகித்துக்கொள்ளக் கடவன்' என்றான்.

4. அரசன் ஏவலினாலே தருமி புலவர்களோடு போய்ச் சங்கமண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்-கிழியை அறுக்கும் பொழுது, நக்கீரர், அவனை விரைந்து அணுகி, 'நில், நில்' என்று தடுத்து, 'இச் செய்யுளிலே குற்ற மிருக்கின்றது' என்றார். உடனே தருமி ஏங்கி, மெல்லச் சென்று, அச் செய்யுளைச் சோமசுந்தரக்கடவுள் திருமுன் வைத்து, 'எம் பெரு-மானே, ஏழையேனுக்கு நீர் இப்பிழைப் பாட்டைத் தந்தது என்னை! வறுமை நோயினால் வருந்திப் பல நாள் உம்மை வழிபடும் அடியேன் உம்மால் இப் பொழுது பெற்ற பொருளை இழந்தேன் என்று தமி-யேன் பேசிலேன். எவ்வெவர்க்கும் மேலாகிய உமது செய்யுளுக்குச் சில் வாழ்நாள் சிற்றறிவினை யுடைய புலவர் குற்றஞ் சொன்னாராயின், யார் உம்மை மதிப்-பார்! இவ் விகழ்ச்சி உமக்கல்லது எனக்கேது' என்று சொல்லி, நின்றிரங்கினன்.

5. அப்பொழுது, சோமசுந்தரக் கடவுள், ஒரு புலவர் வடிவங்கொண்டு, விபூதியைத் திரிபுண்டர-

மாகத் தரித்து, கண்டிகை பதக்கம் குண்டலம் மோதிரம் முதலியவைகளை அணிந்து, திருவடிகளிலே பாதுகை மாட்டிக்கொண்டு, முத்துக்குடை நிழற்ற, வெண்சாமரம் வீச, கற்றுச்சொல்லிகள் பின்னே வரச் சென்று, சங்கமண்டபத்தை அடைந்து, நேர்நின்று, அங்கிருந்த புலவர்களை நோக்கி, 'நமது செய்யுளுக்குக் குற்றஞ் சொன்னவர் யாவர்?' என்றார். என்னு முன்னர், நக்கீரர், அஞ்சாது, 'நானே சொன்னேன்' என்றார். புலவர், 'யாது குற்றம்?' என, நக்கீரர், 'சொற்குற்றம் இன்று; பொருட்குற்றம்' என்றார். புலவர், 'பொருட்குற்றம் என்னை?' என, நக்கீரர், 'கூந்தலுக்கு வாசம் பூவின் சார்பாகிய செயற்கையாலன்றி, இயற்கையா வில்லையே' என்றார். புலவர், 'பதுமினியுடைய கூந்தலோ?' என, நக்கீரர், 'அதுவும் அத்தன்மையதே' என்று கூறினர். புலவர், 'தெய்வப் பெண்களுடைய கூந்தலோ?' என, நக்கீரர், 'அதுவும் மந்தார நறுமலர் அளைந்து மணத்தலாற் செயற்கையதே' என்றார். புல்வர், 'நீ வழிபடுகின்ற திருக்காளத்தியப்பருடைய சத்தியாகிய ஞானப்பூங்கோதையம்மையாருடைய கூந்தலும் அத்தன்மையதோ?' என, நக்கீரர், 'அதுவும் அத்தன்மையதே' என்றார். உடனே புலவர் நெற்றிக் கண்ணைச் சிறிது காட்ட, நக்கீரர் அதற்கும் அஞ்சாது, 'உமது உடம்பு முழுதுங் கண்ணானாலும், உமது பாடல் குற்றமே குற்றம்' என்றார். நக்கீரர், சிவபெருமானது நெற்றிக் கண்ணினுடைய அக்கினி வெப்பத்தினாலே பொறுக்கலாற்றாது, பொற்றாமரை வாவியிலே போய் விழுந்து அழுந்தினார். அவரை வென்ற புலவர் திருவுருக் கரந்தருளினார்.

17. கீரனைக் கரையேற்றியது

நக்கீரர் சிவபிரானது நெற்றிக்கண்ணின் அக்கினியினாலே பொற்றாமரை வாவியில் விழுந்து துயருழப்ப, மற்றப் புலவர்களெல்லாரும் கண்டு, பொறாது நடுங்கினார்கள். நக்கீரர் இல்லாத சங்கம், அரசன் இல்லாத குடியும், நாயகமணி யில்லாத கண்டிகையும், ஞானம் இல்லாதவர் கல்வியும் போன்றது. 'ஐயையோ, சொற்பொருள் வடிவாகிய சிவபிரானோடு வாதுசெய்த இப்பிழையோ பெரிது! இது தீர்வதெப்படி, உய்வது அரிதரிது' என்று யாவருஞ் சிந்தித்தார்கள். 'சிவபிரான், தமது திருக்கைலாச மலையை எடுத்த இராவணனும் கையில் வீணைகொண்டு இசைபாடத் திருவுள மகிழ்ந்து, அவன் செய்த தீங்கைப் பொறுத்ததுமன்றி அவனுக்குத் தேரும் வாளுங் கொடுத்தருளினாரன்றோ! இப்பிழை யாவரானும் நீக்கரிது; யாவருக்கும் தேவராகிய சிவபெருமானே திருவுளம் திரும்பினால், இது நீங்கிவிடும். இதுவே துணிவு' என்று தங்களுள்ளே சொல்லிக்கொண்டு போய்ச், சங்கப் புலவர்கள், சோமசுந்தரக் கடவுளை வணங்கி,

'திருத்தனே சரணஞ் சரணம் மறைச்சென்னிமேல்
நிருத்தனே சரணஞ் சரணம் நிறைவேதநூல்
அருத்தனே சரணஞ் சரணம் திருவால்வாய்
ஒருத்தனே சரணஞ் சரணங்க ளுனக்குநாம்.'

என்று துதித்து, 'எம் பெருமானே, புண்ணியஞ் செய்தவருக்கு இன்பத்தையும் பாவஞ் செய்தவருக்குத் துன்பத்தையும் கொடுப்பது உமது திருவருள் இயற்கை. அதனால், அது உயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையும் ஆகும். நக்கீரர் கல்விச் செருக்கினால் அறிவழிந்து உமது செய்யுளைப் பிழை யென்றமையால்,

தீர் அவரை நெற்றிக் கண்ணினால் விழித்து, அவ்வெப்பத்தினால் அவர் பொற்றாமரை வாவியில் விழும்படி செய்தீர். இனிப் பெருங் கருணை கூர்ந்து, இந்தப் பிழையைப் பொறுத்தருளும்' என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

2. அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள், மீனாக்ஷியம்மையாரோடு எழுந்துபோய், பொற்றாமரை வாவிக் கரையை அடைந்து, புலவர் கூட்டத்துள்ளே நின்றுகொண்டு, அருட்கண்ணினாலே பார்க்க, நக்கீரர், தம்முடைய பொறி புலன் கரண மெல்லாஞ் சிவபெருமானுடையனவேயாக, அவரது பெருங் கருணைக் கடலில் ஆழ்ந்து, அன்புருவ மாயினர். 'உலக மாதாவாகிய ஞானப்பூங்கோதை யம்மையாருடைய கூந்தலுக்குத் தீங்கு சொல்லிய கொடிய நாவின் குற்றத்தை அவரே யன்றி, யாவர் பொறுப்பார்?' என்று, திருக் காளத்தியப்பர்மீது நேரிசை வெண்பாவினாலே கைலைபாதி காளத்திபாதி யந்தாதி பாடினர். சிவபெருமான், அதைத் திருச்செவி மடுத்து, நேர் வந்து, அவருடைய கையைப் பிடித்துக் கரையில் ஏற்றியருளினர்.

3. நக்கீரர், சோமசுந்தரக் கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கிச், சிவபெருமான் தீமை செய்தவருக்கு நிக்கிரகமும், நன்மை செய்தவருக்கு அநுக்கிரகமும் செய்தமையைப் பொருளாகக்கொண்டு, கோபப்பிரசாதம் பாடி, சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யெழுந்தார். மற்றைப் புலவர்களுந் தனித் தனியே துதித்து வணங்கினர்கள். சிவபெருமான், நக்கீரருக்குத் திருவருள் சுரந்து, 'நீ முன்போலப் புலவர்கூட்டத்துள் இருக்கக்கடவாய்' என்று பணித்து, மறைந்தருளினர்.

4. நக்கீரரும், மற்றைப் புலவர்களுஞ் சங்க மண்டபத்தின் முன்னே தூங்கிய பொற் கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுத்து, பாண்டியனைக் கொண்டும் சில வரிசைகள் கொடுப்பித்துக் கல்விச் செல்வர்களாய் வாழ்ந்திருந்தார்கள். சம்பக பாண்டியன் நாடோறுஞ் சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துப் பிற்பல திருப்பணிகளை நடத்திக்கொண்டிருந்தான்.

18. கீரிப்பிள்ளையைக் கொன்றது

என்னஅக் கதையே தென்னூர் எழில்பெறு கௌட தேச
மன்னவன் தனக்கு நித்தம் வந்துபஞ் சாங்கம் சொல்வோன்
தன்னது தேவி கர்ப்பந் தரித்திலள் அதனுற் பிள்ளை
என்னவோர் கீரிதன்னை எடுத்தவன் வளர்த்தான் மன்னே.

புத்திர வாஞ்சை யாலே புல்குவன் மடிமேல் வைப்பன்
முத்தமும் இட்டுக் கொள்வன் முந்தியே பாலும் சோறும்
துய்த்திட அளிப்பன் மார்பில் தூங்கவும் படுத்திக் கொள்வன்
மெத்தவும் களித்து நெஞ்சில் விருப்புடன் வளர்த்த பின்னர்.

மனையவள் யாகசேனி வயிற்றினில் கருப்பம் கண்டே
சுனைவளர் குவளை உண்கண் தோகைநல் லாளே நீயோர்
தனையனைப் பெறுவாய் என்றான் சதுர்மறைத் தலைவன் ஆகி
நினையும்நம் குலமும் காப்பன் நிதியமும் படைத்து வாழ்வன்.

வயதொரு நூறி ருப்பன் மன்னவன் சித்த மெச்ச
நயபுரோ கிதமும் சொல்லி நலங்களும் பெறுவ னென்றே
தயவொடு தேவ சன்மா சாற்றலும் தேவி யான
கயல்நெடுங் கண்ணாள் என்ன காரியம் சொன்ன யன்றே.

காணுமுன் கேட்கு முன்னே காரியங் களைநி னைந்து
வீணிலே பூமி யின்மேல் விழுந்துருண் டழுது நெஞ்சம்
நாணினன் பிரம சாரி நாடிலங் கதுபோல் நீயும்
பூணணி மார்ப வீணே புகலவொண் ணதென் றாளே.

ஆதலால் காணு முன்னே அகத்தினுள் நினைக்கொ ணதென்
றோதிய யாக சேனி யுடனவன் இருக்கும் நாளில்
தீதிலா முகூர்த்தந் தன்னில் செல்வனும் பிறந்தான் அந்தச்
சூதகம் கழிக்கு நாளோர் சுனையினின் மூழ்கப் போனான்.

ஆயிழை போகை யாலே ஆரணம் முழுதும் வல்லோன்
சேயினைக் காத்தி ருந்தான் சிரார்த்தமென் றரசன் தூதர்
நீயவண் வருக என்றூர் நேரமும் சென்று போனல்
போயதை யெல்லாம் வேறு புரோகிதர் கொண்டு போவார்.

என்றுதன் மனத்தி லெண்ணி இன்பமாய் வளர்த்த கீரி
தன்றுணை யாக அந்தத் தனையனை வைத்து நீங்கிச்
சென்றனன் அரசன் வீட்டிற் சிரார்த்தமுன் முடித்துப் பெற்ற
பொன்துகி லரிசி யெல்லாம் பொதிகளி லேற்றிக் கொண்டே.

வருமுனே சேயைக் கிட்டி வந்ததோர் நாகம் அந்தக்
கரியநா கத்தைக் கீரி கடித்திரு துண்ட மாக்கிக்
குருதிவாய் எங்கும் ஆகக் கொண்டுசந் தோஷங் காட்ட
அருமறை யோன்முன் சென்ற தாகெடுத் தாயோ என்றே.

தண்டினு லடித்துக் கொன்ருன் தளர்வொடு வீட்டில் வந்தான்
கண்டனன் பிள்ளை முன்னே கரியபாம் போர்இ ரண்டு
துண்டமாக் கடிக்கப் பட்டுத் தூரவே கிடக்கக் கண்டான்
மண்டிய துயரம் ஆகி வயிற்றினில் அடித்துக் கொண்டான்.

வாயிலும் அடித்துக்கொண்டான் மண்ணையும்போட்டுக்கொண்டா[ன்
சேயினும் அதிகமான சேயைநான் கொன்றேன் என்ருன்
நீயெனக் கெதிரே வந்து நின்றெனைக் கெடுத்தாய் என்று
போயதன் மேல்வி ழுந்து புரண்டுருண் டரற்றி னனே.

தேவியும் மூழ்கி வந்தாள் தேவசன் மாவை நோக்கிப்
பாவியிங் கேது கீரிப் பாலகன் இறந்த தென்றே
ஓவென வுலறி நின்ருள் உற்றவா றவனும் சொன்னன்
காவியங் கண்ணி தானும் கனலிடு மெழுகொத் தாளே.

குமரகுருபர சுவாமிகள்

அருளிய

I. நீதிநெறி விளக்கம்

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. (1)

அறப்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. (2)

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச் — சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு. (3)

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்து
உய்த்துணர் வில்லெனி னில்லாகும் — உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னாகும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. (4)

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும் — நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (5)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும் [செய்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. (6)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம் — முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (7)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க — சிற்றெறியால்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னல். (8)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநாம் என்று. (9)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப — தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலியதன்றே தாழும் துலைக்கு. (10)

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு — பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (11

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉம்
குற்றந் தமதே பிறிதன்று — முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன். (12)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும் — தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கும் ஆணல் லவர்க்கு. (13)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணா — இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். (14)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும் — மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. (15)

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் — தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (16)

கண்ணோக் கரும்பா நக்கமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா — வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. (17)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா — ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. (18)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (19)

சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர் — நிறைகயத்து
ஆழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (20)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் — கழிபெரும்
கண்ணோட்டஞ் செய்யார் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (21)

இனியவ ரென்சொலினும் இன்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே — அனல்கொளுந்தும்
வெங்கார மெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்
சிங்கி குளிர்ந்துங் கொலும். [பொடிப்பச் (22)

நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் — பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். (23)

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல — கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான். (24)

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொள்
கைவிதிர்த் தஞ்சப் படும். [வான்போல் (25)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் — தெய்வம்
இலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். (26)

தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல — தீயன
நல்லன வாகாவாம் நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல். (27)

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. (28)

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந் தாங்கோடிப் பரக்கும் — கழிமுடைப்
புன்புலா ஞாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து. (29)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும் — அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை. (30)

குமரகுருபர சுவாமிகள்

அருளிய

II. சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே
கனகக் குழையுமைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. (3)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. (4)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. (5)

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. (6)

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனுமென்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. (7)

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. (8)

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே. (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. (10)

I. நீதிநெறி விளக்கம் - குறிப்பு

1. 'நீரிற் குமிழி' என்னும் பாட்டு.

நமரங்காள், இளமை நீரில் குமிழி, நிறைசெல்வம் நீரில் சுருட்டும் நெடும் திரைகள், யாக்கை நீரில் எழுத்து ஆகும்; எம்பிரான் மன்று வழுத்தாதது என்?

நமரங்காள் - நம்மவர்களே	மன்று - சபை
திரை - அலை	பிரான் - கடவுள்
யாக்கை - சரீரம்	வழுத்தாதது - துதி செய்யாதது

2. 'அறம்பொரு ளின்பமும்' என்னும் பாட்டு.

(கல்வி) அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல் இசையும் நாட்டும், உறும் கவல் ஒன்று உற்றுழியும் கை கொடுக்கும்; சிறுமை உயிர்க்கு உற்ற துணை கல்வியின் ஊங்கு இல்லை.

புறங்கடை - தலைவாயில்	உற்றுழி - நேரிட்ட இடத்து
கவல் - துன்பம்	ஊங்கு - சிறந்தது

3. 'கல்வியே கற்புடை' என்னும் பாட்டு.

கல்வியே கற்புடைய பெண்டிர்; அ பெண்டிற்கு தீம் கவி செல்வ புதல்வன் ஆக; சொல்வளம் மல்லல் வெறுக்கை ஆக; சிலர்க்கு மாண் அவை மண்ணுறுத்தும் செல்வமும் உண்டு.

புதல்வன் - புத்திரன்	அவை - சபை
வெறுக்கை - செல்வம்	மண்ணுறுத்தும் - அலங்கரிக்கும்
மாண் - மாட்சிமைப்பட்ட	

4. 'எத்துணைய வாயினும்' என்னும் பாட்டு.

கல்வி எத்துணைய ஆயினும், இடம் அறிந்து உய்த்து உணர்வு இல் எனில் இல்லாகும், உய்த்து உணர்ந்தும் சொல் வன்மை இன்று எனின் என் ஆம், அஃது உண்டேல் பொன்மலர் நாற்றம் உடைத்து.

துணை - அளவு
உய்த்து - ஆராய்ந்து
சொல்வன்மை - விளக்கும்வல்லமை
நாற்றம் - வாசனை

5. 'அவையஞ்சி மெய்விதிர்ப்பார்' என்னும் பாட்டு.

அவை அஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வியும், கல்லார் அவை அஞ்சா ஆகுலம் சொல்லும், நவை அஞ்சி ஈந்து உண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன் நலமும், பூத்தலில் பூவாமை நன்று.

மெய் விதிர்ப்பார் - உடல் நடுங்குகின்றவர்.
ஆகுலம் - ஆரவாரம்
நவை - குற்றம்
ஈந்து - கொடுத்து
நலம் - அழகு முதலியன
பூத்தலில் - உண்டாவதினும்

6. 'கலைமகள் வாழ்க்கை' என்னும் பாட்டு.

மலரவன், கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும் வண்தமிழோர்க்கு ஒவ்வான்; மலரவன் செய் வெறு உடம்பு மாய்வனபோல், மற்று இவர் புகழ்கொண்டு செய்யும் உடம்பு மாயா.

மலரவன் - பிரமன்
கலைமகள் - சரசுவதி
வெறு உடம்பு - பயனற்ற சரீரம்
மாய்வன - அழிவன

7. 'கற்றோர்க்குக் கல்வி' என்னும் பாட்டு.

முழுமணி பூணுக்கு பூண் முற்ற வேண்டா, யார் அழகுக்கு அழகு செய்வார், கற்றோர்க்குக் கல்வி நலனே கலன் அல்லால் மற்றோர் அணி கலம் வேண்டாவாம்.

பூண் - ஆபரணம்
கல்விநலன் - கல்வியறிவு
கலன் - ஆபரணம்
அணிகலம் - அணியும் ஆபரணம்

8. 'முற்று முணர்ந்தவ ரில்லை' என்னும் பாட்டு.

முற்றும் உணர்ந்தவர் இல்லை, முழுவதும் கற்றனம் என்று களியற்க; சிறு உளியால் கல்லும் தகரும், கொல் உலைக் கூடத்தினால் தகரா.

களியற்க - சந்தோஷமடையாதிருக்க	தகரும் - உடைபடும்
கல் - மலை	கூடம் - சம்மட்டி

9. 'தம்மின் மெலியாரை' என்னும் பாட்டு.

தம்மின் மெலியாரை நோக்கி, தமது உடைமை அம்மா பெரிது என்று அகம் மகிழ்க, தம்மினும் கற்றாரை நோக்கி, நாம் கற்ற எல்லாம் இவர்க்கு எற்று என்று கருத்து அழிக.

அகம் - மனம்	எற்று - எத்தன்மைத்து

10. 'ஆக்கம் பெரியார்' என்னும் பாட்டு.

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட மீ செலவு காணின் நனி தாழ்வு, ஆக்கின் துலைக்கு மெலியது மேல் மேல் எழ செல்லச் செல்ல வலியது அன்றே தாழும்.

ஆக்கம் - செல்வம்	நனி - மிகவும்
மீ செலவு - வரம்புகடந்த நடத்தை	துலை - த்ராசு

11. 'பிறராற் பெருஞ்சுட்டு' என்னும் பாட்டு.

பிறரால் பெருமை சுட்டு வேண்டுவான் யாண்டும் மறவாமே நோற்பது ஒன்று உண்டு, பிறர் பிறர் சீர் எல்லாம் ஆற்றி சிறுமை புறம் காத்து யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

நோற்பது - அனுஷ்டிப்பது	புறங்காத்து - வெளி விடாமற் காப்பாற்றி
ஆற்றி - பலரறியச் சொல்லி	

12. 'கற்றன கல்லார்' என்னும் பாட்டு.

கற்றன கல்லார் செவி மாட்டி கையுறும் குற்றம் தமதே பிறிது அன்று, முற்றும் உணர்ந்தும் தாம் அவர் தன்மை உணராதார், தம் உணராத எதிலரை நோவது எவன்.

கையுறும் - அடைகின்ற	நோவது - நொந்துகொள்வது
எதிலர் - அன்னியர்	எவன் - என்

13. 'கண்ணிற்சொலிச் செவியின்' என்னும் பாட்டு.

வயம் படை ஆண் அல்லவர்க்கு என் பயக்கும்? (அது போல) கண்ணில் சொல்லி செவியின் நோக்கும் இறை மாட்சி புண்ணியத்தின் பாலதே ஆயினும் தண் அளியால் மன்பதை ஓம்பாதார்க்கு என் ஆம்?

மாட்சி - பெருமை
அளி - கிருபை
மன்பதை - உயிர்கள்
வயம் - வெற்றி

14. 'முடிப்ப முடித்து' என்னும் பாட்டு.

முடிப்ப முடித்து பின் பூசுவ பூசி, உடுப்ப உடுத்து உண்ப உண்ணு இடித்து இடித்து கட்டுரை கூறின் செவி கொளா கண்விழியா நெடுமை உயிர்ப்போடு உற்ற பிணம்.

இடித்திடித்து - நெருக்கி நெருக்கி
கட்டுரை - உறுதிச்சொல்
உயிர்ப்பு - சுவாசம், மூச்சு
செவி கொளா - காதில் ஏற்க மாட்டா

15. 'கண்கூடாய் பட்டது' என்னும் பாட்டு.

கண்கூடாக பட்டது கேடு எனினும் கீழ்மை மக்கட்கு உண்டோ உணர்ச்சி, மற்று இல் ஆகும், மண்டு எரி தான் வாய் மடுப்பினும் மாசுணம் கண் துயில்வ, பெரும் மூச்சு எரிந்து போா.

கண்கூடு - வெளிப்படை
மண்டு - நெருங்கிய
மாசுணம் - பாம்பு
துயில்வ - தூங்குவ

16. 'நட்பு பிரித்தல்' என்னும் பாட்டு.

நட்பு பிரித்தல், பகை நட்டல், ஒற்று இகழ்தல், பக்கத்தார் யாரையும் ஐயுறுதல், தக்கார் நெடுமொழி கோறல், குணம் பிறிது ஆதல், கெடுவது காட்டும் குறி.

நட்டல் - நேசித்தல்
ஒற்று - தூதுவர்
ஐயுறுதல் - சந்தேகித்தல்
நெடுமொழி கோறல் - உறுதியான சொற்களை யழித்தல்
பிறிது - வேறு

17. 'கண்ணோக் கரும்பா' என்னும் பாட்டு.

கண்ணோக்கு அரும்பு ஆக, நகை முகமே நாள் மலர் ஆக, இன் மொழியின் வாய்மையே தீம் காய் ஆக, வண்மை பலம் ஆக, நலம் கனிந்த பண்பு உடையார் அன்றே, சலியாத கற்ப தரு.

வாய்மை - உண்மை	நலம் கனிந்த - நன்மை மிகுந்த
வண்மை - ஈகை (கொடுத்தல்)	பண்பு - குணம்
பலம் - பழம்	சலியாத - சோர்வடையாத

18. 'வாங்குங் கவளத்து' என்னும் பாட்டு.

வாங்கும் கவளத்து ஒன்று சிறிது வாய் தப்பின் தூங்கும் களிறோ துயர் உறா; ஆங்கு அது கொண்டு ஊரும் எறும்பு இங்கு ஆரும் கிளையோடு அயின்று, ஒன்று கோடி உய்யும் ஆல்.

கவளம் - வாயளவு கொண்ட [உணவு	ஊரும் - நகரும்
தூங்கும் - அசையும்	அயின்று - தின்று

19. 'மெய்வருத்தம் பாரார்' என்னும் பாட்டு.

மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவர் எவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார், கருமமே கண் ஆயினார்.

கண் துஞ்சார் - உறங்கார்	கண்ணாயினார் - கருத்துடைய [வர்
செவ்வி - காலம்	பாரார் - கவனியார்

20. 'சிறிய பகையெனினும்' என்னும் பாட்டு.

சிறிய பகை எனினும் ஓம்புதல் தேற்றார், பெரிதும் பிழைபாடு உடையார், நிறை கயம் ஆழ் நீர் மடுவில் தவளை குதிப்பினும், யானை நிழல் காண்பு அரிது.

ஓம்புதல் - பாதுகாத்தல்	கயம் - குளம்
தேற்றார் - தெளியாதவர்	காண்பு - காணுதல்

21. 'புறநட் டகம்வேர்ப்பார்' என்னும் பாட்டு.

புறம் நட்டு அகம் வேர்ப்பார் நஞ்சு பகைமை வெளி யிட்டு வேறு ஆதல் வேண்டும், கழி பெருமை கண்ணோட்டம் செய்யார், கருவி இட்டு ஆற்றுவார், புண் வைத்து பொதிந்து மூடார்.

நட்டு - நேசித்து
வேர்ப்பார் - புழுங்குவார்
கருவி - ஆயுதம்
பொதிந்து - மூடி

22. 'இனியவ ரென்சொலினும்' என்னும் பாட்டு.

இனியவர் என் சொலினும் இனிமை சொல்லே, இன்னார் கனியும் மொழியும் கடுவே, அனல் கொளுந்தும் வெங்காரம் வெய்து எனினும் நோய்தீர்க்கும், மெய் பொடிப்ப சிங்கி குளிர்ந்தும் கொல்லும்.

கடு - விஷம்
வெங்காரம் - காரச்சீலை
பொடிப்ப - சிலிர்க்க
சிங்கி - விஷம்.

23. 'நல்லா றொழுக்கின்' என்னும் பாட்டு.

நன்மை ஆறு ஒழுக்கின் தலை நின்றார் நல்கூர்ந்தும், அல்லன செய்தற்கு ஒருப்படார், பல் பொறிய செம்மை கண் புலியேறு அற பசித்தும் பசுமை கண் புனத்த பைங்கூழ் தின்னு ஆம்.

ஒருப்படார் - சம்மதியார்
அற - மிகுதியாக
புனம் - கொல்லை
பைங்கூழ் - பயிர்

24. 'வள்ளன்மை யில்லாதான்' என்னும் பாட்டு.

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின், மற்றையோன் நல்குரவு ஏ போலும் நனி நல்ல, கொன்னே அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று பலரால் இகழப்படான்.

வள்ளன்மை - ஈகைத்தன்மை
கண்ணறையன் - தாக்ஷிண்யம் அற்றவன்

25. 'பகையின்றி பல்லார்' என்னும் பாட்டு.

பகை இன்று பல்லார் பழி எடுத்து ஓதி, நகை ஒன்றே நன்மை பயன் ஆக கொள்வான் பயம் இன்று மெய் விதிர்ப்பு காண்பான், கொடிறு உடைத்து கொல்வான் போல், கை விதிர்ப்பு அஞ்சப்படும்.

விதிர்ப்பு - நடுக்கம் | கொடிறு - கன்னம்

26. 'தெய்வ முளதென்பார்' என்னும் பாட்டு.

தெய்வம் உளது என்பார் தீய செய்ய புகின், தெய்வமே கண் இன்று நின்று ஒறுக்கும், தெய்வம் இலது என்பார்க்கு இல்லை, தம் இனிமை புதல்வர்க்கு அன்றே பலகாலும் பயன் சொல்வார்.

கண்ணின்று - தாக்ஷிணியம் இல்லாமல் | ஒறுக்கும் - வருத்தும்

27. 'தீயசெயல் செய்வார்' என்னும் பாட்டு.

தீய செயல் செய்வார் ஆக்கம் பெருகினும், தீயன தீயனவே வேறு அல்ல; தீயன நல்லன ஆகா ஆம். நா இன்பு உற நக்கி கொல்லும் கவயமா போல்.

நக்கி - நாவினால் நக்கி | கவயமா - காட்டுப்பசு

28. 'வஞ்சித் தொழுகும்' என்னும் பாட்டு.

வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள், யாவரையும் வஞ்சித்தோம் என்று மகிழன்மின், வஞ்சித்த எங்கும் உளன் ஒருவன் காணும் கொல் என்று அஞ்சி அங்கம் குலைவது அறிவு.

மதியிலிகாள் - அறிவற்றவர்களே | வஞ்சித்த - வஞ்சித்தவைகளை
குலைவது - நடுங்குவது

29. 'மறைவழிப் பட்ட' என்னும் பாட்டு.

மறைவழி பட்ட பழிமொழி தெய்வம் பறை அறைந்தாங்கு ஓடி பரக்கும், கழி முடை புன்மை புலால் நாற்றம் புறம் பொதிந்து மூடினும் சென்று சேயார் முகத்து உதைக்கும்.

உதைக்கும் - தாக்கும், வீசும் | சேயார் - தூரத்திலிருப்பவர்

30. ‘குலமகட்குத் தெய்வம்’ என்னும் பாட்டு.

குலமகட்கு தெய்வம் கொழுநனே, மன்ற புதல்வர்க்கு தந்தையும் தாயும், அறிவோர்க்கு அடிகளே தெய்வம், அனைவோர்க்கும் தெய்வம் இலைமுகம் பசுமை பூண் இறை.

குலமகள் - பதிவிரதை
கொழுநன் - கணவன்
புதல்வர் - பிள்ளைகள்
அறவோர் - துறவிகள்

அடிகள் - ஆசாரியர்
இலைமுகம் - இலைபோன்ற
பூண் - ஆபரணம்.
இறை - அரசன்

180860

The End.

Printed at the ‘Caxton Press’, Madras — 1923.

ஸி. குமாரஸாமி நாயுடு ஸன்ஸ்

பாட புத்தகங்கள்

	ரூ.	அ.	பை
முதல் பாட புத்தகம்	0	3	0
இரண்டாம் பாட புத்தகம்	0	3	6
மூன்றாம் பாட புத்தகம்	0	4	0
நான்காம் பாட புத்தகம்	0	6	0
ஐந்தாம் பாட புத்தகம்	0	7	0
ஆறாம் பாட புத்தகம்	0	7	0
ஏழாம் பாட புத்தகம்	0	8	0
எட்டாம் பாட புத்தகம்	0	10	0

திராவிட வாசகங்கள்

திராவிட பால பாடம்	0	2	0
முதல் திராவிட வாசகம்	0	3	0
இரண்டாம் திராவிட வாசகம்	0	3	6
மூன்றாம் திராவிட வாசகம்	0	4	0
நான்காம் திராவிட வாசகம்	0	6	0

நூதன வாசக புஸ்தகங்கள்

நூதன முதல் வாசக புஸ்தகம்	0	3	0
நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ...	0	3	6
நூதன மூன்றாம் வாசக புஸ்தகம்.... ...	0	4	0
நூதன நான்காம் வாசக புஸ்தகம் ...	0	6	0

கணித புத்தகங்கள்

புதிச் சட்டக் கணிதம் 1-2-ஆம் வகுப்பு ...	0	3	0
புதிச் சட்டக் கணிதம் 3-ஆம் வகுப்பு ...	0	6	0
புதிச் சட்டக் கணிதம் 4-ஆம் வகுப்பு ...	0	7	0

Caxton Press, Madras.